உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
விலை - 20
பக்கங்கள்: 28
சுடர் 32 | கதிர் 241 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆடி 09 செவ்வாய்க்கிழமை 25.07.2017

## பொறுப்புக் கூறல் மிக அவசியமானது

*இலங்கையிடம் மீண்டும் கனடா அரசு வலியுறுத்தல்*



கொழும்பு,ஜூலை25
போரினால் பாதிக் கப்பட்ட மக்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப இலங் கையில் பொறுப்புக் கூறல் >> 06

*வித்தியா படுகொலை வழக்கு:*

# பகுப்பாய்வுக்குட்படுத்தும் வகையில் சான்றுப்பொருள்கள் இருக்கவில்லை

*அரச இரசாயனப் பகுப்பாய்வு அதிகாரி தீர்ப்பாயத்திடம் சாட்சியம்*

யாழ்ப்பாணம், ஜூலை 25
"குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் ஒப்ப டைக்கப்பட்ட மாணவியின் உடலிலிருந்து மீட்கப்பட்ட சான்றுப்பொருள்கள் பகுப்பாய் வுக்குட்படுத்தும் வகையில் >> 25

## தீர்ப்பாயத்தின் அமர்வு நாளை இடம்பெறாது

யாழ்ப்பாணம், ஜூலை 24
தீர்ப்பாயத்தின் நீதிபதிகளில் ஒருவரான >> 25

*மணல் அகழ்வோரைப் பிடிப்பதற்காக*

# அதிரடிப் படை வான் நோக்கிச் சூடு தப்பிக்க ஆற்றில் பாய்ந்தவர் சாவு

*மக்கள் பொலிஸார் இடையே மோதல்*
*மட்டு. கரடியனாறில் பெரும் பதற்றம்*



மட்டக்களப்பு, ஜூலை 25
மணல் அகழ்ந்து கொண்டிருந்தவர்க ளைப் பிடிப்பதற்காக சிறப்பு அதிரடிப் படையினர் சூடு நடத்தினர். அவர்களி டம் இருந்து தப்பிப்பதற்காக் ஆற்றில் பாய்ந்த ஒருவர் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்று மதியம் மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் பிரி >> 06

## பெற்றோலிய கூட்டுத்தாபன ஊழியர்கள் புறக்கணிப்பில்

யாழ், ஜூலை 25
பெற்றோலியக் கூட் டுத்தாபனத்தின் தொழிற்சங்கங்கள் நள்ளிரவு தொடக்கம் பணிப்புறக் >> 06

## மருத்துவர்கள் இன்று பணிப் புறக்கணிப்பு

யாழ், ஜூலை 25
"எமது கோரிக்கைக ளுக்கு அரசிடமி ருந்து >> 06

## முகாமையாளர் மீது தாக்குதல்

வவுனியா, ஜூலை 25
விடுதி ஒன்றுக்குள் புகுந்த இனந் >> 06

# இடைக்கால அறிக்கையை நாடாளுமன்றுக்கு முன்வைப்பதில் இழுபறி நீடிப்பு

*சுதந்திரக் கட்சியின் செயற்பாடே காரணமெனக் குற்றச்சாட்டு*

யாழ்ப்பாணம், ஜூலை 25
வழிநடத்தல் குழுவின் இன்றைய கூட்டத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமை தொடர்பான தனது மாற்று யோசனையை - திட்டத்தை முன்வைக்க மாட்டாது என்று நம்பகரமாகத் தெரியவரு >> 06

## தனியார் பேருந்து சாரதிகளுக்கிடையே வவுனியாவில் மோதல்

வவுனியா, ஜூலை 25
வடக்கு மாகாண தனியார் பேருந்து கள் நேற்றையதினம் பணிப்புறக்கணிப் பில் ஈடுபட்டிருந்த நிலையில், கொழும் பிலிருந்து யாழ்ப்பாணம் >> 04

## வடமராட்சி துப்பாக்கிச் சூடு பொலிஸாரின் மறியல் நீடிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 25
வடமராட்சி கிழக்கில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டமை தொடர்பாகக் கைது செய்யப்பட்ட >> 06

*வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றக் கோரி*

## மைத்திரிக்கு சம்பந்தன் நினைவூட்டல் கடிதம்

யாழ்ப்பாணம், ஜூலை 25
முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பா பிலவில் காணிகள் விடுவிக்கப்படும் என்று ஒரு மாதத்துக்கு முன்னர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வழங்கிய வாக்குறுதியை மீளவும் அவருக்கு நினைவூட்டிய >> 06

## பளையில் வீடு புகுந்து 12 பவுண் நகைகள் திருட்டு

கிளிநொச்சி, ஜூலை 25
பளை தர்மக்கேணி சின்னத்தாளைய டியில் வீடு புகுந்து 11 லட்சத்து 70 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளதாகப் பளைப் பொலி ஸார் தெரிவித்தனர். >> 06

## துப்பாக்கி சூட்டைக் கண்டித்து வடக்கு, கிழக்கில் கவனவீர்ப்பு



விரிவு 2 ஆம், 3ஆம் பக்கங்களில்

## நீதிபதி மீது சூடு நடத்தியவர் குடாநாட்டைவிட்டு தப்பிப்பு

*அவரைத் தேடி 2 பொலிஸ் குழுக்கள் விரைவு*

யாழ்ப்பாணம், ஜூலை 25
நீதிபதி மா.இளஞ்செழியனை இலக்கு வைத்த துப்பாக் கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய முதன்மைச் சந்தேகநபர் யாழ்ப்பாண மாவட்டத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளதாகப் பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரி விக்கின்றன. தப்பிச் சென்ற சந்தேகநபரைக் கைது செய்வதற்கு இரண்டு சிறப்புப் பொலிஸ் குழுக்கள் விரைந்துள்ளதாகவும் விரைவில் அவர் >> 04

## நீதிபதிக்கு அதிதிகள் பாதுகாப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 25
யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ் செழியனுக்கு அதிதிகளுக்கு வழங்கப் படும் >> 06

## இளைஞர் மீது கத்தியால் குத்திவிட்டுத் தப்பித்தவர் நடுக்கடலில் சிக்கினார்



முல்லைத்தீவு, ஜூலை 25
முல்லைத்தீவு முகத்துவாரம், கொக்கிளாய் பகுதியில் இளை ஞர் மீது கத்தி குத்துத் தாக்கு தலை மேற்கொண்டவர் தப் பிச் செல்ல முற்பட்ட >> 04

*நீதிபதி மீதான தாக்குதலைக் கண்டித்து*

## கிளிநொச்சி சந்தையில் இன்று கடையடைப்பு

*உயிர் நீத்த பொலிஸாருக்கும் அஞ்சலி*

கிளிநொச்சி, ஜூலை 25
யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ் செழியன் மீதான தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து இன்று கிளிநொச்சி >> 25

## ஹேமச்சந்திரவுக்கு நேற்று பல இடங்களில் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூலை 25
யாழ்ப்பணம், நல்லூரில் நடத்தப்பட்ட துப் பாக்கிச் சூட்டில் உயிரிழந்த உப பொலிஸ் பரிசோதகர் ஹேமச்சந்திரவுக்கு வடக்கில் பல இடங்களில் அஞ்சலி செலுத்தப்பட்டது.
யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்திலும், கவ னவீர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்ட இடங்களிலும் அஞ்சலி செலுத்தும் நிகழ்வு கள் நடைபெற்றன.

விரிவு 2 ஆம், 3ஆம் பக்கங்களில்

*நீதிபதி மீது சூடு:*

## புலிகள் உருவான காலத்தை நினைத்துப் பார்க்கவேண்டும்

*அரசுக்கு மகிந்த எச்சரிக்கை*

கொழும்பு, ஜூலை 25
"நல்லூரில் நீதிபதி மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் அரசு ஆழமாக சிந்தித்துச் செயற்படவேண்டும். விடுதலைப் புலிகள் அமைப்பு உருவாகும் காலப்பகுதியில் இவ்வாறான சம்பவங்களே வடக்கில் இடம் பெற்றன"
இவ்வாறு முன்னாள் அரச தலைவர் >> 06

## நீதிபதியின் அழுகையால் நெகிழ்ந்தார் அமெ. தூதுவர்

கொழும்பு, ஜூலை 25
தனது மெய்ப்பாதுகாவலராக இருந்து உயிரிழந்த பொலிஸ் அதிகாரியின் மனைவியின் காலில் நீதிபதி மா.இளஞ் செழியன் வீழ்ந்து கதறியழுத சம்பவத் தைக் கண்டு, 'ஆழமாக நெகிழ்ந்தேன்' என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் குறிப்பிட்டுள்ளார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவம னையில் நேற்று முன்தினம் >> 06


## பொய் கூறி உண்மையை மூடி மறைக்கவேண்டாம்

*ஹேமச்சந்திரவின் உறவினர்கள் வேண்டுகோள்*

கொழும்பு, ஜூலை 25
பொய்களைக் கூறி உண்மையை மூடி மறைக்கவேண்டாம். இவ்வாறு உயிரிழந்த பொலிஸ் அதிகாரி ஹேமச்சந்திரவின் உறவி னர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். நல்லூரில் கடந்த சனிக்கிழமை >> 06

newuthayan.com
ஒலி, ஒலி வடிவத் தகவல்களுடன்
உதயன் DIGITAL newuthayan.com
24 மணிநேரப் பதிவேற்றம்

மேலதிக ஒளிப்படங்களும், காணொலிகளும்
- newuthayan.com



யாழ்ப்பாணம்முச்சக்கரவண்டித்தரிப்பிடத்தில்கறுப்புக் கொடிகள்கட்டப்பட்டுஉயிரிழந்தபொலிஸ்உத்தியோகத் தருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. அஞ்சலி பதாகைக ளும் கட்டப்பட்டிருந்தன.

# நல்லூரில் நேற்று அஞ்சலி





கடந்தசனிக்கிழமைநடத்தப்பட்டதுப்பாக் கிச்சூட்டில் உயிரிழந்த உதவிப் பொலிஸ் பரிசோதகர் ஹேமச்சந்திரவுக்கு நேற்று நல்லூரில் அஞ்சலி செலுத்தப்பட்டது. நல் லூர் ஆலயப் பின் வீதியில் நடைபெற்ற அஞ்சலிநிகழ்வில்50க்கும்மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

கற்பூரம் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப் பட்டது.

கடந்தசனிக்கிழமைநடத்தப்பட்டதுப்பாக் கிச்சூட்டில்யாழ்ப்பாணம்மேல்நீதிமன்ற நீதிபதியின் மெய்ப்பாதுகாவலரான ஹேமச்சந்திர படுகாயமடைந்தார். சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந் தார். (ந-8)

# யாழ். பல்கலைக் கழகத்தில் ஹேமச்சந்திரவுக்கு அஞ்சலி



யாழ்ப்பாணம், ஜூலை 25
யாழ்ப்பாணம், நல்லூரில் இடமபெற்றதுப்பாக்கிசூட்டுச் சம்பவத்தில்உயிரிழந்தஉப பொலிஸ் பரிசோதகர் ஹேமச்சந்திரவுக்கு யாழ். பல்கலைக் கழகத்தில் அஞ் சலிசெலுத்தப்பட்டது.

பல்கலைக் கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்ற அஞ்சலி நிகழ் வில் ஹேமச்சந்திரவின் படத்துக்குமலர்தூவி, மெழு குவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. பல்கலைக் கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள் அஞ்சலி செலுத்தினர். கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நீதிபதியை இலக்கு வைத்து நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை வன் மையாகக் கண்டிக்கின் றோம் என்றும், மெய்ப்பாது காவலரின் குடும்பத்தின ருக்கு ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவிப்பதாகவும் மாணவர்கள் அறிக்கை விடுத்துள்ளனர். (ந-ஜ-10,102)

# திணைக்கள அலுவலர்களும் அரைமணி நேர பணிப்புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 25
யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ் செழியனை இலக்கு வைத்து மேற் கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து, வடக்கு மாகாண பிரதம செயலக அலுவலகத்துக்கு உட்பட்ட அனைத்துத் திணைக்கள அலுவலர்க ளும் ஒன்றிணைந்து நேற்றுக் கண் டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



வடக்கு மாகாண பிரதம செயலகத் துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப் பட்டது. "நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதுகாப்போம், கடமையின் போது உயிரிழந்த ஹேமச்சந்திரவின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திப்போம்" என்பன போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதா கைகளை ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ஏந்தியிருந்தனர். ஆர்ப்பாட்டம் அரை மணிநேரம் இடம் பெற்றது. (ந-ஜ-101)

# யாழ். மாவட்ட செயலகம் முன்பாகக் கவனவீர்ப்பு




யாழ்ப்பாணம், ஜூலை 25
யாழ்ப்பாணம் மேல் நீதி மன்றநீதிபதிமா. இளஞ்செழி யனை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக் கிச் சூட்டைக் கண்டித்து யாழ். மாவட்ட ச்செயலக உத்தியோகத்தர்கள் நேற்று கவனவீர்ப்புப் போராட்டத் தில் ஈடுபட்டனர்.

"அரச அலுவலர்களின் உயி ருக்கு உத்தரவாதம் வேண் டும், அர்ப்பணிப்பான சேவைக்கு வெகுமதி துப் பாக்கி சூடா, நீதிக்கே இன்று நிர்க்கதிநிலைமை" போன்ற வாசகங்கள்எழுதப்பட்டபதா கைகளைத் தாங்கியவாறு ஆர்ப்பாட்டம்நடத்தப்பட்டது. (ந-ஜ-10,8)

# யாழ். பேருந்துநிலையம் முன்பாகவும் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 25
யாழ்ப்பாணம் மேல் நீதி மன்ற நீதிபதி மா. இளஞ்செ ழியனை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக் கிச் சூட்டைக் கண்டித்து சமூக ஆர்வலர்கள் நேற்று கவனவீர்ப்புப் போராட்டத் தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டம் யாழ். பேருந்து நிலையத்துக்கு முன்பாக நடத்தப்பட்டது. துப்பாக்கிச் சூட்டில் உயிரி ழந்த பொலிஸ் உத்தியோ கத்தருக்குஅஞ்சலிசெலுத்தி னர். (ந-ஜ-10,8)




மட்டக்களப்பு


முல்லைத்தீவு

# யாழ். நல்லூர் துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்து

## வடக்கு, கிழக்கு சட்டத்தரணிகள் நேற்றுச் சேவைப் புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 25

யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியனை இலக்கு வைத்து நடத்தப்பட்டது என்று கூறப்படும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்குக் கண்டனம் தெரிவித்து வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த சட்டத்தரணிகள் நேற்று சேவைப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், சாவகச்சேரி, பருத்தித்துறை, மன்னார், வவுனியா, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய நீதிமன்றங்களின் சட்டத்தரணிகளும், கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, கல்முனை, மட்டக்களப்பு நீதிமன்றங்களின் சட்டத்தரணிகளும் சேவைப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

**சாவகச்சேரி**

சாவகச்சேரி சட்டத்தரணிகள் நீதிமன்ற வளாகத்துக்கு முன்னால் ஒன்று கூடி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். நீதிமன்ற நடவடிக்கைகள் இடம்பெற்ற போதும் வழக்குகள் யாவும் வேறு திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டன.

“இந்தத் தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கின்றோம். உரிய விசாரணைகளை மேற்கொண்டு, குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும்” என்று சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

**பருத்தித்துறை**

பருத்தித்துறை நீதிமன்றச் சட்டத்தரணிகளும் சேவைப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர். நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் எதுவும் இடம் பெறவில்லை. நேற்றைய வழக்குகள் யாவும் பிறிதொரு திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டன.

**முல்லைத்தீவு**

சட்டத்தரணிகளின் சேவைப் புறக்கணிப்பால் முல்லைத்தீவு நீதிமன்றச் செயற்பாடுகள் நடைபெறவில்லை. “யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியனை இலக்கு வைத்து இனந்தெரியாத நபர்களால் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கொலை முயற்சித் தாக்குதல் தொடர்பில் உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்” என்று சட்டத்தரணிகள் வலியுறுத்தினார்.

**கிளிநொச்சி**

கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றச் சட்டத்தரணிகளும் சேவைப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர். “உண்மையான தாக்குதலாளிகளைக் கைது செய்து நீதியின் முன் நிறுத்த பொலிஸார் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் ” என்று அவர்கள் வலியுறுத்தினர்.

**மன்னார்**

மன்னார் மாவட்ட நீதிமன்ற சட்டத்தரணிகளும் சேவைகளைப் புறக்கணித்தனர். “யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டு சம்பவம் ஏற்றுக்கொள்ள முடியாததொன்று. இந்தச் சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம். நீதித்துறைக்கு ஏற்பட்டுள்ள சவாலாகவும், சுதந்திரமான நீதித்துறையை நடத்த விடாமல் தடுக்கின்ற ஒரு நிகழ்வாகவும் நாங்கள் பார்க்கின்றோம். யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் மிகவும் துணிச்சல் மிக்க ஒரு நீதிபதியாகக் கடமையாற்றுகின்றார். அவர் மீது மேற்கொள்ளப்பட்ட துன்பகரமான சம்பவம் ஏன் மேற்கொள்ளப்பட்டது என்பது தொடர்பில் உரிய முறையில் கண்டு பிடிக்கப்பட வேண்டியது நீதித்துறை, சட்டத்துறை மற்றும் அரசினதும் கடமையாகும்.” என்று சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.


திருகோணமலை

**வவுனியா**

வவுனியா மாவட்ட நீதிமன்ற சட்டத்தரணிகள் நீதிமன்றத்தின் பின் வாயிலில் கவனவீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த மெய்ப் பாதுகாவலரான உப பொலிஸ் பரிசோதகர் ஹேமச்சந்திரவின் ஆத்ம சாந்திக்காக 2 நிமிடங்கள் அஞ்சலி செலுத்தப்பட்டது.

நீதிமன்ற வாளாகத்தில் ஒன்று திரண்ட சட்டத்தரணிகள் கறுப்பு துணிகளால் வாயைக் கட்டி கவன வீர்ப்புப் போராட்டத்தை நடத்தினர்.

“நீதிபதியின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். நடந்த துப்பாக்கி சூட்டுச் சம்பவம் தொடர்பாக பக்கச் சார்பின்றி விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். சரியான விசாரணை செய்து முடிவை வெளியிட வேண்டும் ” என்று அவர்கள் வலியுறுத்தினர். இது தொடர்பான கண்டன அறிக்கை ஒன்றையும் அவர்கள் வெளியிட்டனர்.


சாவகச்சேரி


வவுனியா

**திருகோணமலை**

திருகோணமலை மாவட்ட சட்டத்தரணிகள் திருகோணமலை நீதிமன்ற வளாகத்துக்கு முன்பாக கண்டனப் போராட்டம் நடத்தினர்.

“யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற மாணவி வித்தியாவின் படுகொலை வழக்கை பன்னாடுகள் அவதானித்துக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் நீதியை நிலைநாட்ட பாடுபடும் நீதிபதிக்கு அச்சுறுத்தல் விளைவிக்கும் செயலாகவே இதை நாம் கருதுகின்றோம். தனது உடலில் துப்பாக்கிக் குண்டுகளை ஏற்று நீதிபதியைக் காப்பாற்றி வீரச்சாவு அடைந்த மெய் பாதுகாப்பாளருக்கும் அவர்களுடைய குடும்பத்தாருக்கும் திருகோணமலை சட்டத்தரணிகள் சார்பான ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்” என்று போராட்டத்தில் கலந்து கொண்ட சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

**கல்முனை**

கல்முனை நீதிமன்றங்களில் பணியாற்றும் சட்டத்தரணிகள் அனைவரும் நேற்று சேவைப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். கல்முனை நீதிவான் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம் மற்றும் மேல் நீதிமன்றம் என்பன வெறிச்சோடி காணப்பட்டன.

கல்முனை நீதிமன்ற வளாகத்தில் ஒன்று கூடிய சட்டத்தரணிகள் சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து கண்டனத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினர். சம்பவத்தில் உயிரிழந்த மெய்ப்பாதுகாவலர் ஹேமசந்திரவுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

“சம்பவத்தின் சூத்திரதாரிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கப்பட வேண்டும். நீதித்துறை மீதான அச்சுறுத்தல்களைப் போக்கி, சட்டம், ஒழுங்கை ஸ்திரப்படுத்துவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் ” என்ற கோரிக்கையுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**மட்டக்களப்பு**

மட்டக்களப்பு நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்கு முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

“நீதித்துறை எந்தத் தலையீடும் இல்லாமல் சுதந்திரமாக நியாயமாக செயற்படுவதற்கு எதிராக வரும் அனைத்து தலையீடுகளையும் எதிர்கொண்டு அதற்கு எதிராகப் போராட வேண்டும்.

யாழ்.மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி மீதான தாக்குதலை வன்மையாகக் கண்டிப்பதுடன் இதன் சூத்திரதாரிகள் கண்டறியப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.” என்று மட்டக்களப்பு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் கே.நாராயணன் பிள்ளை தெரிவித்தார்.

**பின்னணி**

யாழ். நல்லூர் ஆலயப் பின் வீதியில் கடந்த சனிக்கிழமை மாலை யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியனின் வாகனத்தை இடைமறித்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

அதில் நீதிபதியின் மெய்ப் பாதுகாவலரான பொலிஸ் உப பரிசோதகர் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றுமொருவர் காயமடைந்தார்.


(ந.ஜ.10,6,9,40,56,173,402)


# தனியார் பேருந்துச் சேவைகள் வடக்கில் முற்றாக முடங்கின

## துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தைக் கண்டித்து

யாழ்ப்பாணம், ஜூலை 25

யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியனை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்து வடக்கு மாகாண தனியார் பஸ் உரிமையாளர்களும், யாழ். மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கத்தினரும் சேவைப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.





யாழ்ப்பாணம் உட்பட வடக்கின் ஏனைய மாவட்டங்களிலும் தனியார் பேருந்துகள் எவையும் சேவையில் ஈடுபடவில்லை. அதனால் பயணிகள் இடர்களை எதிர்கொண்டனர். பேருந்துத் தரிப்பிடங்கள் வெறிச்சோடிக் காணப்பட்டன.

“நீதிபதி மா.இளஞ்செழியன் மீதான துப்பாக்கிச் சூடானது மிலேச்சத்தனமான செயற்பாடாகும். கூட்டாட்சியில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுவதை நாம் கண்டிக்கின்றோம். நீதித்துறைக்கே இந்த நாட்டில் பாதுகாப்பு இல்லையாயின் சாதாரண பொதுமக்களின் நிலை என்ன என்று சிந்திக்கத் தலைப்பட்டுள்ளோம். நீதிபதி மீதான தாக்குதலானது இலங்கை நீதித்துறைக்கு விடுக்கப்பட்டுள்ள பெரிய அச்சுறுத்தலாகும்” என்று வடக்கு மாகாண தனியார் பேருந்து உரிமையாளர்கள் தெரிவித்தனர்.



அதேவேளை முச்சக்கர வண்டித் தரிப்பிடங்களில் கறுப்புக் கொடிகளைக் கட்டிச் சாரதிகள் தமது கண்டனத்தைத் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த பொலிஸ் பாதுகாப்பு அதிகாரிக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்து பதாகைகளையும் தொங்கவிட்டிருந்தனர்.

பாடசாலை மாணவர்களின் பரீட்சைக் காலத்தைக் கருத்திற் கொண்டு இலங்கைப் போக்குவரத்து சபை பேருந்துகள் சேவையில் ஈடுபட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

(ந-ஜ.10,9,8,173)


# டெங்குநோயால் கர்ப்பிணியின் வயிற்றிலிருந்த சிசு உயிரிழப்பு

*மறுநாள் தாயும் சாவு*

டெங்கு நோயால் பீடிக்கப்பட்டு ராஜகிரிய காசல் பெண்கள் வைத்தியசாலையில் மூன்று நாட்கள் தொடர்ந்து சிகிச்சைபெற்றுவந்த கர்ப்பிணியின் கர்ப்பப்பைக்குள்ளேயே எட்டு மாத சிசு உயிரிழந்ததுடன், அந்த சிசு சத்திரசிகிச்சையால் அகற்றப்பட்ட மறுநாள் தாயும் உயிரிழந்திருக்கின்றார் என காசல் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (த)

## மரண அறிவித்தல்

### அந்தோனிப்பிள்ளை ஜெயபாரதிதேவி



பிறப்பு 10.06.1952 இறப்பு 24.07.2017

சேவில் ஒழுங்கை, தும்பளை மேற்கு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை ஜெயபாரதிதேவி நேற்று (24.07.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளையின் (CTB நடத்துநர்) பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான கதிர்காமு தம்பதியரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான ஜோர்ஜ் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான மனோராம்பிள்ளை Dr. பரிமேலழகர் (யாழ். போதனா வைத்தியசாலை) மற்றும் திருமதி இலட்சுமிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் யசிக்கா (ஆசிரியர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி) Dr.யசிந்தா (யாழ். போதனா வைத்தியசாலை), யசிந்தன் (ஆசிரியர், யா/வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம்) ஜோன்சன் (MAS ACTIVE OPERATION EXECUTIVE) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பிரகலாதன் (ஆசிரியர், யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி) இன் அன்பு மாமியும் அத்மிகனின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.07.2017) செவ்வாய்க் கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**சேவில் ஒழுங்கை,**
**தும்பளை மேற்கு, பருத்தித்துறை.**
**077 912 3895, 077 220 8245, 077 2610395**

# பொலிஸ்தரப்பின் அவசர செய்தியை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது

*நீதிபதி மீதான சூடு குறித்து மாவை எம்.பி அறிக்கை*

யாழ்ப்பாணம், ஜூலை 25

"நீதிபதி இளஞ்செழியனையே குறிவைத்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. அவரின் உயிரைப் பாதுகாக்க உடன் செயற்பட்ட காவலர்களில் ஒருவர் உயிரிழந்தும் இன்னொருவர்படுகாயமடைந்தும்அவலநிலையடைந்திருப்பது அனைவருக்கும் வேதனையையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. அதன் விளைவாக நீதிகோரி கண்டனங்கள், பணிப்புறக்கணிப்புகள் எனும் மக்கள் எழுச்சி ஏற்பட்டுள்ளது.

இந்தக் 'கொலைமுயற்சியில்இலக்கு நீதிபதிஇளஞ்செழியன்அல்ல' என்ற பொலிஸாரின் அவசர செய்தியை ஏற்றுக் கொள்ள முடியாது"

இவ்வாறுதமிழரசுக்கட்சியின்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சோ. சேனாதிராசா தெரிவித்தார்.

யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் மீது கடந்த சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாகஅவரால்அனுப்பிவைக்கப்பட்ட செய்திக்குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியனைக் குறிவைத்து நல்லூரில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு தொடர்பில் தொடர்ந்து நீதிக்காகக் குரல் எழுப்பும் அனைத்துத் தரப்பினராலும் கண்டனம் வெளியிடப்பட்டு வருவதும், உண்மை கண்டறியப்பட்டுக் குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதற்கும் மேலாக எதிர்வரும் காலங்களில் இவ்வாறானவன்முறைகளும்இடம் பெறக் கூடாது என்றும் குரலெழுப்பி வருவது வரவேற்கப்பட வேண்டும். அண்மைக்காலங்கள்தமிழ்ப்பிரதேசங்களில் இடம்பெற்று வரும் குற்றச் செயல்களுக்கெதிரான பொலிஸாரின் நடவடிக்கைகள் போதுமானதாக இல்லை.

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை விசாரணைகள் தீர்ப்பாயத்தால் முன்னெடுக்கப்படுகின்றன.


இந்த வழக்கில் பொலிஸார் மீது வலுவானகுற்றச்சாட்டுக்களும்எழுந்துள்ளன. நீதிபதி இளஞ்செழியனின் தீர்ப்புக்கள், நடவடிக்கைகளால் குற்றச் செயல்கள் குறைவடைய ஆரம்பித்தன.

இவ்வாறான ஒருவர் மீது இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்பட்டமை வேதனை மிக்கதும் கண்டனத்துக்கும் உரியதாக இருக்கும் போது பொலிஸாரின்அவசரத்தைப்புரிந்து கொள்ள முடியவில்லை. அரசதலைவர், நீதிபதி இளஞ்செழியனுக்கு ஆறுதல் சொல்லி முழுமையான விசாரணைக்குஉத்தரவிட்டுள்ளார். அந்த விசாரணையில் பொலிஸாரின்அவசரச்செய்தியும்விசாரிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றேன் என்றுள்ளது. (வ-21)

## மன்னாரிலிருந்து கடத்திய தங்கக் கட்டிகள் தமிழகத்தில் சிக்கின

சென்னை, ஜூலை 25

மன்னாரிலிருந்து கடல்வழியாகக் கடத்தப்பட்ட 29 கிலோகிராம் தங்கக் கட்டிகள் தமிழகம், இராமநாதபுரம் பகுதியில்நேற்றுகைப்பற்றப்பட்டன. மன்னாரிலிருந்து படகு மூலம் ராமேஸ்வரம் தனுஷ்கோடிக்கு 2 கிலோதங்கக்கட்டிகள்கடத்தப்பட்டுள்ளன. அதனை இராமநாதபுரம் சுங்கத்துறையினர் கைப்பற்றியுள்ளனர். மற்றுமோர் படகின் மூலம் கடத்தப்பட்ட 27 கிலோ தங்கக் கட்டிகள் இராமநாதபுரத்தின் பிறிதொரு பகுதியில் சுங்கத்துறையினர் கைப்பற்றியுள்ளனர்.




இலங்கையிலிருந்து ஒரேநாளில் கடத்தப்பட்ட 29 கிலோ தங்கக் கட்டிகள் இந்திய சுங்கத்துறையினரால் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (வ-101)




## (முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்)

### தனியார்...

நோக்கி வந்த தனியார் பேருந்துச் சாரதி வவுனியா பகுதியில் பிறிதொரு தனியார் பேருந்து சாரதியால் தாக்கப்பட்டுக் காயமடைந்தார்.

இந்தச் சம்பவத்தையடுத்து சாரதிகள் இருவரும் கைது செய்யப்பட்டு வவுனியா பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

"யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தை கண்டித்து வடக்கு மாகாண தனியார் பேருந்து உரிமையாளர்கள் நேற்றையதினம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற தனியார் பேருந்து ஒன்று நேற்று மாலை 6 மணியளவில் வவுனியாவில் முதலாம் குறுக்குத் தெரு பகுதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்துள்ளது. வவுனியாவிலிருந்து சேவையை மேற்கொள்ளும் தனியார் பேருந்துகள் நிறுத்தும் தரிப்பிடம் வெறிச் சோடிக்காணப்பட்டன. எனினும் அந்தப் பகுதியில் கொழும்பிலிருந்து வந்த பேருந்து ஒன்று நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

அந்தப் பேருந்தின் சாரதியான யாழ்ப்பாணம் கொடிகாமம் பகுதியைச் சேர்ந்தவர் மீது வவுனியா கூமாங்குளம் பகுதியைச் சேர்ந்த தனியார் பேருந்தின் சாரதி தாக்குதலில் ஈடுபட்டார்.

இந்த தாக்குதல் சம்பத்தையடுத்து அந்த பகுதி பரபரப்பானது. இதனால் சாரதிகள் இருவரும் கைது செய்யப்பட்டனர். இருவரும் வவுனியா பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-21)

### நீதிபதி மீது...

கைது செய்யப்படுவார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

நீதிபதி மா.இளஞ்செழியனை இலக்கு வைத்து கடந்த சனிக் கிழமை மாலை துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. நீதிபதியின் மெய்ப்பாதுகாவலர் உயிரிழந்தார். சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், முதன்மைச் சந்தேகநபரின் உறவினர்கள் இருவரை அன்றிரவே கைது செய்தனர். அவர்களை பொலிஸ் தடுப்புக் காவலில் இரு நாள்கள் வைத்து விசாரணை செய்ய அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது.

இதேவேளை, முதன்மைச் சந்தேகநபர், 2012 ஆம் ஆண்டு கோப்பாயில் இடம்பெற்ற வாள்வெட்டுக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்றும், இவர் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்த முன்னாள் போராளி என்றும் பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கோப்பாயில் இடம்பெற்ற கொலைச் சம்பவம் தொடர்பில் 9 பேர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டிருந்தனர். அவ்வாறு கைது செய்யப்பட்ட 9 பேரில் தற்போது கைது செய்யப்பட்டு பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள இருவரும் உள்ளடங்குகின்றனர். கோப்பாய்க் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய சந்தேகநபர்கள் பொலிஸ் நிலையத்துக்கு நேற்று அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

நீதிபதி மீதான துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தின் முதன்மைச் சந்தேகநபர் யாழ்ப்பாணத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளதாகவும், அவரைக் கைது செய்வதற்காக இரண்டு பொலிஸ் குழுக்கள் களமிறக்கப்பட்டுள்ளன என்றும் தெரியவருகின்றது. (வ-5,8,26)

### இளைஞர்...

வேளை நடுக்கடலில் வைத்து கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

"முல்லைத்தீவு கொக்கிளாய் பகுதியில் கடற்றொழிலில் ஈடுபடுவர்களுக்கு இடையே நேற்று மாலை மோதல் ஏற்பட்டது. மோதலில் இளைஞரொருவர் மீது மற்றொருவர் கத்தியால் குத்தியுள்ளார். தாக்குதலுக்கு இலக்காகிய 25 வயதான இளைஞர் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் கத்திக்குத்துத் தாக்குதலை மேற்கொண்ட நபர் கடல்வழியாகத் தப்பிச் செல்ல முயற்சித்தார். அவரை மற்றொரு படகில் துரத்திச் சென்ற பொலிஸார் நடுக்கடலில் வைத்து மடக்கிப் பிடித்தனர்.

இந்தச் சம்மபவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர் (வ-21)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பன்னாட்டு ஆய்வு மாநாடு இன்று

## நிபுணர்கள் அறிக்கைகளை முன்வைப்பர்

யாழ்ப்பாணம், ஜூலை 25
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமகால முகாமைத்துவத்துக்கான பன்னாட்டு ஆய்வு மாநாடு யாழ்ப்பாண நகர விடுதியில் இன்று ஆரம்பமாகிறது. இது நாளையும் தொடரவுள்ளது என்று அறிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வு தொடர்பான செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம் சமகால முகாமைத்துவத் துக்கான பன்னாட்டு ஆராய்ச்சி மாநாட்டை கடந்த நான்கு வருடங்களாக நடத்தி வருகின்றது. இந்த வருடத்துக்கான பன்னாட்டு ஆராய்ச்சி மாநாடு இன்றும் நாளையும் யாழ்.நகரில் அமைந்துள்ள கிறீன்கிறாஸ் விடுதியின் மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறும். "சவால்களுக்கு எதிராக நிலைத் திருப்புக் கான உறுதிப்பாட்டைத் தூண்டுதல்" எனும் தொனிப்பொருளில் மாநாடு நடைபெற உள்ளது. இந்த மாநாட்டில் பல்வேறுபட்ட விடயங்களைத் தாங்கி வரும் 102 ஆய்வுக் கட்டுரைகள் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் உள்ள ஆய்வாளர்களால் வாசிக்கப்பட இருக்கின்றன. இவற்றுள் 35 வெளிநாட்டவர்கள் பங்குபற்றுகின்றார்கள்.

இந்த நிகழ்வின் தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பியும், முதன்மை இணைப்பாளர் கலாநிதி திருமதி சிவாணி சண்முகதாஸும் பல்வேறு விரிவுரையாளர்களைக் கொண்ட குழுக்களின் உதவியுடன் ஒழுங்குகளை மேற்கொள்கின்றனர்.

மநாட்டுக்கான முதன்மை விருந்தினராக இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தலைவர் பேராசிரியர் பி.எஸ்.எம்.குணரட்ண வும் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ஆர். விக்னேஸ்வரனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். நிகழ்வுக்கான ஆதாரசுருதி உரையை இலங்கை மத்திய வங்கியின் மூத்த பொருளியலாளர் கலாநிதி திருமதி சுஜித்தா ஜெகஜீவனும், இந்தியாவிலுள்ள சாயிராம் பொறியியல் கல்லூரியின் முகாமைத்துவ கற்கை நெறியின் பணிப்பாளர் பேராசிரியர் கே.மாறனும் ஆற்றவுள்ளனர்.

102 கட்டுரைகளும் 8 முக்கிய தலைப்புக்களுக்குக் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. எட்டுத் தலைப்புகளையும் சார்ந்த சிறப்பு நிபுணர்களால் நிகழ்த்தப்படும் சிறப்பு உரைகளைத் தொடர்ந்து அந்தத் தலைப்புக்கள் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள் வாசிக்கப்படும். மாநாட்டின் தொடக்க நிகழ்வில் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தால் "பன்னாட்டு கணக்கியல் மற்றும் வியாபார நிதி", "வியாபார கற்கைகள்" ஆகிய இரு ஆய்விதழ்களின் பருவ இதழ்களும் வெளியிடப்படவுள்ளன. முதலாம் நாள் நிறைவில் கலாசார நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

இரண்டாம் நாள் தொடக்க நிகழ்வாக "சமூக நிலைமாற்றத்துக்கான செயல்முறை யில் பல்கலைக்கழகங்களின் வகிபங்கு" எனும் தலைப்பில் பேராசிரியர் ஜி.கண்ண பிரான் தலைமையில் மருத்துவ கலாநிதி ஆர்.சுரேந்திர குமார் ஆகியோரை உள்ளடக்கிய மூத்த கல்வியாளர்கள் கலந்துரையாடுவார்கள். மாலை இறுதி நிகழ்வாக ஆய்வாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும்.

இந்த ஆய்வு மாநாட்டின் மூலம் எமது சமூகத்தின் தொழில் நிறுவனங்கள் தம்மை நிலைத்திருக்கச் செய்வதற்கான தந்திரோபாய மூலங்களை உருவாக்குவதோடு ஒவ்வொரு தொழில் முயற்சிகளுடைய பிரச்சி னைகளுக்கும் தீர்வு காணுவதற்கான வழிமுறைகளை உருவாக்குவதோடு நீண்டகால சமூக நன்மைகளை ஏற்படுத்த முடியுமெனப் பல்கலைக்கழக சமூகம் நம்பிக்கை கொண்டுள்ளது என்றுள்ளது. (4)

## நாகசதுர்த்தி நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 25
வண்ணை வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய நாகசதுர்த்தி விரதம் நாளை புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறும்.

அபிஷேகம், மூலமூர்த்தி பூசையுடன் வசந்த மண்டபபூசை நடைபெற்று விநாயகப்பெருமான் தீருவீதியுலா வலம் வரும் காட்சியும் இடம்பெறவுள்ளது என்று மேலும் அறிவிக்கப்பட்டது. (4)

## ஞானவைரவருக்கு உற்சவம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 25
ஏழாலை மாதிரை ஞான வைரவர் ஆலய வருடாந்த உற்சவம் நாளை மறுதினம் வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பன்னிரு தினங்கள் நடைபெறும் இந்தத் திருவிழாவில் எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் 7ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (4)

## ஆடிப்பூர வழிபாடு

யாழ்ப்பாணம், ஜூலை 25
நீர்வேலி கந்தசுவாமி கோவிலில் நாளை புதன்கிழமை ஆடிப்பூரத்தை முன்னிட்டு சிறப்பு அபிஷேகம் மற்றும் பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன. மாலை 5 மணிக்கு இடம்பெறும் வழிபாட்டில் நாகசதுர்த்தி பூசைகளும் வழிபாடும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (4,17)

நல்லூர் திருவிழா ஆரம்பமாக உள்ளதால்

## ஆலயத்தினூடாகச் செல்லும் வாகனங்களின் சாலை ஒழுங்குகள் மாற்றப்பட்டுள்ளன

*மாநகர சபை அறிவிப்பு*

யாழ்ப்பாணம் ஜூலை 25
யாழ்ப்பாணம் நல்லூர் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ள நிலையில், பக்தர்களின் நன்மை கருதி பருத்தித்துறை சாலை வழியாக யாழ்ப்பாணம் செல்லும் வாகனங்களுக்கும் ,யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை சாலை வழியாகச் செல்லும் வாகனங்களுக்குமான மாற்றுப்பாதை வழமைபோல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. என்று யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளர் பொ. வாகீசன் தெரிவித்தார்.

எதிர்வரும் 27ஆம் திகதி வியாழக்கிழமை மதியம் 12 மணி முதல் எதிர்வரும் ஒகஸ்ட்மாதம் புதன் கிழமை நள்ளிரவு 12 மணி வரை , யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை சாலை வழியாகச் செல்லும் வாகனங்கள் ஆனைப்பந்தியைச் சென்றடைந்த பின்னர் நாவலர் வீதியூடாக நல்லூர் குறுக்கு வீதியைச் சென்றடைந்து மீண்டும் பருத்தித்துறை சாலையைச் சென்றடையும் என்றும் ,பருத்தித்துறைச் சாலை ஊடாக யாழ்ப்பாணம் நோக்கி வரும் வாகனங்கள் முத்திரைச் சந்தியை சென்றடைந்து செம்மணி வீதியூடாக கச்சேரி வீதியை சென்றடைந்து அதனூடாக கச்சேரி சந்தியை சென்றடைந்து பின்னர் கண்டி வீதியை சென்றடைந்து யாழ்ப்பாணம் செல்லும் வகையில் போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. என்று அவர் மேலும் தெரிவித்தார். (21,ரி)

## ஆடிப்பூர இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம், ஜீலை 25
மூளாய் ஆதிபராசக்தி அலங்கார நாயகியின் ஆடிப்பூர பெருவிழாவும் இறுவட்டு வெளியீடும் நாளை புதன் கிழமை ஆயக்குருக்கள் சிவஸ்ரீ புவனேந்திரக்குருக்கள் தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (21,12)

## மண்கும்பான் முத்துமாரிக்கு ஏகநாள் ருதுசோபன விழா

யாழ்ப்பாணம் தீவுப்பகுதி மண்கும்பான் பிட்டியபுலம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் (கறுப்பாத்தி அம்மன்) ஆலய வருடாந்த ஏகநாள் உற்சவ ருதுசோபன விழா நாளை புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறும். தொடர்ந்து அம்மன் உள்வீதி வெளிவீதி வலம் வருவார்.

அன்று இரவு மங்கள வாத்தியக் கச்சேரிகள் நடைபெற்று தொடர்ந்து வாணவேடிக்கை களுடன் அலங்கரிக்கப்பட்ட முத்துச்சப்பறத்தில் அம்மன் திருவீதியுலா வரும் காட்சியும் இடம் பெறவுள்ளது. (4)

## யாழ்ப்பாணக் குடாநாட்டில் நேற்றிரவு திடீர் மின்வெட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 25
யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் நேற்றிரவு 7.50 மணி முதல் மின்சாரம் தடைப்பட்டிருந்ததால் மக்கள் பல அசௌகரியங்களுக்கு எதிர்கொண்டனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பகுதிகளில் நேற்றிரவு 7.50 மணிமுதல் மின் தடை ஏற்பட்டது. முன்னறிவித்தல்களின்றி மின்சாரம் நிறுத்தப்பட்டதால் இரண்டாம் தவணைப் பரீட்சைக்காக கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்ட மாணவர்கள் பாதிக்கப்பட்டனர்.

ஹரவலப்பிட்டி மின் உற்பத்தி நிலையத்தில் தொழில் நுட்பக் கோளாறு ஏற்பட்டுள்ளதாலேயே பல இடங்களுக்கான மின் விநியோகம் தடைப்பட்டதாகவும், அதனை சீரமைக்கும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளதாகவும் மின்சார சபையினர் அறிவித்திருந்தனர். இந்த நிலையில் இரவு 9. 30 மணியளவில் மின்சாரம் வழமைக்கு திரும்பியது. (வ-21)

## பாடசாலை மாணவி திடீரென மயங்கிச் சரிந்தார்

### குடிதண்ணீரில் மர்மப் பொருள் கலக்கப்பட்டதாகக் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, ஜூலை 25
கிளிநொச்சி நகரிலுள்ள பாடசாலை ஒன்றில் மாணவி ஒருவரின் குடிதண்ணீ

## முன்பள்ளிக்குள் புகுந்து பொருள்கள் திருட்டு

*பருத்தித்துறையில் சம்பவம்*

யாழ்ப்பாணம், ஜூலை 25
பருத்தித்துறை கற்கோவளம் புரட்சி முன்பள்ளியின் ஓடுகள் பிரிக்கப்பட்டு அங்கிருந்த மாணவர்களின் பரிசுப் பொருள்கள், உணவுப் பொருள்கள் பரிமாறும் தட்டுக்கள் குடிதண்ணீர்ப் பாத்திரங்கள் உள்ளிட்ட பொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தத் திருட்டு நேற்று முன்தினம் நள்ளிரவு இடம் பெற்றது.

முன்பள்ளி ஆசிரியர்கள் நேற்றுக் காலை அங்கு சென்றபோதே திருட்டுத் தெரியவந்தது.

ஓடு பிரித்து உள்நுழைந்த திருடர் பொருள்களைத் திருடி முன்பக்கக் கதவைத் திறந்து கொண்டு வெளியேறியுள்ளனர்.

திருட்டுப் போன பொருள்களில் இந்தப் பள்ளியில் இடம் பெறவிருந்த பரிசளிப்பு விழாவுக்கென வாங்கி வைத்திருந்த பரிசுப் பொருள்களும் அடங்குகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.


இந்தச் சம்பவம் குறித்து முன்பள்ளி ஆசிரியைகள் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4, 173)

# பொன்னாலைப் பற்றைக் காடு விசமிகளால் தீ வைத்தழிப்பு

## ஏராளமான பனைகள் நாசம்

யாழ்ப்பாணம், ஜூலை 25
பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்துக்கு பின்புறமாக, பெரியவர் ஆலயத்துக்குச் சமீபமாக உள்ள பற்றைக் காட்டுக்கு நேற்றுமுன்தினம் விஷமிகள் தீமூட்டியுள்ளனர். அதனால் காட்டின் பல கிலோமீற்றர் பகுதி எரிந்து நாசமானது. ஏராளமான பனை மரங்களும் எரிந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

மதியம் ஒரு மணியளவில் காடு தீப்பற்றி எரியத் தொடங்கியது. காட்டின் பெரும்பகுதி எரிந்து அழிந்த நிலையில் அது தொடர்பாக கேள்வியுற்று அங்கு சென்ற பொன்னாலை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் வலி.மேற்கு பிரதேச செயலாளர் மற்றும் உள்ளூர் உத்தியோகத்தர்களுக்கும் தகவல் தெரிவித்தார்.



அங்கு சென்ற பொன்னாலை சமுர்த்தி உத்தியோகத்தர் மேற்கொண்ட முயற்சியால் பிரதேச பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் இணைந்து தீ அணைக்கப்பட்டது. வலி.மேற்கு பிரதேச சபைச் செயலாளரும் உத்தியோகத்தரும் தண்ணீர் பௌசருடன் அந்த இடத்துக்கு விரைந்தனர்.

காடு எரிந்தபோது அதன் அருகே உவர் நீர்த் தடுப்பணை அமைக்கும் பணியில் அதன் ஒப்பந்தகாரர் மற்றும் பணியாளர்களும் நின்றிருந்தனர். தீயைக் கட்டுப்படுத்த அவர்கள் முயற்சிக்கவில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டது. (4)

# தொடர்ச்சிகள்



## பெற்றோலிய...

கணிப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளன. மூன்று கோரிக்கைகளை முன்வைத்து இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவை அறிவித்துள்ளன.
தொழிற்சங்கங்களின் போராட்டம் தொடர்பான தகவல் பரவியதுமே, கொழும்பு உள்பட நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வாகனங்கள் நீண்ட வரிசையில் நின்று எரிபொருளை நிரப்பிச் சென்றன. (வ-5)

## மருத்துவர்கள்...

உரிய தீர்வு கிடைக்கவில்லை. நாடு முழுவதும், அடையாள பணிப் புறக்கணிப்புப் போராட்டம் இன்று முன்னெடுக்கப்படும்" என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்தது. இன்று காலை 8 மணி முதல் 24 மணித்தியாலங்கள் இந்த நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளதாக அந்தச் சங்கம் தெரிவித்தது. (வ-5)

## முகாமையாளர்...

தெரியாதவர்கள் விடுதி முகாமையாளரைத் தாக்கி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். தாக்குதலில் காயமடைந்த முகாமையாளர் வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்கல் 2.45 மணியளவில் வவுனியா, முதலாம் குறுக்குத் தெருவில் நடந்துள்ளது.
விடுதிக்கு வந்த நால்வர் அறை வாடகைக்குக் கேட்டனர் என்றும், முகாமையாளர் மறுத்ததால் தாக்கிவிட்டுத் தப்பிச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-21)

## புலிகள்...

மகிந்த ராஜபக்ச தெரிவித்தார். அம்பாந்தோட்டை, வீரகெட்டிய பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர், நல்லூர் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் குறித்து செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
'யாழ்பாணத்தில்பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர் மீது நடத்தப்பட்டுள்ள துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றையவர் படுகாயமடைந்துள்ளார். 15 வருடங்களுக்கு மேலாக தமிழ் நீதிபதியொருவருக்கு பாதுகாப்பு வழங்கிவந்த அதிகாரியே உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் தொடர்பில் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியனுடன் பேசி விடயங்களை அறிந்தேன். 'என்னை இலக்குவைத்து பாய்ந்த துப்பாக்கித் தோட்டாவையே அந்த அதிகாரி தனது மார்பில் தாங்கி எனது உயிரைக் காத்தார்' என நீதிபதி கூறினார். இது வீரச் செயலாகும். அந்த அதிகாரிக்கு சன்மானம் வழங்கப்படவேண்டும்.
இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் வேறு கோணத்தில் கதைகூறுகின்றனர். நீதிபதியும், சம்பவத்தில் காயமடைந்த பொலிஸாரும் ஒரு விதத்திலும், பொலிஸார் மற்றுமொரு கோணத்திலுமே கருத்து வெளியிட்டுள்ளனர். எது எப்படியோ நீதிபதி சொல்வதை நாம் ஏற்கவேண்டும். ஆகவே, இது பற்றி உடனடியாக விசாரணை நடத்தப்படவேண்டும்.
பொலிஸார் மீது துப்பாக்கிச்சூடு நடத்தி கொலை செய்யும் அளவுக்கு நாட்டின் சட்டமும், ஆட்சியும் பலவீனமடைந்துள்ளது. இது பாரதூரமான விடயமாகும். இவ்வாறானதொரு சம்பவம் அண்மையில் கொழும்பிலும் நடைபெற்றது. இதில் இரண்டு அதிகாரிகள் உயிரிழந்தனர். சிறைச்சாலை அதிகாரிகளும் உயிரிழந்தனர். தற்போது யாழ்ப்பாணத்திலும் இடம்பெற்றுள்ளது. எனினும், யாழ்ப்பாணத்தில் இப்படியான சம்பவம் இடம்பெறும்போது சற்று விழிப்பாக இருக்கவேண்டும். கொழும்பில் நடைபெற்றால் பாதாள உலகக் குழுவினர் செய்திருக்கலாம் எனக் கூற முடியும். ஆனால், அதற்கும் மேலான சம்பவங்களே யாழ்ப்பாணத்தில் இடம்பெற்று வருகின்றன.
விடுதலைப் புலிகள் உருவாகும் காலப்பகுதியில் இவ்வாறான சம்பவங்களே இடம்பெற்றன. எனவே, இது பற்றி அரசு ஆழமாகச் சிந்தித்துச் செயற்படவேண்டும்" என்று மகிந்த ராஜபக்ச மேலும் தெரிவித்தார். (வ-5)

## நீதிபதியின்...

காலை. உயிரிழந்த பொலிஸ் அதிகாரியின் மனைவியின் காலில் வீழ்ந்து நீதிபதி மா. இளஞ்செழியன் கதறி அழுதார். இது தொடர்பான காணொலி சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டிருந்தது.
இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப்பும் தனது கீச்சகத்தில் இந்தக் காணொலியைப் பகிர்ந்திருந்தார். அத்துடன் 'ஆழமாக நெகிழ்ந்தேன்' என்று கருத்தும் பதிவிட்டுள்ளார்.
இதேவேளை, சிங்கள ஊடகங்களில் நீதிபதி மா. இளஞ்செழியனின் மேற்படி சம்பவத்துக்கு, நேற்றும் பலரும் தமது கருத்துக்களைப் பகிர்ந்துள்ளனர். நீதிபதியின் மனிதாபிமானத்துக்கு முன்பாக இனவாதம் தோற்றுவிடும் என்றும் பதிவிட்டுள்ளனர்.
மேலும், இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம், இந்தத் தாக்குதலை கண்டிப்பதாகக் கீச்சகத்தில் பதிவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## இடைக்கால...

கின்றது. வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை, அரசமைப்பு நிர்ணய சபைக்கு (நாடாளுமன்றம்) சமர்ப்பிக்கப்படுவது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்பாட்டால் மேலும் இழுத்தடிக்கப்படும் காலதாமதமாகக் கூடும் என்று புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் ஈடுபட்டுள்ள தரப்புக்கள் தெரிவித்தன.
சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு வழிநடத்தல் குழு கால அவகாசத்தை வழங்கும் சாத்தியங்களே அதிகமாகக் காணப்படுவதாகவும் அந்தத் தரப்புக்கள் மேலும் சுட்டிக்காட்டின.
புதிய அரசமைப்பு உருவாக்கத்தின் மிக முக்கியமான பணிகளை முன்னெடுத்து வருகின்ற வழிநடத்தல் குழு தனது இடைக்கால அறிக்கையை கடந்த கூட்டத்துடன் 20ஆம் திகதியுடன் இறுதி செய்துள்ளது. கூட்டத்தில் கலந்து கொண்ட மற்றும் கலந்துகொள்ளாத அனைத்துத் தரப்புக்களுடன் உடனேயே சூட்டோடு சூடாக இடைக்கால அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டது.
இடைக்கால அறிக்கையில் கூறப்பட்டுள்ள விடயங்களுடன் ஒத்துப்போகாத மாற்ற வேண்டிய திருத்தத்துக்கு உட்படுத்த வேண்டிய விடயங்களை தனியாகப் பட்டியலிட்டு அறிக்கையாக இன்றைய தினத்துக்கு முன்னர் சமர்ப்பிக்கக் கோரப்பட்டிருந்தது.
கட்சிகள், வழிநடத்தல் குழுவின் உறுப்பினர்கள் யாராவது அவ்வாறு அறிக்கை சமர்ப்பித்தால், அதனை இடைக்கால அறிக்கையுடன் பின்னிணைப்பாக இணைத்து, அரசமைப்பு நிர்ணயசபைக்குசமர்ப்பிக்கத்திட்டமிடப்பட்டிருந்தது.
இடைக்காலஅறிக்கையில்குறிப்பிடப்பட்டுள்ள நிறைவேற்று அரச தலைவர் முறைமை தொடர்பில், சிறிலங்கா சுதந்திரக் கட்சி மாற்று நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது. இதனை வழிநடத்தல் குழுவின் கூட்டத்திலும் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளது. அவர்களது மாற்று யோசனையை எழுத்தில் சமர்பிக்குமாறு வழிநடத்தல் குழு கோரிக்கை விடுத்திருந்தும் இன்னமும் சமர்ப்பிக்கவில்லை.
இன்றைய கூட்டத்திலும்அவர்கள்தமதுதிட்டத்தை பெரும்பாலும் சமர்ப்பிக்கமாட்டார்கள் என்றே உள்வீட்டுத் தகவல்கள் கூறுகின்றன. சிறிலங்கா சுதந்திரக் கட்சி தமது திட்டத்தை சமர்ப்பிப்பதற்கு வழிநடத்தல் குழுவின் இன்றைய கூட்டத்தில் கால அவகாசத்தைக் கோருவார்கள் எனவும், அதற்குவழிநடத்தல்குழுவும் இணங்கும் என்று அறிய முடிகின்றது. (வ-5)

## பொய்...

நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம், யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதியை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படவில்லை என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்திருந்தார். இவ்வாறானதொரு நிலையில், உயிரிழந்த பொலிஸ் அதிகாரியின் உறவினர்கள் மேற்படிவேண்டுகோளைமுன்வைத்துள்ளனர்.
நீதிபதியை அவரது இனத்தவர்களே கொலை செய்ய முயற்சித்தனர். இந்த விசாரணையைத் திசை திருப்பவேண்டாம். முச்சக்கர வண்டித் தரிப்பிடத்தில் ஏதோதோ பிரச்சினைகள் நடந்ததாகக் கூறுகின்றனர். இவ்வாறு பொய் கூறி உண்மையை மூடி மறைக்க வேண்டாம். மதுபோதையில் இருந்தவர்கள் இதனைச் செய்துள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறுகின்றார். இவ்வாறான பொய்களை நாட்டுக்குக் கூறவேண்டாம் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். (த-5)

## நீதிபதிக்கு...

சிறப்பு அதிரடிப் படையின் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. நல்லூர் பகுதியில் கடந்த சனிக்கிழமை, மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியனை இலக்கு வைத்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருந்தது. இத்தனைத் தொடர்ந்து, அவருக்கான பாதுகாப்பு அதிகரித்து வழங்கப்படும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார். இந்த நிலையில் அவருக்கு சிறப்பு அதிரடிப்படையின் பாதுகாப்பு நேற்று முதல் வழங்கப்பட்டுள்ளது. (வ-5)

## வடமராட்சி...

பொலிஸாருக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டது. துன்னாலையைச் சேர்ந்த யோகராசா தினேஸ் (வயது- 24) துப்பாக்கிச் சூட்டியில் உயிரிழந்திருந்தார். இந்தச் சம்பவம் கடந்த 9ஆம் திகதி நடைபெற்றது. அது தொடர்பில் இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களை நீதிமன்று விளக்கமறியலில் வைத்தது.
இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. விசாரணை நடத்திய நீதிவான் விளக்கமறியலை எதிர்வரும் 4ஆம் திகதி வரை நீடித்தார். (ற-ஜ,26)

## அதிரடிப் படை...

வில் நடந்துள்ளது. கொம்மாந்துறை 10 கட்டை வீதியைச் சேர்ந்த சதாகரன் மதுஷன் (வயது -17) என்பவரே உயிரிழந்தார். அவரது சகோதரனான சதாகரன் கிஷாந்தன் (வயது-18) காயமடைந்த நிலையில் செங்கலடி பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
சகோதரர்கள் இருவர் முந்தன்வெளி ஆற்றிலிருந்து உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிக் கொண்டிருந்தபோதே இந்தச் சம்பவம் நடந்துள்ளது என்று தெரியவருகின்றது.
மணல்கடத்தலைத் தடுக்க வந்த சிறப்பு அதிரடிப் படையினர் சூடு நடத்தியதால் அச்சமடைந்த இருவரும் தப்பிக்கும் நோக்குடன் ஆற்றுக்குள் பாய்ந்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.
"முந்தன்குமாரவெளி ஆற்றிலிலிருந்து உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிக்கொண்டிருந்த போது, அந்தப் பகுதிக்கு வந்த சிறப்பு அதிரடிப்படையினர் மணல் ஏற்றியவர்களை விரட்டி வானத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தினர். மணல் அகழ்ந்து கொண்டிருந்தவர்கள் தப்பி ஓடினர். சகோதரர்கள் இருவரும் ஆற்றில் குதித்து தப்பியோட முயற்சித்தனர். ஆற்றின் நீர் மட்டம் அதிகம் காரணமாக ஒருவர் நீரில் மூழ்கினார்." என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.
அந்தப் பகுதியில் இருந்தவர்களால் இருவரும் மீட்கப்பட்டு செங்கலடி பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.
மருத்துவமனைக்கு கொண்டு வருவதற்கு 30 நிமிடங்களுக்கு முன்பு சதாகரன் மதுஷன் உயிரிழந்து விட்டார் என்று மருத்துவமனைப் பொறுப்பதிகாரி மருத்துவர் து.பரமானந்தராஜா தெரிவித்தார். மற்றையவர் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளார் என்றும் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.
இந்தச் சம்பவத்தை அடுத்து கரடியனாறுப் பிரதேசத்தில் பதற்ற நிலமை ஏற்பட்டது. துப்பாக்கிச் சூடு நடத்திய சிறப்பு அதிரடிப்படையைச் சேர்ந்தவரை தம்முன்பாக அடையாளப்படுத்தி கைது செய்ய வேண்டும் என்று பொதுமக்கள் திரண்டு போராட்டம் நடத்தியதால் முறுகல் நிலை ஏற்பட்டது. ஒன்று கூடிய பிரதேச மக்கள் வீதிகளை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். மக்களைக் கலைப்பதற்காக பொலிஸார் தடியடி மேற்கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. எனினும் மக்கள் செல்லாது போராட்டங்களில் ஈடுபட்டனர்
பதற்றம் அதிகரித்ததை அடுத்து மக்களைக் கலைப்பதற்காகப் பொலிஸார் வான் நோக்கி எச்சரிக்கை வேட்டுக்களைத் தீர்த்தனர். மக்களும் பொலிஸாரைத் தாக்க முற்பட்டதால் அங்கு பதற்ற நிலமை நீடித்தது.
செங்கலடி நகரில் இரு நெடுஞ்சாலைகளை மறித்து மக்கள் போராட்டம் நடத்துகின்றனர். கலகம் அடக்கும் பொலிஸார் உட்படப் பெருமளவான பொலிஸார் அந்தப் பகுதியில் குவிக்கப்பட்டுள்ளனர். (ற-ஜ-10)

## பொறுப்புக்கூறல்...

இடம்பெறவேண்டும் என்று மீண்டும் அரசை வலியுறுத்தியுள்ளது கனடா.
கறுப்பு ஜூலை நினைவுகூரலை முன்னிட்டுக் கனேடியத் தலைமை அமைச்சர் ஜஸ்ரின் ட்ரூடே வெளியிட்டுள்ள செய்தியில் இந்த வலியுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.
அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
1983ஆம் ஆண்டு ஜூலை 24ஆம் திகதிக்கும் 29ஆம் திகதிக்கும் இடையில் கொழும்பிலும் இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் திட்டமிட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தமிழர்களுக்கு எதிரான படுகொலைகளினால், ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டும், நாடிழந்தவர்களாக இடம்பெயரவும் நேரிட்டது.
கறுப்பு ஜூலையின் 34ஆவது ஆண்டை நினைவு கூரும் தமிழ்ச் சமூகத்தினர் மற்றும் கனேடியத்தமிழர்களுடன் நாமும் இணைந்து கொள்கிறோம்.
இலங்கை உள்நாட்டுப் போரின் இருண்ட நாள்களைப் பிரதிபலிக்கும் அதேவேளை, பாதிக்கப்பட்ட அனைவரினதும் காயங்களைக் குணப்படுத்துவதற்கும் நாம் தொடர்ந்து பணியாற்றவேண்டும்.
அனைத்து இலங்கையர்களுக்கும் நீண்டகால நல்லிணக்கம் மற்றும் அமைதியை எட்டுவதற்கான அனைத்துலக முயற்சிகளையும் கனடா வரவேற்கிறது.
போரினால் பாதிக்கப்பட்டவர்களின் நம்பிக்கையைப் பெற்ற ஒரு பொறுப்புக்கூறும் செயல்முறை உருவாக்கப்படவேண்டும்.
இலங்கை உள்நாட்டுப் போரினால் மிகுந்த இழப்புக்களைச் சந்தித்தவர்களுக்குக் கனேடிய அரசின் சார்பில் எனது ஆழ்ந்த அனுதாபத்தையும், ஆதரவையும் தெரிவித்துக் கொள்கிறேன்என்றுள்ளது. (த)

## மைத்திரிக்கு...

இரா.சம்பந்தன். அந்தக் காணிகள் இந்த மாத இறுதிக்குள் விடுவிப்பதற்கு அவசர நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் மேற்படி கோரிக்கையை முன்வைத்தார்.
அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:
கடந்த மே மாதம் 18ஆம் திகதி நானும் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசாவும் குறித்த காணிக்குச் சென்று, அந்தப் பிரதேசத்திற்குப் பொறுப்பான இராணுவக் கட்டளை அதிகாரியுடன் கலந்துரையாடினோம். 243 ஏக்கர்கள் அடங்கிய காணித்துண்டு உடனடியாகவே விடுவிக்கப்பட முடியும் என்றும், 189 ஏக்கர்கள் அடங்கிய 2ஆவது காணித்துண்டு ஒரு மாத காலத்துள் விடுவிக்கப்பட முடியும் என்றும், 111 ஏக்கர்கள் அடங்கிய 3ஆவது காணித்துண்டு 6 மாத காலமளவில் விடுவிக்கப்பட முடியும் என்றும், 70 ஏக்கர்கள் 2 றூட்கள் அடங்கிய 4ஆவது காணித்துண்டை விடுவிப்பதில் தாம் சில பிரச்சிரனைகளை எதிர்நோக்குவதாகவும் தெரிவித்தார்.
நான் கொழும்பு திரும்பியவுடன், அப்போதிருந்த இராணுவத் தலைமைக் கட்டளை அதிகாரி ஜெனரல் கிரிஷாந்த டி சில்வாவுடன் மேலே கூறப்பட்ட 70 ஏக்கர்களும் 2 றூட்களும் அடங்கிய 4ஆவது காணித்துண்டை விடுவிப்பது பற்றிக் கலந்துரையாடியபொழுது, அதனை விடுவிக்கப்பட முடியும் என்பதாக அவர் கூறினார். முல்லைத்தீவு கேப்பாபிலவில் உள்ள எல்லாக் காணிகளையும் ஜூலை மாத இறுதிக்குள் விடுவிப்பதாகவும் அவர் சொன்னார்.
ஜூன் மாதம் 23ஆம் திகதி தங்களை நான் சந்தித்த பொழுது 70 ஏக்கர்கள் 2 றூட்கள் அடங்கிய காணித்துண்டு உட்பட கேப்பாபிலவில் உள்ள எல்லாக் காணிகளையும் விரைவில் விடுவிக்கும்படி படையினருக்குக் கூறும்படி தங்களிடம் கோரியிருந்தேன். தாங்களும் அவ்வாறு செய்வதாக எனக்கு உறுதியளித்தீர்கள்.
முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாபிலவு காணிகள் எல்லாமே அதன் உரிமையாளர்களான மக்களுக்கு விடுவிக்கப்படுவதற்கு அவசரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்று வலுவான கோரிக்கையை நான் விடுக்கிறேன். மாத இறுதிக்குள் முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாபிலவுக் காணிகள் யாவும் விடுவிக்கப்பட வேண்டும் எனக் கண்ணியமாகக் கோருகின்றேன் என்றுள்ளது. காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பிலும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு, இரா.சம்பந்தன் கடிதம் எழுதியுள்ளார். (வ-5)

## பளையில்...

வீட்டுக்கு கதவுகள், யன்னல்கள் இல்லை. வீடு பாதுகாப்பு அற்ற நிலையில் காணப்படுகிறது. வீட்டில் உள்ளவர்கள் நித்திரைக்குச் சென்றபின்னர் திருட்டு இடம்பெற்றுள்ளது. காலையில் அவர்கள் நித்திரையால் விழித்த போது பொருள்கள் சிதறுண்டு காணப்பட்டதனை அவதானித்தனர். நகைகளைத தேடியபோது அவை காணாமல் போயிருந்தன. அது தொடர்பில் பளை பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டது.
அவ்வாறு பாதுகாப்பற்ற நிலையும் திருட்டுக்கு வழிவகுத்துள்ளது. குறித்த வீட்டில் பொலிஸ் தடயவியல் பிரிவினர் மோப்பநாயின் உதவியுடன் தடயவியல் விசாரணையில் ஈடுபட்டனர். எவரும் கைது செய்யப்படவில்லை. விசாரணை தொடர்கிறது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (4,6)

## விதிமுறைகளைப் பின்பற்றாது பயணித்தவருக்கு ரூ.4,000 தண்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 25
சாரதி அனுமதிப்பத்திரம், வருமான வரிப்பத்திரம் இன்றியும் போக்குவரத்து ஒழுங்கு விதிமுறைகளை மீறியும் பயணித்தவருக்கு நீதிமன்று 4ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.

இந்த வழக்கு யாழ்ப்பாண நீதிவான் மன்றில் பதில் நீதிவான் வி.ரி.சிவலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

குற்றஞ்சாட்டப்பட்டவர் தன்மீதான குற்றத்தை ஏற்றுக்கொண்டதையடுத்து அவருக்கு 4 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

அதனை அரச செலவாகச் செலுத்துமாறும் மன்று பணித்தது. (4-12)

# பதவிநிலை வெற்றிடங்களை உடனடியாக நிரப்பவேண்டும்

## கூட்டுறவு ஆணையாளர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 25
வடக்கு மாகாண கூட்டுறவுத் திணைக்களத்தின் முக்கிய சில பதவிகள் வெற்றிடமாக இருப்பதால் தமது திணைக்களத்தின் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் பெரும் சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள ஆணையாளர் கே.சிவகரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணக் கூட்டுறவுத் துறையின் சில முக்கிய பதவிகள் இன்னும் நிரப்பப்படாமல் இருக்கின்றன. அதனால் கூட்டுறவுத் திணைக்களத்தின் செயற்பாடுகளை நாம் முன்னெடுக்கும்போது பல சவால்களை எதிர்நோக்குகிறோம்.

பொதுவாகவே கூட்டுறவுத்துறையில் வீழ்ச்சியான நிலை காணப்படுகின்றது. வடக்கு மாகாணத்தின் கூட்டுறவுத்துறையை அபிவிருத்திப் பாதைக்கு நாம் நகர்த்திக் கொண்டிருக்கும் நிலையில் எமது மாகாணத்துக்கு முக்கிய பதவிகளுக்கு இதுவரை எவரும்நியமிக்கப்படவில்லை. ஆனால் எமது துறை பின்னடைவைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலை காணப்படுகின்றது.

வடக்கு மாகாணத்தின் கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரைகூட்டுறவுஉதவிஆணையாளர் பதவிகள் இரண்டு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 25 பேருக்கும் பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இந்தப் பதவி வெற்றிடங்களுக்கு நியமனங்களைவழங்குமாறு நாம் பல தடவை கோரிக்கை விடுத்துள்ளபோதிலும் அவை முழுமைப்படுத்தப்படாமல் இருக்கின்றன. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எமது திணைக்களத்தில் உள்ள வெற்றிடங்களை நிரப்பி கூட்டுறவுத்துறை அபிவிருத்தியை மேற்கொள்ள ஏதுவான நடவடிக்கைகளைச் செய்து தரவேண்டும்-என்றார். (4,8)

# நீதிபதி மீதான தாக்குதல் திசைதிருப்பப்படுகிறதா?

## கண்டித்து முன்னணி அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 25
"யாழ்ப்பாணமேல்நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியனைக் குறிவைத்துத் துப்பாக்கிச் சூடு நடத்தியதைக் கண்டிக்கிறோம். சம்பவத்தைப் பொலிஸார் திசை திருப்ப முற்படுகின்றனரா? என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள்முன்னணிதெரிவித்துள்ளது. இது தொடர்பில் முன்னணி அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அரசியல்அதிகாரம்மிக்கவர்களுக்குஎதிரானவழக்குகளிலும், பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிரான வழக்குகளிலும் அரசியல் கட்சிகள் என்னும்போர்வையில்துணை இராணுவக்குழுவாகஇயங்கியவர்களுக்கு எதிரான வழக்குகளையும் மிகத் துணிச்சலுடன்கையாண்டு தண்டனை வழங்கியவர் நீதிபதி.

உண்மை,நேர்மை,துணிச்சல், நீதி என்பவற்றுக்குக் கட்டுப்பட்டு அவர் மக்களுக்குச்சேவைசெய்துகொண்டிருக்கின்றார். அவர் வவுனியாவில் நீதிவானாகப் பதவி வகித்தகாலப்பகுதியில்போர் உக்கிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. அந்தக் காலப்பகுதியில் அரசியல் கட்சிகள்என்றபெயரில்வவுனியாவில் இயங்கிய துணை இராணுவக் குழுக்களின் கடத்தல், கப்பம் கோரல், சித்திர வதைகள் போன்றவற்றை இயன்றளவுக்குக் கட்டுப்படுத்தியதன் மூலமாக மக்கள் மத்தியில் உயர்ந்தமதிப்பைபெற்றார். அன்று தொடக்கம் இன்று வரை அச்சுறுத்தல்களுக்கும், அநியாயத்துக்கும் நீதிபதி இளஞ்செழியன் அடிபணியாதவர்.

புங்குடுதீவு மாணவி வித்தியா மீதான வன்புணர்வு மற்றும் கொலை வழக்கில் பாதிக்கப்பட்ட தரப்புக்கு நீதி பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதிலும், எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறக்கூடாது என்பதிலும்அவர்தீவிரஅக்கறையுடன் செயற்பட்டுவருகின்றார்.

இந்தநிலையிலேயே அவர் மீதானதுப்பாக்கிச்சூடுஇடம் பெற்றுள்ளது.துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்டவர் துப்பாக்கியைகையாள்வதில்மிகுந்த அனுபவம்மிக்கவர்போன்றே துப்பாக்கியைக் கையாண்டார் என்றும் தன்னைக் குறிவைத்தே தாக்குதல் முயற்சி நடைபெற்றது என்றும் நீதிபதி கூறியுள்ளார்.

சூட்டுச்சம்பவம்நடைபெற்று 24 மணி நேரம் கடப்பதற்குள், துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நீதிபதியைக் குறிவைத்து நடத்தப்பட்டதல்ல என்றுபொலிஸார்ஊடகங்களுக்குக் கூறியுள்ளனர். விசாரணைகளின்றிபொலிஸார்அவசரப்பட்டுஇவ்வாறு கூறுவதன்மூலமாகப்பொது மக்களுக்குப் பொய்யான தகவலை வழங்கி அவர்களது கவனத்தைத் திசை திருப்புவதற்கும்,

இந்தக்கொலைமுயற்சியின் பின்னால் இருக்கக்கூடிய சூத்திரதாரிகளைப்பாதுகாப்பதற்கும்முயல்கின்றார்களா? என்ற சந்தேகம் எமக்கு எழுகின்றது. நீதிபதி மீதான கொலை முயற்சி மற்றும், அவரது மெய்ப்பாதுகாவலர் கொல்லப்பட்ட சம்பவங்களையும், பொலிஸாரின் பொறுப்பற்ற செயற்பாடுகளையும் தமிழ்த் தேசிய மக்கள்முன்னணிமிகவும்வன்மையாகக் கண்டிக்கிறது.

நீதிபதியின் உயிரைக் காப்பாற்றுவதற்காகப்போராடிக் காயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிள்மற்றும்உயிர் துறந்தஉபபொலிஸ்பரிசோதகர்ஹேமச்சந்திர ஆகியோரது சேவையையும் அர்ப்பணிப்பையும் பாராட்டுவதுடன் உயிரிழந்த ஹேமச்சந்திரவின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம். அவரதுபிரிவால்சோகத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கும்ஆழ்ந்த அனுதாபங்களைத்தெரிவித்துக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (4)

# பணியாளர்கள் இணைந்த நாளிலிருந்து சேவைக் கொடுப்பனவை வழங்கவேண்டும்

## கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 24
"கூட்டுறவுப் பணியாளர்களுக்கான சேவைக்காலக் கொடுப்பனவுகளை பணியாளர்கள் பணியில் இணைந்த காலத்திலிருந்து வழங்க வேண்டும். பணியாளர்கள் அவ்வாறு இணைக்கப்பட்டும் நிரந்தரமாக்கப்பட்ட நாளிலிருந்துதான் கொடுப்பனவுளை வழங்க வேண்டும் என்பது சுற்றறிக்கைக்கு முரணானது."

இவ்வாறு வடக்கு மாகாணக் கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் சங்கம் வெளியிட்டுள்ளஅறிக்கையில்மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

கூட்டுறவுஊழியர்ஆணைக்குழுவின் 04/2017ஆம் இலக்க சுற்றறிக்கையின்படி இந்தக் கொடுப்பனவை பணியாளர்களுக்கு வழங்க வேண்டும்.

வடக்கு மாகாணக் கூட்டுறவு ஊழியர் சங்கத்தின் பெரும் முயற்சி காரணமாக முன்னாள் கூட்டுறவு அமைச்சரின் ஒத்துழைப்புடன் கூட்டுறவுப் பணியாளர்களுக்கு 04/2017 ஆம் இலக்கச் சுற்றறிக்கை அனுப்பப்பட்டது. அதன்படி வாழ்க்கைச் செலவுப்படி மற்றும் சிறப்புப் படிக் கொடுப்பனவுகள் கடந்த மே மாதம் தொடக்கம் வழங்குவதற்கு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனை உள்ளது.

இந்தச் சுற்றறிக்கையின் பகுதி 2இல் சேவைக்கால வெகுமதிக் கொடுப்பனவு 13/2015 ஆம் இலக்க 21.10.2015ஆம் திகதி சுற்றறிக்கையின்பிரிவு 9/1ஆனது, கூட்டுறவு ஊழியர் ஒருவர் தொடர்ச்சியாக ஒரே பதவியிலேனும் அல்லது வெவ்வேறு பதவிகளிலேனும் 15, 20,25வருடங்கள்சேவையை நிறைவு செய்தவராயின் சேவைக்கால வெகுமதிக் கொடுப்பனவு பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவராவர் என்று குறிப்பிடுகிறது.

இந்தக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்வதற்காகக் கூட்டுறவுப் பணிப்பாளர்கள் தத்தமது நிறுவனங்கள் ஊடாக அந்த மாவட்டங்களிலுள்ள கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திணைக்களங்களுக்கு விண்ணப்பித்தனர். அவ்வாறிருந்தும் இதுவரை அனுமதி கிடைக்காததால் பணியாளர்கள் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள முடியாமல் உள்ளனர். ஆணையாளர்கள் கொடுப்பனவுக்கான அனுமதியை வழங்குவதில் அக்கறை காட்டவில்லை. சில மாவட்டங்களில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அனுமதி வழங்கி ஒரு மாத காலத்தில் அந்த அனுமதியை மீளப் பெற்றுக் கொண்டுள்ளனர். ஆனால் சேவைக்காலம் என்பது முக்கியமானதாக உள்ளீர்க்கப்பட்டுள்ளது. போர் காரணமாகப் பல வருடங்களாகப் பணியாளர்கள் நிரந்தரமாக்கப்படா மல் தங்களின் சேவைகளைத் தொடர்ந்து வருகின்றனர்.

தற்போது சில சங்கங்களில் ஆளணி நிர்ணயம் பெற்றுக் கொள்ளாமல் பல வருடங்களாகப் பணியாளர்கள் சேவை செய்துவருகின்றனர். இந்தச் சேவைக்கால கொடுப்பனவு ஆரம்பத்தில் 29/27 ஆம் இலக்க சுற்றறிக்கையால் சங்க நிர்வாகத்தின் அனுமதியுடன் வழங்க வேண்டும்என்று குறிப்பிட்டுள்ளது. அதனை அதிகாரிகளுக்கு நினைவுபடுத்துகிறோம்.

சில சங்கங்களில் பணியாளர்கள் இணைந்த திகதியிலிருந்து இன்றுவரை சேவைக்காலக் கொடுப்பனவைப் பெற்று வருகின்றனர். கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு கூட்டுறவுப் பணியாளர்களின் நலன் கருதி காலத்துக்குக் காலம் வெளியிடும் சுற்றறிக்கைக்கு அமைய கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்வதில் பல தடைகளைத் தாண்டிச் செல்ல வேண்டியுள்ளது. குறைந்த ஊதியத்தில் பல இன்னல்களுக்கு மத்தியில் பணிபுரியும் கூட்டுறவுப் பணியாளர்களுக்கு அவர்களுக்கே உரித்தான கொடுப்பனவுகளை வழங்குவதற்கு அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றுள்ளது. (4-17)

# நீதிபதி மீதான தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறோம்

## யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 25
நல்லூர்க் கந்தசுவாமி கோவில் அருகில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியனைநோக்கிமேற்கொள்ளப்பட்டதாகத்தென்படுகின்றது.

நீதிபதி வழங்கிய நேர்காணலில் இருந்து இதனைப்புரிந்துகொள்ளக்கூடியதாயுள்ளது. இந்தத்தாக்குதலைநாம்வன்மையாகக்கண்டிக்கின்றோம்.

இவ்வாறுயாழ்ப்பாணகத்தோலிக்கமறைமாவட்டநீதிசமாதானஆணைக்குழுத்தலைவர் அருட்பணி ஞ.ஏ.ட. மங்களராஜா தெரிவித்தார். அவர் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் மேலும்தெரிவிக்கப்பட்டதாவது.

மக்கள்அமைதியானபாதுகாப்பானதம்வாழ்வுக்கு நீதித்துறையையும் நீதிபதிகளையும் பெரிதும்நம்பியுள்ளனர்.

நீதித்துறைக்குச்சட்டம்ஒழுங்கைநிலைநாட்ட நீதிபதி இளஞ்செழியன் மேற்கொண்டுவரும் துணிச்சலான நடவடிக்கைகளுக்கு ஓர் அச்சுறுத்தலாக அந்தத் தாக்குதலை நாம் பார்க்கின்றோம். துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்த நீதிபதியின் மெய்ப்பாதுகாவலர் ஹேமச்சந்திரவின்இறப்புஎம்மைத்துயரத்தில்ஆழ்த்தியுள்ளது.15வருடகாலமாகஅந்தப்பணியில்இருந்தவர். தமது பணியின் அர்ப்பணிப்பின் உச்சக்கட்டமாக தமது உயிரைத்தியாகம் செய்துள்ளமைஎமதுஉள்ளங்களைநெகிழச்செய்துள்ளது. அவரது ஆன்மா சாந்தியடைவதாக. அவரதுமனைவி,மக்கள்உறவுகளுக்குஎமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துகொள்கின்றோம். காயமடைந்த மெய்பாதுகாவலர் விரைவில்நலமடையப்பிரார்த்திக்கின்றோம்.

நீண்டகாலமாகதமதுபாதுகாவலராகப்பணியாற்றிய மெய்பாதுகாவலரின் திடீர் இழப்பினால்வேதனையுற்றிருக்கும்நீதிபதிக்கும்எம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்கிறோம். மக்களுக்கான நற்பணியைத் தொடர்ந்து துணிச்சலுடன் தொடர அவரைப் பாதுகாக்க வேண்டுமென இறையருளை வேண்டுகின்றோம். விசாரணைகள்சரியான திசையிலும் வினைத்திறனுடனும் விரைவாகவும் இடம்பெற்று இனிமேல் இதுபோன்ற செயல்கள் இடம்பெறாதிருப்பதை உறுதிசெய்யக்கூடியதாகவும் இருக்க வேண்டும். நீதிபதி இளஞ்செழியன்மட்டுமன்றிமற்றநீதிபதிகளும் தொடர்ந்து துணிச்சலுடனும் நீதியுடனும் செயற்படக்கூடிய வகையில் அவர்களுக்கு வழங்கப்பட்டபாதுகாப்புமேலும்பலப்படுத்தப் படவேண்டும்என்று அரசைக்கேட்டுக்கொள்கிறோம் - என்றுள்ளது. (4)

## கண்பூ கற்றாக்ற்

★கர்ப்பிணிப் பெண்களுக்கு முதல் மூன்று மாதங்களுக்குள் ருபெல்லா (ஜேர்மன் சின்னமுத்து) நோய் ஏற்படின், அது குழந்தையின் பார்வையைப் பறித்துவிடும். ருபெல்லா தடுப்பூசியைத் தவறாது ஏற்றுவதன் மூலம் ருபெல்லா நோய்த் தொற்றைத் தவிர்க்க முடியும்.

★குருதி உரித்துடைய உறவுகளுக்கு இடையிலான திருமண உறவு குருட்டுத் தன்மை உள்ள பிள்ளைகள் பிறக்கும் சாத்தியங்கள் அதிகம்.



★பார்வைக்குறைபாடு, பரம்பரையாக ஏற்படக்கூடியது. எனவே பெற்றோர் களுக்கும் இந்த நோய் இருப்பின், பிள்ளைகளை சிறு பராயத்திலிருந்தே கண் பார்வைப் பரிசோதனைக் குட்படுத்தவும்

*தகவல்*
*சு.ம.அ.பணிமனை,*
*யாழ்.மாநகர சபை.*

## எமக்குள் மோதல்கள் இருப்பினும்
# குடிதண்ணீர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காணவேண்டும்
### *வடக்கு மாகாண அவைத்தலைவர் வலியுறுத்து*

யாழ்ப்பாணம் ஜூலை 25
“இலங்கையிலேயே ஏனைய மாகாண சபைகளைவிட வடக்கு மாகாண சபையில் அங்கம் வகிக்கின்ற உறுப்பினர்களில் சட்டத்தரணிகள், மருத்துவர்கள், கல்விமான்கள் என்று பலர் இருக்கின்றனர் என எல்லோராலும் கூறப்பட்டு வருகின்றது. எமக்குள் பல மோதல்கள் இருக்கலாம். ஆனால் குடிதண்ணீர் பிரச்சினைக்கு அனைவரும் ஓரணியில் திரண்டு நிரந்தரத் தீர்வைக் காண வேண்டும்.”

இவ்வாறு வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

பொறியியலாளர் எம்.இரத்தினத்தின் நினைவுப் பகிர்வும் கலந்துரையாடலும் நல்லூர் முத்திரைச் சந்தியில் உள்ள யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான நீர் என்ற தலைப்பிலான கருத்தாடலில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் நீர் வளம் பாதிப்படைந்து செல்வது பெரும் பிரச்சினையாக உருவெடுத்து வருகின்றது. இதற்கு மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வடைந்து செல்லும் போது தண்ணீரின் பாவனை அதிகமாக இருப்பதும் ஒரு காரணியாக அமையலாம். முன்னைய காலத்தில் விவசாயிகள் விவசாயத்தின் போது துலாக்கள் மூலமாக நீரை இறைத்தனர்.

ஆனால் இப்போது பெரியளவில் தண்ணீரைப் பயன்படுத்துகின்றனர். இரசாயன உரங்களையே விவசாயிகள் அதிகளவில் பாவிக்கின்றனர். இதனால் நிலத்தடி நீர் மாசடைகின்றது. நிலத்தடி நீர் மிக வேகமாக பாதிப்படைந்து வருவதால் எமக்குத் தேவையான குடிதண்ணீரை பெற்றுக்கொள்ள எதிர்காலத்தில் பெரும் சவால்களை எதிர்நோக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம்.

இரணைமடுக் குளத்தின் மேலதிக தண்ணீரை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வரலாம். ஆனால் கிளிநொச்சி நகர்ப்பகுதியிலேயே குடிதண்ணீர்ப் பிரச்சினை தற்போதும் காணப்படுகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தை எடுத்துப் பார்த்தால் முன்னையகாலத்தில் 8 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் வாழ்ந்தார்கள்.

அந்தக் காலத்தில் எமக்குக் தேவையான குடிதண்ணீரை நாம் எந்தவிதத் தடைகளும் இன்றிப் பெறக்கூடிய நிலை காணப்பட்டது.

ஆனால் இப்போது 6 இலட்சம் அளவிலான மக்கள் தொகையை வைத்துக் கொண்டு குடிதண்ணீருக்காகப் போராட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

எமது மாகாணத்தின் தண்ணீர் வளம் எவ்வாறான வழியில் பாதிப்படைந்து செல்கின்றது என்று சாதாரண மக்களுக்கு விஞ்ஞான ரீதியாக விளங்கப்படுத்த ப்பட வில்லை.

இதனால் எமது வளம் அழிவடைவது தொடர்பில் மக்கள் புரிதல் இல்லாமல் இருக்கின்றனர். பொதுமக்கள் அனைவருக்கும் இது சென்றடையக் கூடிய வகையில் மக்களுக்கு ஆய்வாளர்கள் தெரியப்படுத்த வேண்டும்-என்றார்.

(21-8)

## கணித, விஞ்ஞான பாடங்களுக்கு
# ஆசிரியர் நியமனத்தில் கொள்கை கடைப்பிடிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 25
வடக்கு மாகாணத்தில் கணித விஞ்ஞான பாடங்களுக்கு ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவும் வலயங்களுக்கே புதிதாக நியமனம் பெறும் ஆசிரியர்கள் பணிக்கு அமர்த்தப்படுவர் என்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் பெரும்பாலும் அனைத்து துறை சார்ந்த பாடங்களுக்கும் ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவுகின்றன. அதிலும் கணித , விஞ்ஞான பாடங்களுக்கு ஆசிரியர்களின் வெற்றிடங்கள் துறை சார்ந்த பட்டதாரிகள் இல்லாத காரணத்தால் படிப்படியாகவே நிரப்பப்படுகின்றன. அவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படும் பொழுது எந்த வலயத்தில் பற்றாக்குறை அதிகம் நிலவுகின்றதோ அதனையும் நாம் கருத்திற் கொள்கின்றோம்.

கடந்த வாரம் எமது அமைச்சால் கணித, விஞ்ஞான பாடங்களுக்கான ஆசிரியர்கள் 17 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டது. அவர்களில் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள 5 கல்வி வலயங்களில் தீவக வலய பாடசாலைகளுக்கு மாத்திரம் 2 ஆசியர்கள் நியமிக்கப்பட்டனர்.

மிகுதி ஆசிரியர்கள் வெளி மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டனர் - என்றார்.

(4,ரி)

# சிறுவர்களை இல்லங்களில் சேர்க்கும் கோரிக்கை வீழ்ச்சி
### *வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தைத் திணைக்களம் கூறுகிறது*

யாழ்ப்பாணம், ஜூலை 25
வடக்கு மாகாணத்தில் உள்ள சிறுவர் இல்லங்களில் சிறுவர்களைச் சேர்ப்பதற்கான வேண்டுகோள்-விண்ணப்பங்கள்குறைவடைந்துள்ளன என்றுமாகாண சிறுவர் நன்னடத்தைப்பராமரிப்புத் திணைக்களம் தெரிவித்தது.

வடக்கு மாகாணத்தில் 41 சிறுவர் இல்லங்கள் காணப்படுகின்றன. அவற்றில் சிறுவர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் குறைவடைந்துள்ளன என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. சிறுவர்களை இல்லங்களில் சேர்ப்பதற்காக 2016ஆம் ஆண்டு 999 விண்ணப்பங்கள் கிடைத்தன. யாழ்ப்பாண மாவட்டத்தில் 314 விண்ணப்பங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 244 விண்ணப்பங்களும், மன்னார் மாவட்டத்தில் 46 விண்ணப்பங்களும், வவுனியா மாவட்டத்தில் 215 விண்ணப்பங்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 177 விண்ணப்பங்களும் கிடைத் தன.

நடப்பு வருடத்தில் 221 விண்ணப்பங்கள் மாத்திரமே இதுவரை கிடைக்க பெற்றுள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்தில் 87 விண்ணப்பங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 4 விண்ணப்பங்களும், மன்னார் மாவட்டத்தில் 26 விண்ணப்பங்களும், வவுனியா மாவட்டத்தில் 45 விண்ணப்பங்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 59விண்ணப்பங்களும் கிடைக்கப் பெற்றுள்ளன. இதுவரையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் தான் அதிகளவான விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(4,ரி)

## சட்டவிரோதமாக மணல் ஏற்றிய சாரதிகளுக்கு ரூ. 50,000 தண்டம்

கிளிநொச்சி, ஜூலை 25
சட்டவிரோதமாக மணல் ஏற்றிய உழவு இயந்திர சாரதிகளுக்கு தலா 50 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து கிளிநொச்சி நீதிமன்று உத்தரவிட்டது.

கிளிநொச்சிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் சட்டவிரோதமாகவும் அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறியும் மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் 3 உழவு இயந்திரங்களைப் பொலிஸார் மடக்கினர். அவற்றின் சாரதிளையும் கைது செய்தனர்.

அவர்கள் கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டனர். மூவரும் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டனர்.

சட்டவிரோதமாக மணல் ஏற்றிய இரண்டு உழவு இயந்திர சாரதிகளுக்கும் தலா 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறி மணல் ஏற்றிய உழவு இயந்திர சாரதிக்கு 30 ஆயிரம் ரூபா தண்டம் நீதிமன்றால் விதிக்கப்பட்டது. (4,6)

## பெரும் நிதிச் செலவை குறைக்க
# வறட்சிக் காலப்பகுதிக்குள் குளங்கள் சீரமைக்கப்படவேண்டும்
### வடக்கு மாகாண விவசாய அமைப்புக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 25
“கடும் வறட்சிக் காலத்தில் நீர் நிலைகள் அனைத்தும் வற்றிக் காணப்படுகின்றது. எனவே அவற்றைச் சீரமைப்புச் செய்வதற்கு இதுவே சிறந்த தருணம். இதன் மூலம் பெரும் தொகை நிதியை மீதப்படுத்த முடியும்.”

இவ்வாறு வடக்கு மாகாண விவசாய அமைப்புக்கள் சுட்டிக்காட்டின.

இது தொடர்பில் அவை மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தின் மண் தூர்ந்து, அவற்றை அகற்றி அணைகளைப் பலப்படுத்த வேண்டிய நிலையில் நூற்றுக்கணக்கான குளங்கள், மற்றும் வாய்க்கால்கள் உள்ளன. அவ்வாறான குளங்களைச் சீரமைக்குமாறு கோரிக்கைகள் முன்வைத்துள்ளோம். அதற்கு அதிக நிதி தேவை எனக் காரணம் கூறப்பட்டு நிராகரிக்கப்பட்ட சம்பவங்களும் உள்ளன .

இதனால் சிறிய குளங்கள் தூர் வாராமலும் மண் அகற்றப்படாமலும் காணப்படுகின்றன. இவ்வாறான பணிகளை குளத்தில் நீர் உள்ள காலத்தில் மேற்கொள்வதற்கு அதிக நிதிச் செலவுகள் ஏற்படும். ஆனால் நீர் அற்ற இக்காலத்தில் பைக்கோ இயந்திரங்கள் மூலம் மேற்கொள்வதனால் 3 தினங்களில் ஒரு குளத்தின் பணியை மேற்கொள்ளலாம். எனவே இதற்கான ஏற்பாடுகளை உடனடியாகமேற்கொண்டு கொழும்பு, வடக்கு மாகாண அரசுகள் அதற்கான நிதிகளைத் திரட்டினால் குறிப்பிட்ட காலத்துக்குள் நூற்றுக்கும் மேற்பட்ட குளங்களை மிக இலகுவில் குறைந்த செலவில் சீரமைக்க முடியும்.

குளங்களைச் சீரமைப்பதற்கு இதுவே உகந்த தருனம். இந்த விடயம் உரியவர்களால் உடனடியாக மாகாண முதலமைச்சரின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட வேண்டும். குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள குளங்கள் அனைத்தும் சிறிய குளங்களே. அவை ஒவ்வொன்றும் மக்கள் குடியிருப்பை அண்டிய கிராமங்களில் உள்ள காரணத்தால் அவற்றை ஆழமாக்குவதன் மூலம் அதிக நீரைத் தேக்கி எதிர்காலத்தில் கிணற்று நீர் வற்றுவதனைத் தடுக்க முடியும்.

அதேபோன்று வன்னியில் உள்ள சிறிய குளங்களைச் சீரமைப்பதன் மூலம் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதோடு விரயமாகும் நீரைச் சேமித்து நன்மை பெறமுடியும். எனவே இந்த விடயத்தைக் கருத்திற் கொண்டு அதிகாரிகள் உடன் நடவடிக்கையில் ஈடுபடவேண்டும்.

கொழும்பு, வடக்கு மாகாண அரசுகள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் இந்த விடயத்தில் உடன் கவனம் செலுத்தி முடிந்தளவு குளங்களைச் சீரமைத்து விவசாயத்தையும் குடிதண்ணீர்த் தேவையையும் நிறைவு செய்யக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அதிக நன்மையடைய முன்வரவேண்டும் - என்றனர்.

(21-101)

# எத்தனை பேர் வரினும் தலைமை அமைச்சராக மகிந்த வரவே முடியாது

*அடித்துக் கூறுகிறார் அமைச்சர் தயாசிறி*

கொழும்பு, ஜூலை 25

மைத்திரி அணியில் உள்ள அத்தனை பேரும் மகிந்தவுடன் இணைந்தாலும்கூட மகிந்த வால் தலைமை அமைச்சராக முடியாது. அவ்வாறு இணைந்து மறுநாளே மகிந்த அணி யில் இருந்து பலர் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து அந்தக் கட்சி தனித்து ஆட்சி அமைக்க உதவுவர் என்று அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்:

விரும்பியோ விரும்பாமலோ தேசிய அரசில் இணைந்திருக்க வேண்டிய கட்டாயம் எமக்கு ஏற்பட்டுள்ளது. வேறு வழி இல்லை. தேசிய அரசில் இணைந்திருக்க சுதந்திரக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் குமார வெல்கமவைத் தவிர அனைவரும் விருப்பம் தெரிவித்தனர். அதன் அடிப்படையில்தான் நாம் இந்த அரசில் இணைந்தோம். ஆனால், இப்போது எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். அரசை விட்டு விலகப் போவதாகக் கூறுகிறார்கள். தேசிய அரசு இல்லை என்றால் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி வந்திருக்கும். அதன் பின் சுதந்திரக் கட்சியினதும் உறுப்பினர்களினதும் நிலைமை மிக மோசமாகிப் போயிருக்கும். கூட்டு அரசு அமைந்ததால் சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் நிம்மதியாக இருக்கின்றனர். வேலை வாய்ப்பு மற்றும் சலுகைகள் போன்றவற்றிலும் சம பங்கு கிடைக்கிறது. ஆகவே தேசிய அரசில் இருந்து விலகுவது எந்த வகையிலும் எமக்கு நன்மை தராது. மைத்திரி அணியில் உள்ள அத்தனை பேரும் மகிந்தவுடன் இணைந்தாலும்கூட மகிந்தவால் தலைமை அமைச்சராக முடியாது. அவ்வாறு இணைந்து மறுநாளே மகிந்த அணியில் இருந்து பல்ர் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து அந்தக் கட்சி தனித்து ஆட்சி அமைக்க உதவுவர்- என்றார். (த-3)

---

**காணியும் மண்டபமும் விற்பனைக்கு**

உரும்பிராய் சந்திக்கு அண்மை யில் பலாலி வீதியில்
3 ¾ பரப்பில்
அமைந்துள்ள மண்டபம் உடன் விற்பனைக்கு உண்டு.

**077 412 2022**

---

**மலிவு விற்பனை**

கோதுமை தவிடு

40KG - 1360/-

**077 362 8944**

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சூ.சேவியர் குலநாயகம் - தேவஜோதி தம்பதிகளின் மகளும், சுண்டுக்குழி மகளிர் கல்லூரி பழைய மாணவியுமான

**செல்வி ஆன் சுமங்கலா குலநாயகம்**

அவர்கள் 19.07.2017 அன்று உயர்நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் உயர்நீதிமன்ற சட்டத்தரணியாகச் சத்தியப் பிரமாணம் செய்ததையிட்டுப் பாராட்டி வா ழ்த்துகின்றோம். மேலும் இவர் சட்டத்துறையில் வளர்ச்சிபெற்று சிறந்து விளங்க இறைவனை வேண்டி ஆசி கூறுகின்றோம்.

**பெ.கனகசாபதி,**
**சோ.சுகிர்தன், செ.இலகுநாதன்,**
**தா.தியாகமூர்த்தி,**
**க.பிருந்தாபன்**

---



## யாழ்ப்பாணம் வண்ணை
## ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்
## வரலக்ஷ்மி விரத உற்சவம்
### (04.08.2017) வெள்ளிக்கிழமை

காலை 6.30 மணிக்கு ஸ்ரீ மகாலக்ஷ்மி அம்பாளுக்கு நவகலச அபிடேக ஆராதனையுடன் ஆரம்பமாகி மு.ப 10.30 மணிக்கு விஷேட தீபாராதனை, அர்ச்சனை வழிபாடுகள் நடைபெற்று அம்பாள் " பத்மாசனத்தில் திருவீதியுலா வருதலுடன் நோன்பு நூல்" வழங்கப்படும்.

நோன்பு நூல் பெறவிரும்பும் அடியார்கள் தங்கள் விவரங்களை 03.08.2017 ஆம் திகதிக்கு முன்னதாக அலுவலகத்தில் பதிவு செய்து பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

**ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்**
**யாழ்ப்பாணம்.**
021 222 2476

**ஆதீன மகாசபை.**

---

## ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 21 அராலி வீதி 2ஆம் குறுக்குத்தெரு, ஆதன இல.36 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம், அராலி வீதி, புதிய சோனகத்தெரு, இல.6, ஆறாம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த முகதீன் பாவா அப்துல் கலாம் பிரசித்த நொத்தாரிசு யோ.சத்தியநாதன் முகதாவில் நிறைவேறிய 3247 இலக்க 12.04.2016 ஆம் திகதிய பிரகடன உறுதியில் 1987ஆம் ஆண்டு கலீல் என்பவரிடமிருந்து கொள்வனவு செய்திருந்தாரென்றும், குறித்த உறுதியில் குறித்த கலீல் அறுதி விற்பவராகவும் தான் அறுதி வாங்குபவராகவும் இருந்து அதனைப் பிரசித்த நொத்தாரிசு M.M.மன்சூர்முகதாவில் அதே ஆண்டு ஒரு அறுதி உறுதி அத்தாட்சிப்படுத்தப்பட்டதென்றும் அக்காலப்பகுதியில் காணிப்பதிவகம் தொடர்ச்சியாக இயங்காமல் இருந்ததாகவும் 1990 ஐப்பசி மாதம் முஸ்லிம்கள் வெளியேறிய போது உறுதியும் தொலைந்துவிட்டது என்றும் பிரகடனப்படுத்தியுள்ளார். இதே நொத்தாரிசு முகதாவில் 3248ஆம் இலக்க 12.04.2016ஆம் திகதி நிறைவேறிய நன்கொடை உறுதியில் முகதீன் பாவா அப்துல்கலாம் அராலி வீதி.இல. 59/26 2 ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த முஹம்மது சாபி முஹம்மது ஜிஹாத் மனைவி பாத்திமா முர்சிதாவுக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

**ஆதன விவரம்**

வட மாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், கிராம அலுவலர் பிரிவு இலக்கம் ஜே.87. சோனகத்தெரு வடக்கு " உப்புக்குளம் கரை" இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் K.பரமேஸ்வரன் அவர்களின் வரைபட இலக்கம் 2494/2016 இல் துண்டு - 1 எனக் காட்டப்பட்ட நில.பர.1. குளி 02.00 ஆகும். இதற்கு எல்லை.

கிழக்கு - ஒழுங்கை
வடக்கு - பாறூக் மனைவி சபீனா
மேற்கு - சவக்காலை
தெற்கு - சாகுல் ஹமீத் சாஜ்மானுக்குரிய ஆதனம்.

தற்போது இவ்வாதனத்தை முஹம்மது சாபி முஹம்மதுவும் பெண் பாத்திமா முர்சிதாவும் தமது பெயருக்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்துக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத்தருமாறு உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது முஹம்மது சாபி முஹம்மது பெண் பாத்திமா முர்சிதா என்னும் பெயருக்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

---



சக்திமயம்

## தெல்லிப்பழை
## அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்
## ஆடிப்பூர மஹாசண்டி ஹோமப் பெருவிழா –2017

**ஆடித்திங்கள் 9 ஆம் நாள் (25.07.2017) செவ்வாய்க்கிழமை**

காலை 7.00 மணிக்கு நித்திய பூஜை, 7.30 மணிக்கு விநாயகர் வழிபாடு, புண்ணியாக வசனம், கணபதி ஹோமம், நவக்கிரகஹோமம், பூர்ணாகுதி, விநாயகருக்கு அபிஷேகம், விஷேடபூஜை, பிரசாதம் வழங்குதல். மாலை 5.00 மணிக்கு பூஜையுடன் விநாயகர் வழிபாடு புண்ணியாகவாசனம், கடஸ்தாபனம், 108 சங்கு பூஜை, தேவி மகாத்மியம், பாராயணம், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல்.

**ஆடித்திங்கள் 10 ஆம் நாள் (26.07.2017) புதன்கிழமை**

அதிகாலை 5.00 மணிக்கு பூஜை, 5.30 மணிக்கு ஏகதந்தகணபதி பூஜை, புண்ணியா-கவாசனம், 108 சங்குபூஜை 6.00 மணிக்கு சண்டிஹோமம் ஆரம்பம, காலை 10.00 மணிக்கு சுகாசினி பூஜை, கன்யா பூஜை, பிரம்மசாரி பூஜை, வருணபூஜை கோபூஜை, உபசார ஆகுதி, மகாபூர்ணாகுதி, பலிபூஜை, அபிஷேகம், பாற்குடபவனி, அபிஷேகம் நண்பகல் 12.00 மணிக்கு விஷேட பூஜை, பிரசாதம் வழங்குதல், மதியம் 1.00 மணிக்கு அன்னதானம் வழங்கப்படும்.

மாலை 6.00 மணிக்கு பூஜை, 7.00 மணிக்கு வசந்தமண்டபப்பூஜை, ருது சாந்தி வைபவம், அம்பாள் திருவீதி உலா.

**பிரதான சர்வசாதகாச் சாரியார்கள்**
"ஆகம விசாரதா B.A" (இந்தியா)
சிவஸ்ரீ யசோதரக் குருக்கள்

**பிரதம சிவாச்சாரியார்**
" சாகித்திய சிரோமணி "
சிவஸ்ரீ ப.முத்துக்குமாரசுவாமிக் குருக்கள் (வடகோவை)

**சர்வசாதகாச் சாரியார்கள்**
பிரம்மஸ்ரீ ப.ரங்கநாத சர்மா

**ஏனைய சிவாச்சாரியார்கள்**
சிவஸ்ரீ ந.சுதாகரக் குருக்கள்
சிவஸ்ரீ கு.உமாசங்கரக் குருக்கள்
சிவஸ்ரீ ப.மு.பாலகுமாரசாமிக் குருக்கள் (வடகோவை)
சிவஸ்ரீ சோ.குமாரகுருக்கள்

**சண்டிஹோம உபயகாரர் விவரம்**
திரு.யோகராஜா இந்திரயோகன் குடும்பம் (சிங்கப்பூர்)
திரு.சத்திவேல் குடும்பம் (சிங்கப்பூர்)
அமரர் தணிகாசலம் குடும்பம் (ரூபன் - லண்டன்)
அமரர் தவநாயகம் குடும்பம் (சுரேஸ் - லண்டன்)

**மாலைத்திருவிழா உபயம்**
தனபாலசிங்கம் குகபாலினி
(அமரர் ஆறுமுகம் குடும்பம் - அச்சுவேலி)

**25.07.2017, 26.07.2017 இரண்டு நாள்களும் அன்னதானம் வழங்கப்படும்.**

அடியார்கள் ஆசாரசீலர்களாக ஆலயத்திற்கு வருகை தருவதோடு ஹோம சமித்துகளை அபிஷேகப் பொருள்கள் போன்றவற்றை வழங்கி அம்மனின் திருவருளைப் பெற்றுய்வீர்களாக.

" மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம் "

**ஆதீககர்த்தா**
**சிவஸ்ரீ செந்தில் குகநாதக்குருக்கள்.**

tplsrimuthumariamman@gmail.com +94756545077
புகையிரத நிலைய வீதி, தெல்லிப்பழை.

---



World Class British
IT Degree Programme
@ ICBT Jaffna Campus

Apply Now For New Intake 2017

EQAA
Institutionally Accredited
(European Quality Assurance Agency)

ICBT DUAL HNDs Software Engineering + Computing
Duration 2 Years

Cardiff Metropolitan University
UGC RECOGNIZED
BSc (Hons) SOFTWARE ENGINEERING
Offered by Cardiff Metropolitan University, UK
Duration 1 year
Entry Qualifications
Higher National Diploma in Computing/ IT/ Networking/ Systems Development or any other accepted programs

Why Study ICBT ?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

Week End Part Time Classes
A/L | O/L → HND → BSc
DEGREE COMPLETION IN SRI LANKA

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner
Education Service Sector
www.icbt.lk

# ஆறாம் மாத நினைவஞ்சலி

தோற்றம்
23.01.1958



மறைவு
29.01.2017

அமரர்
திருமதி கௌரிமனோகரி பவளநாதன்
(ஆங்கில ஆசிரியை-கொக்குவில் இந்துக் கல்லூரி)

அன்பின் பிறப்பிடமாய்,
அழகின் ஓவியமாய்,
ஆசையின் இருப்பிடமாய்,
இரக்கத்தில் இமயமாய்,
கல்வியின் களஞ்சியமாய்,
கற்றலில் களைப்படையாதவராய்,
கற்றதற்கு இலக்கணமாய்,
சுறுசுறுப்பில் விஞ்சியவராய்,
எதிலும் சோர்ந்து போகாதவராயிருந்த நீங்கள்
எம்மையெல்லாம் கண்ணீரில் தவிக்கவிட்டுச்
சென்று மாதங்கள் ஆறானதோ?
இன்னும் என் மனம் ஏற்க மறுக்கின்றதே நீங்கள்
இல்லையென்பதை கௌரிஅக்கா!!!

உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகிறேன்

என்றும் உங்கள் நினைவுகளுடன்
சகோதரி
பாபு (லண்டன்)



எங்கள் குல விளக்குகள் மறைந்த

# 19 ஆம் வருட நினைவு அஞ்சலி





செல்வி அ.இந்துமதி
தோற்றம் 05.05.1968 மறைவு 25.07.1998

திருமதி கி.சிவகெங்கா
தோற்றம் 11. 04.1950 மறைவு 25.07.1998

திதி: துதியை (25.07.2017)

மூவேழு வருடங்கள் முடிந்தாலென்ன முன்னூறு வருடங்கள் மறைந்தாலென்ன
தங்க மக்கள் உங்கள் மங்கா நினைவுகள் தங்கி நிற்கும் எங்கள் மனவானிலே
மொட்டவிழ்ந்து மலரும் இள வயதிலே பட்டென காலன் உயிரைப் பறித்தானே

கொடிய அந்த நாள் அன்று கோடான கோடி தேவரும் மறைந்தனரோ
எதையும் தாங்கும் இதயம் என்பர் இதைத் தாங்க ஏதம்மா இதயம்
மறைந்தும் மறையாத நினைவுகளோடு மனதில் நிலைத்து வாழ்வீர்கள்
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.

ஆ.கி. அருணகிரிராசாவும்
குடும்பத்தினரும்.



# கண்ணீர் அஞ்சலி

எமது தொழில்நுட்பவியல்
கல்லூரியில் கடமையாற்றும்
அன்ரன் விமலநாதன்,
அவர்களின் துணைவியார்

திருமதி மாலா அன்ரன்
விமலநாதன்

அவர்களின் பிரிவுத்துயரில்
பங்குகொள்வதோடு
அன்னாரது
ஆத்மசாந்திக்காகவும்
பிரார்த்திக்கின்றோம்.



பிறப்பு 23.01.1970
இறப்பு 23.07.2017

பணிப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்கள்
தொழில்நுட்பவியல் கல்லூரி - யாழ்ப்பாணம்.


# தெற்கு அதிவேகப் பாதையின் 3ஆம் கட்டப்பணி ஜப்பானிடம்

கொழும்பு, ஜூலை 25

தெற்கு அதிவேகப் பாதையின் மூன்றாம் கட்ட நிர்மாணப்பணிகளை ஜப்பானிய நிறுவனத்திடம் ஒப்படைக்கப் பெருந்தெருக்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

மூன்று வருடங்களில் நிறைவு செய்யப்படவுள்ள இந்தப் பாதையின் மூன்றாம் கட்டப் பணிக்கு ஜப்பானிய நிறுவனம் சமர்ப்பித்திருந்த 134.9 பில்லியன் ரூபா விலை மனு ஏற்கப்பட்டுள்ளதாகவும் அதன்படி பொத்துஹேரயிலிருந்து கலகெதர வரையிலான 32.5 கிலோ மீற்றர் பாதை. இந்த நிறுவனத்தால் பூர்த்தி செய்யப்படுமெனவும் பெருந்தெருக்கள் அமைச்சின் செயலாளர் டீ.சி. திசாநாயக்க தெரிவித்தார். வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் அதிகமாக பயணம் மேற்கொள்ளும் பின்னவெல யானைகள் சரணாலயம் அமைந்திருக்கும் ரம்புக்கனை வழியாக இந்தப் பாதை செல்வதால் முக்கியத்துவம் பெறுகின்றது எனவும், இதற்கான நிதி ஜப்பானின் மிட்சுபிஷி டோக்கியோ வங்கியிலிருந்து பெறப்படுவதாகவும் அவர் கூறினார். கலகெதரயிலிருந்து கட்டுகஸ்தோட்ட வரையிலான பாதை ஆரம்பத்தில் இரட்டைப் பாதையாக அமைக்கப்படவிருந்தபோதிலும் இப்போது அது நான்கு பாதைகளாக விரிவாக்கப்பட்டுள்ளதாகவும், இதில் மூன்று சுரங்கங்களும் அமைக்கப்படவுள்ளதாகவும், அந்தப் பாதையின் பணிகள் இந்திய நிறுவனமொன்றால் பொறுப்பேற்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ம)


# நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர் முத்தன் தம்பிப்பிள்ளை
(ஓய்வு நிலை உதவி அரசாங்க அதிபர்)

மலர்வு 15.12.1933
உதிர்வு 25.06.2017

கடந்த 25.06.2017 அன்று இறைபதமடைந்த எங்கள்-குடும்பத்தின் ஏற்றமிகு தலைவர் அவர்களின் பிரிவுச் செய்தியறிந்ததும் உடன் வந்து துக்கம் பகிர்ந்ததோடு ஆகவேண்டிய கருமங்களை முன்னெடுத்து ஆற்றிய உறவுகள் நண்பர்கள் மூன்று நாள்களும் வந்து அஞ்சலி செலுத்திச் சென்றோர் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு மலர் வளையங்கள் வைத்து அஞ்சலித்த கோப்பாய் கல்வியியல் கல்லூரிச் சமூகம் கல்விமாணி ஆசிரிய மாணவர்கள் அஞ்சலிப் பிரசுரங்கள் மூலம் தங்கள் மன ஆதங்கங்களை வெளியிட்டோர்.

அஞ்சலியுரையாற்றியோர் மற்றும் நண்பர்கள் உறவினர்கள் அனைவருக்கும் எமது உளப்பூர்வமான நன்றிகள். அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (25.07.2017) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் காலை 6.00 மணியளவில் ஆரம்பித்து நடைபெறுகின்றது. அவற்றில் கலந்துகொள்வதோடு மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இரத்தின வாசா
அல்வாய் வடமேற்கு, அல்வாய்.
077 684 7612

குடும்பம் சார்பாக
த.மோகன் (ஆங்கில விரிவுரையாளர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி)



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி சந்திரா
பாஸ்கரன்

மண்ணில்
03.08.1948

விண்ணில்
25.07.2016



உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னில்
நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்

நீங்கள் பறந்து போய் ஆண்டு ஒன்று அசைந்த போதும்
அழியாத ஓவியமாய் - என்றும்
எம் நெஞ்சில் நீங்கள்.....
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

2A, மருதடி வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் நினைவில்
பாஸ்கரன் (கணவர்)



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
15 . 07 . 1930



இறப்பு
04 . 08 . 2016

திருமதி சின்னம்மா கொத்தர்

குடும்பத்தின்.ஜீவனாகி குலவிளக்காய் நீரிருந்தீர்
கொடுங்காலம் வந்ததுவோ? கொண்டுமைச் சென்றதுவோ?
ஆண்டொன்று போனாலும் ஆறாது உம் பிரிவு
மீண்டுந்தாள் காண்பதற்கு மீளாதோ உம்வாழ்வு.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கைதடி மேற்கு, கைதடி.
விதுரன் (பேரன்)

# கூட்டு அரசுடன் மகிந்த இணையச் சிலரே தடை

## சாடுகின்றார் அமைச்சர் சுஜீவ சேனசிங்க

கொழும்பு, ஜூலை 25
தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ரணில், மைத்திரி மற்றும் சம்பந்தன் ஆகியோரோடு இணைந்து செயலாற்றுவதற்கு மகிந்த தயார். ஆனால், அவரின் பின்னால் இருப்பவர்கள் அதைச் செய்ய விடாமல் தடுக்கின்றனர் என்று இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேன சிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்;

நாம் ஆசையில் இந்த தேசிய அரசை உருவாக்கவில்லை. சில முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் நாம் இவ்வாறு இணைந்திருக்கின்றோம்.

இந்த இணைவு காரணமாக இதுவரை பல பிரச்சினைகளை நாம் தீர்த்துள்ளோம். ஜனநாயகம் முழுவதுமாகப் பாதுகாக்கப்பட்டுள்ளது. ஊடக சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இன்னும் பல பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டியுள்ளது.

நிறைவேற்று அதிகாரமிக்க அரச தலைவர் முறைமையை இல்லாதொழித்தல் மற்றும் புதிய அரசமைப்பை உருவாக்குதல் போன்ற பெரிய வேலைகள் மீதியுள்ளன. அதிலும் நிறைவேற்று அதிகாரமிக்க அரச தலைவர் முறைமையை இல்லாதொழித்தல் தொடர்பில் சில விடயங்கள் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுவிட்டன.

மிகுதியாக இருக்கும் பிரச்சினைகளும் தீர்க்கப்பட வேண்டும். அதற்காக இந்த அரசு தொடர்ந்து பயணிக்க வேண்டிய தேவை உள்ளது.

தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ரணில், மைத்திரி மற்றும் சம்பந்தன் ஆகியோரோடு இணைந்து செயலாற்றுவதற்கு மகிந்த தயார். ஆனால், அவரின் பின்னால் இருப்பவர்கள் அதைச் செய்யவிடாமல் தடுக்கின்றனர் - என்றார். (த-3)

# உள்ளூராட்சிச் சபைகளின் எண்ணிக்கை 336 ஆனது


நடைமுறையில் 335 உள்ளூராட்சிச் சபைகள் உள்ள நிலையில் புதிய தேர்தல் திருத்தச்சட்டத்தின் கீழ் 336 உள்ளூராட்சிச் சபைகள் அமைக்கப்படவுள்ளன.

அத்துடன், பிரதேசசபை, நகரசபை, மாநகர சபை மற்றும் மாகாணசபைகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் இரண்டு மடங்காக்கப்படவுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா இந்தத் தகவலை வெளியிட்டார். இதனடிப்படையில் பிரதேசசபை, நகர சபை மற்றும் மாநகரசபைகளுக்கான உறுப்பினர்கள் எண்ணிக்கை 4,486இல் இருந்து 8,825ஆக உயர்த்தப்படவுள்ளது.

மேலும், உள்ளூராட்சி சபைகளில் பிரதி நிதித்துவம் வகிக்கும் பெண்களின் எண்ணிக்கை 2200 ஆக இருக்குமாறு சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் பைசர் முஸ்தபா மேலும் கூறினார். (த-ய)

## கண்ணீர் அஞ்சலி



இசைத்துறையில் தமிழ்ச்சங்கத்தை ஏற்றம் பெற வைத்த இந்துக்கல்லூரி முன்னாள் இசையாசிரியர்

**கி.பத்மநாதன்**

அவர்களின் மறைவு குறித்து ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தமிழ்ச் சங்கம்**
**யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி**

## மரண அறிவித்தல்

**திருமதி ஜெகதாம்பாள் இரத்தினஐயா**
**(பேபி அக்கா)**



தோற்றம் 19.12.1930 — மறைவு 23.07.2017

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெகதாம்பாள் (பேபி அக்கா) இரத்தினஐயா 23.07.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா - நிலாட்சி தம்பதிகளின் அன்பு மகளும், இராமகிருஸ்ணன் (பிரான்ஸ்), வாசுதேவன், சந்திராதேவி, சியாமளாதேவி, லம்போதரன்(லண்டன்), சுமங்கலாதேவி (நோர்வே), சுஜாதாதேவி(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சொர்ணலட்சுமி (பிரான்ஸ்), சகுந்தலாதேவி, காலஞ்சென்ற பத்மநாதன், சுப்பிரமணியம், லதா (லண்டன்), சுகுமார் (நோர்வே), சிவசங்கர் (லண்டன் ) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற நடராஜா, மகேஸ்வரன், சந்தானலட்சுமி, கண்மணி ஆகியோரின் சகோதரியும், சோபிதா, சானுதா, சுலக் ஷிதா, மதனராஜா, நிரூஜா, சாருஜா, வானுஜா, சங்கீதா, ஜீவிதா, வினுதா, லக் ஷிதா, சந்தோஸ், ஆர்த்தி, சேந்தன், ஜதுஷன், ஆரபி, இரட்ணவி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சயந்த், கவினேஸ், சுஜிந்த், கனிஸ்டா, சயானா, சுஷ்வினா, மாயோன், யாசனா, அகர்சன், திஷாந், விகாஷினி ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.

**திருகோணமலை.** தகவல்:- **திரு.திருமதி சுப்பிரமணியம் குடும்பம் (மகள், மருமகன்)**

## பண்டத்தரிப்பு பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
## பிரதானவீதி, பண்டத்தரிப்பு

பதிவு இலக்கமும் திகதியும் :- J/1762,23.12.1985

### பதவி வெற்றிடம்

எமதுசங்கத்தில் கீழ்காட்டப்பட்டுள்ள 04 பதவிகளுக்கு நிரந்தர ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பம் கோரப்படுகின்றது.

1) பதவி :- சாரதி 312/15 வெற்றிடம் - 01
சம்பளஅளவுத்திட்டம்:
13515–110x10–120X10- 15815(66/2006 இன்படி)

**தகைமைகள் :-**
அ) ஆண்டு 05இல் சித்தியுடன் சாரதிஅனுமதிப்பத்திரம் உள்ளவராகவும்,ஒருவருட அனுபவம் உள்ளவராகவும் இருத்தல்.

2) பதவி :- தொழிலாளி 318/17 வெற்றிடம் - 01
சம்பள அளவுத் திட்டம் :
12800 -100x10–110x10 -14900(66/2006 இன்படி)

**தகைமைகள் :-**
அ) ஆண்டு 05இல் சித்தியுடன் சிறந்த உடல் ஆரோக்கியமும் கொண்டிருத்தல் வேண்டும்.

3) பதவி :- விற்பனையாளர் 318/17 வெற்றிடம் - 01
சம்பள அளவுத்திட்டம்:
12800 -100x10 – 110x10 - Ĭ4900(66/2006 இன்படி)

**தகைமைகள் :-**
அ) கூட்டுறவு பணியாளர் (கனிஷ்ட பிரிவு) தராதரபத்திரம் அல்லது
ஆ) 8ஆம் வகுப்பிலான சித்தியும் விற்பனைத் தொழிலில் 3 வருடத்துக்கு குறையாத அனுபவமும்

4) பதவி :- எழுதுநர் 302/15 வெற்றிடம் - 01
சம்பளஅளவுத்திட்டம் :
13515-110x10-120x10-15815 (66/2006 இன்படி)

**தகைமைகள்:-**
அ) கூட்டுறவுப் பணியாளரின் 14ஆவது சம்பளத் திட்டத்தில் இலிகிதர் பதவியில் 02 வருடத்திற்கு குறையாத அனுபவம்,

அல்லது

ஆ) க.பொ.த(சாதாரண தரத்தில்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதமும், சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட 06 பாடங்களில் 02 தடவைகளுக்கு மேற்படாத முயற்சிகளில் சித்தியும் கூட்டுறவு சங்க லிகிதர் பதவி ஒன்றில் ஒருவருடத்திற்கு குறையாத அனுபவமும்

**குறிப்புக்கள் :-**
1. மேற்குறிப்பிட்ட 01 - 04 வரையான பதவிகளுக்கும், கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட இதர படிகளும் வழங்கப்படும்.
2. விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயதுக்கு மேற்பட்டவராகவும், 45 வயதுக்கு குறைந்தவராகவும் இருத்தல் வேண்டும்
3. சங்கப்பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.
4. சங்கப்பணியாளர்களுக்கும் சங்க எல்லைப் பரப்புக்குட்பட்டவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.
5. சங்கங்களில் கடமையாற்றுவோர் விண்ணப்பிப்பதாயின் தாங்கள் தொழில் செய்யும் சங்கத்தினுடாக தலைவரின் சிபார்சுடன் விண்ணப்பிக்கப்படல் வேண்டும்
6. விண்ணப்ப படிவங்களை சங்க அலுவலகத்தில் ரூபா 30.00 செலுத்தி பெற்றுக்கொள்ள வேண்டும்
7. தபால் உறையில் இடதுபக்கமேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர், குறியீட்டு இலக்கம் என்பன குறிக்கப்படவேண்டும்.
8. பிறப்புச்சான்றிதழ், கல்வித் தகைமைச் சான்றிதழ் அனுபவ சான்றிதழ்கள், தொழிற் தகைமைகளுக்கான சான்றிதழ்கள் என்பவற்றின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பி வைக்க வேண்டும்
9. விண்ணப்பப்படிவங்கள் யாவும் **தலைவர் பண்டத்தரிப்பு பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கம்** (வ-து), பிரதானவீதி, பண்டத்தரிப்பு என்ற முகவரிக்கு 10.08.2017 திகதிக்கு முன்னராக கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ, பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைக்க வேண்டும்

தே.கிறிஸ்துராசா
தலைவர்
பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ.சங்கம்

**விண்ணப்ப முடிவுத் திகதி :- 10/08/2017**

# கேள்விகோருதல்
# மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்

1. **தலைவர்,மாவட்ட செயலக பெறுகைக் குழு சார்பில் மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்** கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான, தற்போது தகுதி உடையவர்களிடம் இருந்தும் தகைமைபெற்றவர்களிடமிருந்தும் குறியீடு செய்யப்பட்ட கேள்விகளை கோருகின்றனர்.
2. கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தமானது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA), நீர்ப்பாசனம் மற்றும் நில வடிகால் வேலைக்கு கீழ்க்குறிப்பிடும் தரத்தினை கொண்டிருப்பதோடு, பொதுநிதி சுற்றறிக்கை.இல.04/2016(i)இற்கு அமைவாக இவ்விலை மனுக்கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வடமாகாணத்திற்குள் கொண்டுள்ளதும் கறுப்புப் பட்டியலில் பெயர் இடப்படாததுமான கேள்வியாளருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
4. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் மேலதிக தகவல்களை மாவட்ட செயலகத்தில் **(தொலைபேசி இல. 021 222 2233, 021 222 2234 நீடிப்பு 122)** பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் **மாவட்டத் திட்டமிடல் செயலகம், மாவட்டச் செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணம்** என்னும் முகவரியில் மு.ப.8.30 முதல் பி.ப.3.00 மணிவரை அலுவலக நாள்களில் கேள்வி ஆவணங்களைப் பரிசோதிக்கலாம்
5. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரண தொகுதி ஒன்றினை **மாவட்டத் திட்டமிடல் செயலகம், மாவட்டச் செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணம்.** என்ற முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றினைச் சமர்ப்பித்து 25.07.2017 முதல் 14.08.2017 வரை அலுவலக நாள்களில் 09.00 மணியில் இருந்து 15:00 மணிவரையிலான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத கீழ் குறிப்பிடப்படும் தொகையினைப் பணமாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ள முடியும்.
6. கேள்விகள் 15.08.2017 ஆம் திகதியன்று முற்பகல் 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், மாவட்டபெறுகைக்குழு, மாவட்ட **செயலகம், கண்டி வீதி,யாழ்ப்பாணம்** என்னும் முகவரியில் ஒப்படைக்கப்பட வேண்டும். காலம் தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் வருகை தந்த கேள்விதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் மேற்படி முகவரியில் கேள்வி கோரல் முடிவுற்ற உடனேயே திறக்கப்படும்.
7. கேள்வி தொடர்பான முன்கேள்விச் சபைக் கூட்டம் **மாவட்ட செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணம்** எனும் விலாசத்தில் 04.08.2017 அன்று காலை 10:30 மணிக்கு நடைபெறும்.
8. கேள்விகளை ஏற்றுக் கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைக்குழுவின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

| இல | கேள்வி அடையாள இல | வேலை விவரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | மீளளிக்கப் படாத வைப்பு (ரூபா) | தேவையான தரம் (CIDA) | கேள்விப் பிணை விவரம். | | ஒப்பந்த காலம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணைத் தொகை | செல்லுபடியாகும் காலம் | |
| 01 | JF/DPS/ONUR/EEP/IV/31/2017 | கிராய்க்குளம் புனரமைத்தல்- வாதரவத்தை, கோப்பாய் | 2.19 | 1,500.00 | C6, C7 & C8 | 21,900.00 | 10.12.2017 | 90 நாள்கள் |
| 02 | JF/DPS/ONUR/EEP/IV/32/2017 | மாயக்கைக்குளம் புனரமைத்தல் - அல்வாய் கிழக்கு | 1.94 | 1,500.00 | C6, C7 & C8; | 19,400.00 | 10.12.2017 | 90 நாள்கள் |
| 03 | JF/DPS/ONUR/EEP/IV/33/2017 | மண்டிகைக்குளம் புனரமைத்தல்- சங்கானை | 3.69 | 1,500.00 | C6, C7 & C8; | 36,900.00 | 10.12.2017 | 90 நாள்கள் |

**நா. வேதநாயகன்,**
**அரச அதிபர் / மாவட்டச் செயலாளர், யாழ் மாவட்டம்.**

# காணாமற்போனோர் அலுவலகச் சட்டம் படு பயங்கரமானது

## எச்சரிக்கிறார் மகிந்த ராஜபக்ச



கொழும்பு, ஜூலை 25
காணாமற்போனோர் அலுவலகம் குறித்த சட்டத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கையெழுத்திட்டுள்ள நிலையில், குறித்த சட்டம் பயங்கரமானது என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்ற பின்னர், மேற்படி சட்டம் குறித்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மகிந்த ராஜபக்ச இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

காணாமல்போனோர் அலுவலகச் சட்டம் மிகவும் அபாயமானது. அதிலுள்ள சரத்துகள் மிகவும் பாரதூரமானவை. இலங்கையின் அரசமைப்பை மீறும் வகையிலேயே அவை உள்ளன.

குறித்த அலுவலகத்துக்கு நீதிமன்ற அதிகாரமில்லையென அரசு கூறினாலும், அது நீதிமன்றம்போலவே செயற்படும். மேற்படி அலுவலகத்தின் செயற்பாடுகளை உயர்நீதிமன்றத்தாலும் கேட்விக்குட்படுத்தமுடியாத நிலையேற்படும். இதற்குரிய சரத்துகளும் அதில் இருக்கின்றன. அவை நீக்கப்படவில்லை -என்றார். (த)

# பெண்களின் தொழில் முதலீடுகளுக்கு அரசு 90 வீதம் உதவியளிக்கும்

## அம்பாறையில் கூறினார் அமைச்சர் தயா கமகே



செங்கலடி, ஜூலை25
தொழில் முயற்சியில் ஈடுபடும் பெண்களுக்கு முதலீட்டுக்காக 90வீத உதவி வழங்கப்படும். இந்தத் திட்டத்தின் மூலம் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்யப்படுட்டு உற்பத்திப் பொருட்களுக்கு ஏற்றுமதி சந்தை வாய்ப்பினை ஆரம்ப கைத்தொழில் அமைச்சு ஏற்படுத்தும் என அமைச்சர் தயா கமகே தெரிவித்தர்.

ஏறாவூர் மகளிர் அமைப்பின் 13ஆவது வருட நிறைவுவிழாவில் தலைமை அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மகளிர் அமைப்புகள் ஒன்றிணைந்து தொழில் முயற்சிக்காகப் பத்து இலட்சம் ரூபா நிதியைத் திரட்ட வேண்டும். மேலும் 50 இலட்சம் ரூபாவை ஆரம்பக் கைத்தொழில் அமைச்சு வழங்கும். வங்கி மூலமாக குறைந்த வட்டி அடிப்படையில் நாற்பது இலட்சம் ரூபாவும் வழங்கப்படும்.

முன்னாள் அரசமலைவர் மகிந்த காலத்தில் எமது நாட்டிற்கு தடை விதிக்கப் பட்டிருந்த ஜிஎஸ்பி பிளஸ் வரிச்சலுகையை மீண்டும் பெற்றுக்கொள்ளக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் ஐரோப்பிய நாடுகளில் 700 மில்லியன் ரூபாவுக்கான சந்தை வாய்ப்பு கிடைத்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் தரிசாக விடப்பட்டுள் ளது.

கடந்த காலங்களில் போர்ச்சூழலினால் இந்நிலங்களைப் பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பம் இருக்கவில்லை. ஆனால் தற்போது அரசின் உதவிகளைப் பெற்று இந்த நிலங்களை பயிர்ச் செய்கைக்கு உற்படுத்த வேண்டும் - என்றார்.

(த-ய-46)

# மகிந்தவுடன் ரகசியப் பேச்சை தொடரும் சு.க. உறுப்பினர்கள்

கொழும்பு, ஜூலை 25
கூட்டு அரசிலிருந்து விலகி நாடாளுமன்றில் சுயாதீனமாக இயங்கப் போவதாகச் சுதந்திரக் கட்சியின் 18 உறுப்பினர்கள் அரச தலைவரிடம் அறிவித்திருந்த நிலையில், இவர்களில் சிலர் கடந்த வாரம் மகிந்த அணியுடன் இரகசியச் சந்திப்பொன்றை நடத்தியுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

கூட்டு அரசை இரண்டாகப் பிளவுப்படுத்தும் நோக்கில் முன்னாள் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச பல வழிகளிலும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார்.

மக்கள் மத்தியிலும், நாட்டில் தொழிற்சங்கங்கள் மற்றும் சில அரச மற்றும் தனியார் தரப்பினருடன் அரசுக்கு ஏற்பட்டுள்ள முரண்பாடு மற்றும் நெருக்கடியை தமக்கு சாதகமாக்கிக்கொள்ள மகிந்தவின் விசுவாசிகளாகத் தேசிய அரசிலுள்ள சு.கவின் உறுப்பினர்களை இந்தத் தருணத்தில் தம் பக்கம் இழுத்துக்கொண்டால் மக்கள் மத்தியில் அரசு மேலும் நெருக்கடியான சூழல் ஏற்படுமென மகிந்த அணியினர் நினைக்கின்றனர்.

அதன் காரணமாக மகிந்த ராஜபக்சவைத் தலைமை அமைச்சராக நியமிக்குமாறு கூறிவருகின்றனர். நாடாளுமன்றில் 95 ஆசனங்களை மாத்திரமே சு.க. வைத்துள்ளது. மகிந்தவைத் தலைமை அமைச்சராக்க முடியாது என்று தெரிந்தும் மைத்திரியின் தரப்புக்கும், தேசிய அரசுக்கும் கடுமையான நெருக்கடியைக் கொடுக்கும் நோக்கில் தேசிய அரசிலுள்ள மகிந்தவின் விசுவாசிகள் தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

அதற்கு சு.கவின் மத்திய குழுவும் மைத்திரியும் வழி சமைக்காத நிலையிலேயே மேற்படி 18 பேரும் வெளியேறத் தீர்மானித்துள்ளனர். கடந்த வார இறுதியில் இவர்களுக்கும் மகிந்த அரசின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராகவிருந்த அவரின் சகோதரர் பசில் ராஜபக்சவுக்குமிடையிலான சந்திப்பொன்று பத்தரமுல்லையில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பில் இவர்கள் வெளியேறும் தருணம் அதற்காக அரசுக்குக் கொடுக்கவுள்ள அழுத்தங்கள் குறித்து ஆழமாகக் கலந்துரையாடப்பட்டுள்ளன.

எதிர்வரும் மாதத்தின் இரண்டாம் வாரத்தில் அதாவது, எதிரணி ஓகஸ்ட் 8 ஆம் திகதி பிரகட னப்படுத்தவுள்ள அரசு எதிர்ப்புப் பிரகடனத்தில் ஒருசிலர் கூட்டு அரசிலிருந்து வெளியேறி மகிந்த அணி மேடையில் ஏறத் தீர்மானித்துள்ளனர்.

இவர்களின் வெளியேற்றத்தின் பின்னர் அரசின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாது போகக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படும். அப்போதும் தற்போதைய அரசு எத்தனிக்கும் அரசமைப்பு உள்ளிட்ட முக்கிய எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ள முடியாதுபோகும். அதனடிப்படையில் அரசுக்கு எதிரான போக்கைக் கடைப்பிடித்து 2020ஆம் ஆண்டு தேர்தலைச் சந்தித்தல் மற்றும் உள்ளூராட்சித் தேர்தலில் மகிந்த தரப்பு தமது அரசியல் பலத்தை நிருபிக்கவே காய்கள் நகர்த்தப்படுகின்றன என்றும் அறியமுடிகிறது. (த)

**மீள் கேள்வி அறிவித்தல் - திருத்தம்**
**குறித்தொதுக்கப்பட்டமாகாண அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம் (PSDG)– 2017**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்**

தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் அவர்களினால் கடந்த 16.07.2017 ஞாயிற்றுக்கிழமை உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட PSDG நிதி வேலைகளுக்கான மீள்கேள்வி அறிவித்தலில் இல 8இல் தொல்புரம் பாணாவெட்டி காளிகோவில் கிளைவீதி புனரமைப்பிற்கு மதிப்பீட்டுத் தொகை 0.50 மில்லியன் ரூபாவாகவும் பிணைவைப்புத் தொகை 5000.00 ஆகவும் திருத்தம் மேற்கொள்ளப்படுகின்றதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

குறித்த அறிவித்தலின் ஏனைய விடயங்கள் எவையும் எதுவித மாற்ற மின்றி வலுவிலிருக்கும் என்பதனை அறியத்தருகின்றேன்.

**தலைவர், பெறுகைக்குழு,**
**வலிகாமம் மேற்குபிரதேச சபை,**
**சுழிபுரம்,** **24.07.2017**

**ஆதனப் பெயர் மாற்றம்**

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் 08. உப்புக்குளம் வீதி. ஆதன இல.31.33.35 என்ற இலக்கங்களை கொண்ட ஆதனம் பேர்ணாட் யோக்கியாம்பிள்ளை என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம். கொழும்புத்துறை. உப்புக்குளம் வீதி இல.31 ஐச் சேர்ந்த கந்தையா கைம்பெண் சின்னப்பிள்ளை பிரசித்த நொத்தாரிசு. யோ.சத்தியநாதன் முகதாவில் நிறைவேறிய 338 இலக்க 09.08.1998 (ஆ) திகதிய வெளிப்படுத்துகை உறுதியில் தனது பெற்றோர் வழியால் வந்தடைந்ததென்றும் இவ்வாதனம் சம்பந்தமாக தானோ அல்லது தனது முன்னுரித்தாளர்களோ எவருக்கும் பணமோ அல்லது பொருள்களோ கொடுக்கவில்லை என்று வெளிப்படுத்தியுள்ளார். இதே நொத்தாரிசு முகதாவில் இதே திகதியில் 339ஆம் இலக்க சீதன உறுதி மூலம் கந்தையா கைம்பெண் சின்னப்பிள்ளை தனது மகளாகிய குணசேகரம் பெண் யோகேஸ்சுக்கு சீதனமாக வழங்கியுள்ளார்.

**ஆதன விவரம் -**

வட மாகாணம் யாழ்ப்பாண மாவட்டம். யாழ்ப்பாணப் பகுதி. சுண்டுக்குழி. கோவிற்பற்று. கொழும்புத்துறை இறை "உப்புக்குளம் கரை" இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் P.தனராஜ் அவர்களின் வரைபட இலக்கம் 3681/2016.12.26 இல் துண்டு - 01 எனக் காட்டப்பட்ட நில.பர.1. குளி 13.50 ஆகும். இதற்கு எல்லை.

கிழக்கும் தெற்கும் - றோட்டு
வடக்கு - றெயில் பாதை
மேற்கு - சின்னையா இராசையாவினது ஆதனம்.

தற்போது குணசேகரம் பெண் யோகேஸ்வரி இவ் ஆதனத்தை தனது பெயருக்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார்.எனவே இவ்வாதனத்துக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத்தருமாறும். உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது குணசேகரம் பெண் யோகேஸ்வரி என்னும் பெயருக்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

**சிறிய ரக ஆடை உற்பத்தி தொழிற்சாலை**

மன்னார் மாவட்டம் நானாட்டான் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கிராம / மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களின் சமாசம் ஆனது தனியார் முதலீட்டாளர்களுடன் இணைந்து சிறிய ரக ஆடை தொழிற்சாலையை செயற்படுத்துவதற்கு விரும்புகின்றது. இதற்கு பொருத்தமான கீழ்வரும் தகைமை உடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. மீளளிப்பு செய்யாத வைப்பு பணம் ரூபா.200000 முதலிட வேண்டும்.
2. கட்டடத்திற்கான வாடகை செலுத்தப்பட வேண்டும்.
3. கையழிக்கப்படுகின்ற உபகரணங்கள் / இயந்திரங்கள் தகுதி வாய்ந்த உத்தியோகத்தரால் பரிசோதித்து கையழிக்கப்படும். பெற்றுக்கொள்பவர் ஒப்பந்த இறுதியில் அவ்வாறே கையளிக்க வேண்டும் எனினும் ஒவ்வொரு பஞ்சாங்க வருடத்திலும் இயந்திரங்களின் நிலை பரிசோதித்து அறிக்கையிடப்படும்.
4. தொழிற்தகைமையுள்ள அனுபவமிக்க பணியாளர்கள் சமாசத்தினால் ஒழுங்கு செய்து தரப்படும்.
5. மின்சாரம், குடிநீர், தங்குமிட வகதிகள் ஒழுங்கு செய்து தரப்படும். கொடுப்பனவு தங்களால் மேற்கொள்ளப்பட வேண்டும்.
6. வாகன தரிப்பிடம், தொழில் புரிபவர்களின் வாகன தரிப்பிடம் ஏற்படுத்தி தரப்படும்.
7. ஏனைய விடயங்கள் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

**திரு.அ.பி.ஜெயராஜா**
**தலைவர்**
**கிராம /மகளிர் அ.ச.சமாசம்**
**நானாட்டன்**
**077 674 5152**

# வறட்சியினால் துவள்கின்றன 11 மாவட்டங்கள்

கொழும்பு, ஜூலை
வடக்கின் 5 மாவட்டங்கள் உட்பட நாட்டின் 11 மாவட்டங்கள் கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. வடக்கு மாகாணத்தின் ஒருசில பகுதிகளில் 500 லீற்றர் நீர் 300 ரூபாவரை விற்கப்பட்டு வருகின்றது. இந்தப் பகுதி மக்களுக்கு நீரை விநியோகிப்பதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.


மாவட்ட ரீதியில் இடர் முகாமைத்துவ அலுவலகங்கள் திறக்கப்பட்டு மக்களின் நீர்த்தேவை இயன்றளவில் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றது என இடர் முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் எஸ்.எஸ். மியனாவல தெரிவித்தார்.

வரலாறுகாணாத இந்தக் கடும் வறட்சியால் வடக்கு மாகாணமும் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, அநுராதபுரம், குருநாகல், புத்தளம் ஆகிய ஆறு மாவட்டங்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. யாழ். மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 20 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். கிளிநொச்சி, வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் 80 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மாவட்டங்களில் கடந்த வருடத்தைவிட இந்த வருடம் குறைவான மழைவீழ்ச்சியே பெறப்பட்டுள்ளது. அத்துடன், தொடர்ந்து நிலவிவரும் வறட்சியான காலநிலையால் நிலைமை மேலும் விபரீதமாகிக்கொண்டிருக்கிறது. எவ்வாறாயினும், மக்களின் நீர்த்தேவையைப் பூர்த்திசெய்ய இடர் முகாமைத்துவ அமைச்சு சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது எனவும் அவர் தெரிவித்திருக்கிறார். (ம)

# கடலில் தத்தளித்த யானைகளை காப்பாற்றினர் கடற்படையினர்

## கிழக்குக் கடலில் இடம்பெற்றுள்ள இரண்டாவது யானை மீட்புப் பணி






கொழும்பு, ஜூலை 25
திருகோணமலைக் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த இரண்டு யானைகளை இலங்கைக் கடற்படையினர் மீட்டு, பாதுகாப்பாகக் கரைக்குக் கொண்டு வந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் கரையில் இருந்து 8 கடல் மைல் தொலைவில் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த யானை ஒன்றைக் கடந்த ஜூலை 11ஆம் திகதி இலங்கைக் கடற்படையினர் மீட்டு கரை சேர்த்திருந்தனர் .

இந்த நிலையில் நேற்று முன் தினம் இரண்டாவது சம்பவம் இடபெற்றுள்ளது.

கடலுக்குள் அடித்துச் செல்லப்பட்ட இரண்டு யானைகள் திருகோணமலை வட்டத்தீவுக்கும் பவுல் முனைக்கும் இடையில் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தன.

கரையோர ரோந்துப் படகு ஒன்றில் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த இலங்கைக் கடற்படையினர் இதனை அவதானித்தனர்.

உடனடியாக, கிழக்குக் கடற்படைத் தலைமையகத்துக்கு அவர்கள் தகவல் கொடுத்ததை அடுத்து, மேலதிகக் கடற்படையினர், வனவிலங்குகள் திணைக்கள அதிகாரிகளுடன் அந்த இடத்துக்கு விரைந்தனர்.

கடற்படைச் சுழியோடிகளும் மூன்று அதிவேகத் தாக்குதல் படகுகளில் கடற்படையினரும் இந்த நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இதையடுத்து இரண்டு யானைகளும் பாதுகாப்பாக, பவுல்முனை கரைக்குக் கொண்டு வரப்பட்டன. கரையேறிய யானைகள் இரண்டும், பவுல்முனை காட்டுக்குள் விடப்பட்டன. கிழக்குக் கடலில் யானைகள் தத்தளித்த நிலையில் மீட்கப்பட்ட இரண்டாவது சம்பவம் இதுவாகும். (து)

## புராதன தபாலக சீரமைப்புக்கு 60 கோடி ரூபா நிதி

கொழும்பு, ஜூலை 25
நூறாண்டுகளுக்கு மேலான புராதனப் பெருமை கொண்ட கொழும்பு அரச தலைவர் மாளிகைக்கு முன்னால் அமைந்துள்ள தலைமைத் தபாலகக் கட்டடத்தைப் புனரமைப்புச் செய்ய அரசு 60 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளதாக தபால் மற்றும் முஸ்லிம் விவகார அமைச்சர் எம்.எச்.ஏ.ஹலீம் தெரிவித்தார்.

1890ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கட்டடம் 1893ஆம் ஆண்டு பூர்த்திசெய்யப்பட்டது. தரைமாடி, முதலாம் மாடி மற்றும் இரண்டாம் மாடியைக்கொண்ட இந்தத் தலைமைத் தபாலகத்தைப் போன்ற மற்றுமொரு கட்டடம் இந்தியாவில் மாத்திரமே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தக் கட்டடத்தின் புனரமைப்புப் பணிகள் மொரட்டுவை பல்கலைக்கழகத்தாலும் புராதனப் பொருள்கள் திணைக்களத்தாலும் கையாளப்படவுள்ளன எனவும் அவர் தெரிவித்தார். (து)

## சு.க. எம்.பிக்கள் மூவர் மைத்திரிக்கு ஆதரவு

கொழும்பு, ஜூலை 25
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான திருமதி சுமேதா ஜயசேன, சனத் பஸ்நாயக்க மற்றும் இந்திக்க பண்டாரநாயக்க ஆகிய மூவரும் தொடர்ந்தும் தங்களது ஆதரவை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு வழங்கத் தீர்மானித்துள்ளனர்.

கடந்த வாரம் சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நடந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்ட இவர்கள் மூவரும் எந்தக் காரணத்தைக் கொண்டும் தாங்கள் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலான அரசை விட்டு நீங்கப் போவதில்லையென உறுதிமொழி வழங்கியுள்ளனர்.

இவர்கள் மூவரும் அரசைவிட்டு விலகவுள்ளனர் என அவர்களது புகைப்படங்களுடன் ஊடகம் ஒன்று கடந்த வாரம் செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (து)

## திருமலையில் கடும் வறட்சி 27,646 குடும்பங்கள் பாதிப்பு

திருமலை, ஜூலை 25
திருகோணமலை மாவட்டத்தில் நிலவிவரும் கடும் வறட்சி காரணமாக 27,646 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. மாவட்டத்தின் 11 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் தொடர்ந்து வறட்சியான காலநிலை நிலவி வருகின்றது.

11 பிரதேச செயலர் பிரிவுகளிலும் உள்ள 96 கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள மக்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் குகதாஸ் சுகுணதாஸ் தெரிவித்தார்.

கிண்ணியா, மூதூர், தோப்பூர், தம்பலகமம், ஈச்சலம்பற்று, வெருகல், புல்மோட்டை, கோமரங்கடவல மற்றும் மொறவெவ முதலான பகுதிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள நடுவூற்று, சூரங்கல், சுங்கான்குழி, மணியரசங்குளம், ஆயிலியடி முதலிய கிராமங்களும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக நடுவூற்றுக்குளம், மணியரசங்குளம், பட்டியனூர்க்குளம் ஆகியன முற்றாக நீரின்றிக் காணப்படுகின்றன. குளங்களிலுள்ள மீன்கள் இறந்து காணப்படுகின்றன. இதனால் நன்னீர் மீன்பிடியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வயல் நிலங்கள் வறட்சியால் பாளங்களாக வெடித்துக் காணப்படுகின்றன. வீட்டுத் தோட்டப்பயிர்களும் கருகி அழிவடைந்து காணப்படுகின்றன. கால்நடைகள் தண்ணீரின்றி அலைந்து திரிகின்றன. கிணறுகளும் வற்றிக் காணப்படுகின்றன என்றார். (து-ய-45)

## கொலையாளிகளை காப்பாற்றாது அரசு

கொழும்பு, ஜூலை 25
படையினருக்காகக் குரல் கொடுத்தாலும் கொலையாளிகளை காப்பாற்றும் எண்ணம் கிடையாது எனப் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

நீண்ட கால விசாரணைகளின் அடிப்படையில் கடற்படையின் முன்னாள் பேச்சாளர் டி.கே.பீ. தசாநாயக்க கைது செய்யப்பட்டார் எனவும், அவர் குற்றம் இழைத்திருந்தால் சட்ட ரீதியாகத் தண்டனை விதிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (து)

# கொப்பேக்கடுவ கொலைபற்றி மீள்விசாரணை வேண்டும்

## அரசிடம் கோருகிறார் மல்வத்தை பீடாதிபதி

கொழும்பு, ஜூலை 25
யாழ்ப்பாணம் அராலித்துறையில் லெப்.ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ உள்ளிட்ட உயர்மட்ட படை அதிகாரிகள் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக மீள்விசாரணை நடத்தப்பட்டு, அதன் கண்டறிவுகள் பகிரங்கப்படுத்தப்படவேண்டும் என்று மல்வத்தை பீடத்தின் அனுநாயக்க தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கண்டியில் நடந்த லெப்.ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவின் 25 ஆவது ஆண்டு நினைவு நாள் மற்றும் 75 ஆவது பிறந்த நாள் நிகழ்வில் உரையாற்றியபோதே, மல்வத்தை பீடத்தின் வண. விஜிதசிறி அனுநாயக்க தேரர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

"அராலித்துறையில் பாதுகாப்பு உயர் அதிகாரிகள் சென்ற வாகனம் குண்டு வெடிப்பில் சிக்கியமை தொடர்பாக மர்மங்கள் நிலவுகின்றன.

கம்பீரமான போர் வீரராக உயர் மதிப்புடன் திகழ்ந்த லெப்.ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ உள்ளிட்ட உயர் இராணுவ அதிகாரிகள் இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டமை குறித்து சந்தேகங்கள் உள்ளன.

கொப்பேகடுவவின் உயிரிழப்பு தொடர்பான விசாரணைக்கு ஒரு அழுத்தம் தேவைப்படுகிறது. விடுதலைப் புலிகள் மற்றும் பிரபாகரனின் முடிவு அறிந்து கொள்ளும் வரை அவர் வாழ முடியாமல் போனது, பரிதாபம்" என்றும் அவர் தெரிவித்தார்.

1992 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 8ஆம் திகதி தீவகத்தில் உள்ள அராலித்துறையில் விடுதலைப் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கி வடக்கு மாகாண இராணுவத் தளபதி லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் விஜய விமலரட்ண, வடக்கு மாகாணக் கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் ஜெயமகா உள்ளிட்ட 9 இலங்கை இராணுவ மற்றும் கடற்படை உயர் அதிகாரிகள் உயிரிழந்தனர்.

யாழ்ப்பாண நகரத்தைக் கைப்பற்றும் 'ஒப்பரேசன் பைனல் கவுன்ட் டவுண்' என்ற தாக்குதல் நடவடிக்கையை மேற்கொள்வதற்கான இறுதிக் கட்டத் திட்டமிடல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபேதே இவர்கள் கண்ணிவெடியில் சிக்கிய உயிரிழந்தனர். இதனால் இந்தத் தாக்குதல் கைவிடப்பட்டது. (து)

Facebook : U
Twitter : UTH


## ஓ.பி.எஸ். – மோடி நேற்றுச் சந்திப்பு



புதுடெல்லி, ஜூலை 25
இந்தியத் தலைமை அமைச்சர் மோடி, தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் இருவரும் நேற்றுக் காலை சந்தித்துப் பேச்சு நடத்தினர்.
இந்தச் சந்திப்பில் நெடுவாசலில் தமிழக மக்கள் நடத்திவரும் போராட்டம், கார்பன் திட்டம் ஆகிய பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வொன்றை வழங்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஓ.பன்னீர்செல்வம் மோடியிடம் வலியுறுத்தினார் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

### காட்டைக் கட்டியெழுப்பும்
## புத்திசாலி நாய்கள்

சிலியின் மத்திய பகுதியில் தீ விபத்தால் அழிவடைந்த காடொன்றை மீண்டும் கட்டியெழுப்பும் பணியில் மிகத் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன மூன்று நாய்கள்.
கடந்த ஜனவரி மாதம் மிகப் பெரிய தீ விபத்தை சிலியின் மத்திய பகுதி எதிர் கொண்டது. ஒட்டுமொத்தமாக 4 லட்சத்து 57ஆயிரம் ஹெக்டயர் காடுகள் கருகின. தற்போது காட்டை மீண்டும் உருவாக்குவதற்காக டாஸ், ஒலிவியா, சம்மர் என்ற 3 நாய்கள் கடுமையாக உழைத்து வருகின்றன.
"மார்ச் மாதம் முதல் காட்டுக்குள் புதிய விதைகளை விதைக்கும் பணியை ஆரம்பித்தேன். தினமும் விதைகளையும் நாய்களையும் ஏற்றிக்கொண்டு காட்டின் ஒவ்வொரு பகுதிக்கும் செல்வேன். நாய்களின் முதுகில் 8 கிலோ விதைகளைக் கட்டி விடுவேன். நாய்கள் ஓடும்போது முதுகுப் பையிலுள்ள விதைகள் கீழே விழும். ஒரு நாளைக்கு 30 கிலோமீற்றர் தூரம் சென்று விதைத்துவிட்டு, நாய்கள் திரும்பி வருகின்றன. ஒரு மனிதரால் ஒரு நாளைக்கு 3 கிலோமீற்றர் தூரமே சென்று விதைக்க முடியும். வேலைகளை முடித்துவிட்டு, களைப்புடன் திரும்பும் நாய்களுக்கு நான் உற்சாகமான வரவேற்பு கொடுப்பேன். அவற்றுக்குப் பிடித்த உணவுகளை அளிப்பேன். எனது நாய்க்குட்டிகள் விதைக்கும் வேலைகளைக் கச்சிதமாக செய்யக்கூடியவை. இவற்றின் ஆற்றலும் புத்திசாலித்தனமும் வேகமும் அபாரமானவை. இவை ஏனைய காட்டு விலங்குகளைத் தாக்குவதில்லை. விதைக்கும் பணி தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஏற்கெனவே விதைத்த 15 காடுகளில் தாவரங்கள் முளைக்க ஆரம்பித்துவிட்டன. கருகிய காடு, தற்போது பசுமைக் காடாக மாறிக்கொண்டிருக்கிறது. விரைவில் தாவரங்கள் வளர்ந்தால், காட்டை விட்டுச் சென்ற உயிரினங்கள் மீண்டும் திரும்பி வரும்" என்கிறார் நாய்களின் உரிமையாளரான 32 வயது பிரான்சிஸ்கா டார்ரஸ். (ம)



### அதிபர் தேர்தலில் தலையீடு கார
## ரஷ்யா மீது அமெ
## பொருளாதாரத்

வொஷிங்டன், ஜூலை 25
அமெரிக்க அதிபர் தேர்தலில் தலையிட்ட விவகாரத்தில், ரஷ்யா மீது புதிய பொருளாதார தடைகள் விதிப்பதற்கு குடியரசு, ஜனநாயக கட்சிகள் இடையே உடன்பாடு ஏற்பட்டுள்ளது. இதன்மூலம் மிக விரைவில் ரஷ்யா மீது அமெரிக்கா முக்கிய தடைகளை விதிக்க வாய்ப்புள்ளது என்று கருதப்படுகிறது.
அமெரிக்காவில் கடந்த ஆண்டு இறுதிப் பகுதியில் அதிபர் தேர்தல் நடந்தது. இந்தத் தேர்தலில் சற்றும் எதிர்பாராத வகையில் குடியரசுக் கட்சி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்ப் வெற்றிபெற்றார். ஜனநாயக கட்சி வேட்பாளர் ஹிலாரி கிளிங்டன் தோல்வியைத் தழுவினார்.
ஹிலாரி தோல்வி அடையவும், ட்ரம்ப் வெற்றி பெறவும் ஏற்ற வகையில், அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ரஷ்யா நேரடியாகத் தலையிட்டது என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இந்த குற்றச்சாட்டு உண்மை என அமெரிக்க நடுவண் புலனாய்வு அமைப்பு நம்புகிறது. இந்த



விவகாரத்தில் அமெரிக்க நாடாளுமன்றமும் விசாரணை நடத்துகிறது. ஆனால் ரஷ்யா இந்தக் குற்றச்சாட்டுகளை திட்டவட்டமாக மறுத்து வருகிறது. இந்த நிலையில், ரஷ்யா மீது புதிய பொருளாதாரத் தடைகளை விதிப்பதற்கு சட்டம் இயற்றுவதில் அமெரிக்க நாடாளுமன்றத்தில் குடியரசு கட்சிக்கும், ஜனந

## போதைப்பொருள் கடத்தல்காரர்களை கண்டதும் சுடுங்கள்

### இந்தோனேசிய அதிபர் உத்தரவு



இந்தோனேசியாவில் போதைப் பொருள் கடத்தல்காரர்களை கண்டதும் சுட்டுத் தள்ளுங்கள் என்று அந்த நாட்டின் பொலிசாருக்கு அதிபர் ஜோகோ விடோடோ உத்தரவிட்டார்.
இந்தோனேசியாவில் அந்த நாட்டின் அதிபர் ஜோகோ விடோடோ போதை பொருள் கடத்தல்காரர்களை ஒடுக்குவதற்கு கடும் நடவடிக்கை எடுத்து வருகிறார். தற்போது போதைப் பொருள் கடத்தல் காரர்களை கண்டதும் சுடும்படி அவர் உத்தரவிட்டார்.
"போதைப் பொருளை ஒடுக்குவது என்பதில் உறுதியாக இருங்கள். குறிப்பாக, வெளிநாட்டில் இருந்து இந்த நாட்டுக்குள் போதை பொருள் கடத்தல்காரர்கள் நுழைந்தால் எச்சரிக்கையுடன் இருங்கள். அவர்கள் சிறிதளவு எதிர்ப்பு தெரிவித்தாலும், அவர்களை சுட்டு விடுங்கள்" என அவர் மேலும் குறிப்பிட்டார். (ம)

## ஈரானில் நடுக்கம்



தெஹ்ரோன், ஜூலை 25
ஈரான் நாட்டின் கெர்மான் மாகாணத்தில் நேற்றுக் காலை திடீரென நில நடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவு கோலில் 5.4 அலகுகளாகப் பதிவானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
கெர்மான் மாகாணத்தின் தென்பகுதியில் உள்ள சுற்றுலாத் தலமாக விளங்கும் சிசாக் பகுதியில் கடல் மட்டத்திலிருந்து 10 கிலோமீ றர் ஆழத்தில் இந்த நில அதிர்வு ஏற்பட்டது. வீடுக ளும் கட்டடங்களும் சேத மடைந்தன. எனினும் உயிரிழப்புத் தொடர்பில் எந்த அறிவிப்பும் வர வில்லை. கடந்த 2003 ஆம் ஆண்டு ஏற்பட்ட நில நடுக் கத்தில் சுமார் 26 ஆயிரம் பேர் உயிரிழந்தமை குறிப் பிடத்தக்கது. (ம)

## காபூலில் கார்க்குண்டுத் தாக்குதல்; 24 பேர் துயரச் சாவு

காபுல், ஜூலை 25
ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் நேற்று நடந்த கார்க் குண்டுத் தாக்குதலில் பெண்கள், சிறுவர்கள் உட்பட 24 பேர் உயிரிழந்தனர்.
ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் பல்வேறுபட்ட ஆயுதக் குழுக்களும் தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட எத்தனிக்கின்றன. ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பு, தலிபன், சியா ஹசாரா போன்ற ஆயுதக் குழுக்கள் அங்கு பல்வேறு பட்ட தாக்குதல்களை நடத்தி வருகின்றன.
மிகவும் உச்சக்கட்டப் பாதுகாப்புப் போடப்பட்ட பின்னரும் காபூலில் இருந்து ஆயுதக் குழுக்களை அகற்றிவிட முடியவில்லை.
காபூலின் மேற்குப் பகுதியில் சன நடமாட்டம் உள்ள இடத்தில் சியா ஹசாரா ஆயுததாரிகள் நடத்திய கார்க்குண்டுத் தாக்குதலில் 24 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.
உயிரிழந்தவர்களை விட 48 மக்கள் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்புஎண்ணிக்கைமேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. (ம)




# காரணமாக
# மெரிக்கா
# த் தடை



கட்சிக்கும் இடையே உடன்பாடு ஏற்பட்டுள்ளது. மேலும் இந்தப் புதிய சட்டமானது, ரஷ்யா மீது விதிக்கிற பொருளாதார தடைகளை ட்ரம்ப் அகற்றுவதற்கான திறனை குறைப்பதாகவும் அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

ட்ரம்பின் கருத்து என்னவாக இருந்தாலும், ரஷ்யாவுக்கு எதிராக ஒரு உறுதியான நிலைப்பாட்டை எடுத்திருப்பதைத் தான் இரு கட்சிகளுக்கும் இடையேயான உடன்பாடு காட்டுகிறது. ட்ரம்ப் இந்தச் சட்டத்தின் மீது தனது மறுப்புரிமையை பயன்படுத்தி நிராகரிக்க முடியும். ஆனால் அவர் அப்படிச்செய்தால் அது ரஷ்யாவுக்கு அவர் மிகவும் ஆதரவாக உள்ளார் என்ற யூகத்தை ஏற்படுத்தும். மிகத் தீவிரமான பேச்சுக்குப் பின்னர்தான் இந்த உடன்பாடு ஏற்பட்டுள்ளது. அமெரிக்க மக்கள் சார்பில் ரஷ்ய அதிபர் புடினுக்கு ஒரு தெளிவான செய்தியை விடுப்பதாக இது அமைந்துள்ளது. என அமெரிக்க ஊடகங்கள் குறிப்பிட்டன. (ம)

தியா பொருளா
பதற்கு சட்டம்
நாடாளுமன்
ம். ஜனநாயக




வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோ, பதவியில் இருந்து விலக வேண்டும் என்று வலியுறுத்தி அங்கு பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். தலைநகர் கரஸ்கஸில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது வயலின் வாசித்து அனைவரினதும் கவனத்தை ஈர்த்தார் இளைஞர் ஒருவர். (ம)

## மிக்–35 வகை போர் வானூர்தியை ரஷ்யாவிடம் வாங்குகிறது இந்தியா

மொஸ்கோ, ஜூலை 25 ரஷ்யாவிடம் இருந்து மிக்-35 ரக போர் வானூர்திகளை இந்தியா வாங்கவுள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

மிக் ரக வானூர்திகளை ரஷ்யாவிடம் இருந்து கடந்த 50 ஆண்டுகளாக இந்தியா கொள்வனவு செய்து வருகிறது. தற்போது ரஷ்யா மிக் 35 ரக வானூர்திகளை நவீன வடிவில் உருவாக்கியுள்ளது. இந்த வானூர்திகளை கொள்வனவு செய்வதற்கு இந்தியா விருப்பம் தெரிவித்ததை அடுத்து விரைவில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாகவுள்ளது. (ம)



கம்



லாமீற்
ந்த நில
, வீடுக
ம் சேத
னினும்
டர்பில்
வர
03ஆம்
ல நடுக்
ஆயிரம்
ம குறிப்
(ம)


# P.P.T Express

## மற்றுமோர் விரிவாக்கசேவை பகல் சேவை




24.07.2017 திங்கள் தொடக்கம் தனது பகல் சேவையை விஸ்தரித்துள்ளது.
இதன் ஊடாக காலை 07.00 மணிக்கு கொழும்பு நோக்கி தனது சேவையை தொடர்கின்றது.
அதே போன்று கொழும்பு வெள்ளவத்தையிலிருந்து காலை 06.00 மணிக்கு புறப்பட்டு கொட்டாஞ்சேனை ஊடாக யாழ்ப்பாணம் நோக்கி பயணிகள் சேவையை விஸ்தரித்துள்ளது.
அதன் வழமையான இரவு சேவைகள் வழமைபோல் நடைபெறுகின்றது.
மேலும் இலங்கையின் முதற்தர துரித பொதிகள் சேவை ஊடாக வெளிநாட்டு (அனைத்து நாடுகளுக்கும்) பொதிகள் உடனுக்கு உடன் பெற்றுக் கொள்ளலாம். மற்றும் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பிற்கும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும் துரித பொதிகள் சேவையைப் பெற்றுக் கொள்ளலாம்.




இலங்கையில் சுற்றுலா பயணத்திற்கு உரிய பஸ் சேவைகள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.




யாழ்ப்பாணம் - 077 573 1318
பருத்தித்துறை - 077 573 6003
கொழும்பு - 077 575 5175/011 232 0336



உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை எதிர்நோக்குபவருக்கு பதவி நீடிப்பு ஏன்?

பன்னாட்டுச் சமூகத்தின் அறிக்கைகளில் குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவருக்குஒருவருட காலத்துக்குமீண்டும்பதவிநீடிப்பைவழங்கிமனித உரிமைகள் குறித்த அக்கறையை வெளிப்படுத்தியுள்ளது இலங்கை அரசு.

இலங்கையின் உள்நாட்டுப் போர் மிக மூர்க்கமாக நடைபெற்றுக்கொண்டிருந்த காலத்தில் தமிழ் மக்களைப் பெரும் அச்சத்தில் ஆழ்த்திய இலங்கையின்குற்றப்புலனாய்வுப்பிரிவுமற்றும்பயங்கரவாத விசாரணைப்பிரிவுக்குப்பொறுப்பாகபணியாற்றிய சிசிரமென்டிஸுக்கேஅமைச்சரவைபதவிநீடிப்பை வழங்கியுள்ளது.

கூட்டு அரசு , உள்நாட்டுப் போரின்போது இடம் பெற்ற பெரியளவிலா குற்றங்கள் தொடர்பான விசாரணைகளைமேற்கொள்வது குறித்து உண்மையானஅக்கறையைக்கொண்டிருக்குமானால், அந்த விசாரணைப்பட்டியலில்இடம்பெறவேண்டியவர் சிசிர மென்டிஸ்.

இவரின்கீழ்செயற்பட்ட இருசட்ட நடைமுறையாக்கல் பிரிவுகளும் மிக மோசமான சித்திரவதைககளிலும்மனிதஉரிமைமீறல்களிலும்ஈடுபட்டிருந்தன.

குற்றப்புலனாய்வுப்பிரிவாலும், பயங்கரவாதவிசாரணைப் பிரிவாலும் இழைக்கப்பட்ட அநீதிகளுக்குச் சாட்சிகளாக தமிழ் சமூகத்தின் மத்தியில் பலர் இன்னமும் உள்ளனர்; உளக் காயங்கள் மாறாத நிலையில் அவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினதும், பயங்கரவாத தடுப்புப்பிரிவினதும்பிரதிப்பொலிஸ்மாஅதிபராக சிசிர மென்டிஸ் பணியாற்றியவேளை, மிகவும் கொடூரமாணசித்திரவதைகளும்,வன்புணர்வுகளும், வன்முறைகளும் இடம்பெற்றன என ஐக்கிய நாடுகளின் விசாரணையாளர்கள் வெளிப்படையாகத் தங்கள் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த வருடம் ஜஸ்மின் சூக்கா தலைமையிலான பன்னாட்டு உண்மை மற்றும் நீதிக்கான அமைப்பு, சிசிர மென்டிஸுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் அடங்கிய தெளிவான, முழுமையான அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தது.

இவ்வாறு பன்னாட்டு ரீதியில் அம்பலப்படுத்தப்பட்ட அதிகாரிகளுக்கு கூட்டுஅரசு பதவி உயர்வுகளையும்பதவிநீடிப்புகளையும்வழங்கிக்கௌரவிப்பது இது முதற்றடவையுமல்ல.

மகிந்த ராஜபக்ச அரசு பின்பற்றிய இந்த நடைமுறையை கூட்டு அரசும் வெற்றிகரமாகப் பயன்படுத்துகின்றது.

இதன்மூலம் கடந்த காலங்களில் குற்றங்களில் ஈடுபட்டவர்களுக்குத்தாங்கள்சட்டத்தின்முன்நிறுத்தப்படமாட்டோம் என்ற நம்பிக்கையை ஊட்டுகின்றது. அவர்களை மேலும் ஊக்குவிக்கின்றது கூட்டு அரசு.

# ஈழத் தமிழரின் துன்பியல்கள் ஜூலைகளில்

## வெற்றிகளும் இல்லாமலில்லை

ஈழத்தமிழ்மணி

இலங்கைத்தீவில் ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்கள் மாறலாம். கட்சிகள் காலத்துக்கு ஏற்றவாறு கொள்கை நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளலாம். சிங்கள அரசுகள் தமிழினத்துக்கான தீர்வை வழங்குவதற்குப் பின்னடிக்கலாம். ஆனாலும் ஐக்கியதேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்பவை மாறிமாறி நாட்டை 70 ஆண்டுகளாக ஆண்டு கொண்டிருந்த காலப்பகுதிகளில் தமிழினத்துக்கெதிராக இடம்பெற்ற படுகொலைகள், அராஜகங்கள், இன வன்முறைகள் பெரும்பாலும் ஜூலை மாதங்களிலேயே நடந்தேறியிருக்கின்றன.

ஆயுதப்போராட்டம் இடம் பெற்றகாலகட்டத்தில் உலகத் தமிழர்களை மெய் சிலிர்க்க வைக்கின்ற பல நிகழ்வுகளும் ஜூலை மாதங்களில்அரங்கேறிய வரலாறுகளுமுண்டு. பல ஜூலை மாதங்கள் ஆட்சியாளர்களுக்கும் ஈழத்தமிழர்களுக்கும் பல திருப்பங்களைத் தந்திருக்கின்றன.

### தமிழ் இளைஞர்களை சிந்திக்க வைத்த கறுப்பு ஜூலை

1983 ஆம் ஆண்டின் ஜூலை மாதமானது, விடுதலைப் போராட்ட வரலாற்றில் புதிய திருப்புமுனையைஏற்படுத்தியிருந்தது. தமிழர்களுக்கு பேரழிவை ஏற்படுத்துவோம், இந்த அழிவுகள் மூலம் தமிழீழக் கொள்கையும் தமிழர்களும் அழிந்து போகட்டும் என்ற முனைப்போடு பௌத்த சிங்கள அரசு, கறுப்பு ஜூலை மாதத்தில் விதைத்த வினையின் விளைவை, அன்றைய அரசு தொடக்கம் இன்றைய அரசுவரை அனுபவித்துக் கொண்டிருக்கின்றன.

இனப் பிரச்சினையும், தமிழர் விரோதச் செயல்களும் 1967 ஜூலையிலிருந்து 2017 ஜூலை வரை தொடர்கதைதான் என்பதை உணரக் கூடியவாறு சம்பவங்கள் அமைந்துவிட்டுள்ளன. சிங்கள வன்முறையாளர்களது வன்செயல்களால் தமிழர்களின் குருதி இலங்கை மண்ணில் கொட்டிக் கொண்டிருக்கையில், அதன் காரணமான விடுதலையுணர்வும், தமிழ் இளைஞர்கள் மத்தியில் அதிகரித்துக் கொண்டிருந்தமைக்கும் ஜூலை மாதங்கள் சாட்சியமாக அமைந்து விட்டுள்ளன.

1956ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5ஆம் திகதி தமிழர்களது மொழியுரிமையைப் பறிக்கும் தனிச்சிங்களச் சட்டம் அப்போதைய தலைமை அமைச்சரான எஸ்.டபிள்யூ. ஆர்.டி பண்டாரநாயக்காவால் நாடாளுமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது.



இதனை எதிர்த்துத் தமிழ் அரசுக்கட்சியினர்சாத்விகப்போராட்டங்களை நடத்தியிருந்தனர். போராடிய தமிழ்த் தலைவர்களும் தொண்டர்களும் சிங்களக் காடையர்களால் தாக்கப்பட்டனர்.

1957 ஆம் ஆண்டு ஜூலை 26 ஆம் திகதி தமிழினத்தலைவரான தந்தைசெல்வநாயகத்துக்கும் தலைமை அமைச்சரான பண்டாரநாயக்காவுக்குமிடையில் தமிழ்மொழி உபயோகம் தொடர்பான ஒப்பந்தமொன்று கைச்சாத்தானது. ஆனால் அதனைச் சிங்களக் கடுங்கோட்பாளர்களது எதிர்ப்பால் பண்டாரநாயகாவால் நடைமுறைப்படுத்த முடியாது போயிற்று.

இது மட்டுமன்றி அதையொட்டி 1958ஆம் ஆண்டில் நாட்டில் தமிழ் மக்களுக்கு எதிரான இனக் கலவரமும் இடம்பெற்றமை வரலாறு.

1960 ஆம் ஆண்டு ஜூலை மாதம் நாட்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் அரசுக் கட்சி போட்டியிட்டிருந்தது. 21 தொகுதிகளில் போட்டியிட்ட தமிழ் அரசுக் கட்சி 16 இடங்களில் வெற்றிபெற்றுச் சாதனை படைத்தது.


1958ஆம் ஆண்டு பண்டாரநாயக்காவால் சிங்கள சிறிசட்டம் கொண்டு வரப்பட்டது. 1961 ஆம் ஆண்டு அவசரகாலச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு அதன் மூலம் தமிழ்த் தலைவர்கள், தொண்டர்கள் சிறையில் தடுத்துவைக்கப்பட்டனர்.

1973 இல் தரப்படுத்தல் முறை ஸ்ரீமாவோ அரசினால் கொண்டுவரப்பட்டு, தமிழ் மாணவர்கள் உயர் கல்வியை இழக்கும் நிலையேற்பட்டது. 1974 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் பொலிஸார் மின்கம்பிகளை துப்பாக்கியால் சுட்டு வீழ்த்தியதில் ஒன்பது தமிழ் மக்கள் துடிதுடிக்கப்படுகொலைசெய்யப்பட்டனர். அது திட்டமிட்டு அரசின் படையினரால் நடத்தப்பட்டதொன்றாகும்.

1975ஆம் ஆண்டு ஜூலை 27ஆம் திகதி விடுதலைப் புலிகளின் ஆயுத வழித்தாக்குதலில் யாழ். மாநகர முதல்வரான அல்பிரட்துரையப்பா சுட்டுக் கொல்லப்பட்டார். 1971 ஆம்ஆண்டுதிருகோணமலை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் அரசுப்படையினர் நடத்திய அராஜக வெறியாட்டத்தில் 60 இக்கு மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

### 1977 பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி சாதனை படைப்பு

1977 ஆம் ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமிழர் பிரச்சினைக்கு தீர்வைப் பெறும் நோக்கில் ஒன்றுபட்ட கூட்டு அமைப்பாக தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழீழக் கொள்கையை முன்வைத்து வடக்குக் கிழக்கு மாகாணங்களில் போட்டியிட்டபோது 18 தொகுதிகளில் வெற்றி பெற்று நாட்டின் இரண்டாவது பெரிய கட்சியாக ஆனதோடு, எதிர்க் கட்சித் தலைமையையும் கைப்பற்றிச் சாதனை படைத்திருந்தது. ஆறில் ஐந்து பெரும்பான்மைப் பலத்தைப் பெற்று பதவிக்கு வந்த ஐக்கிய தேசியக்



கட்சி, தமிழினத்தின் ஒற்றுமையைக் கண்டு வியந்தது. தமிழீழக் கொள்கைக்கு தமிழ் மக்களின்ஆதரவுஆணையாகக் கிடைத்தமையால் ஐ.தே.க. அரசு தனது இனக் குரோத வெளிப்பாட்டை தமிழர்கள் மீது பகிரங்கமாகக் காட்டிக் கொண்டது.

1977ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் அப்போதைய சிங்கள அரசு நாட்டில் இனக் கலவரத்தைக் கட்டவிழ்த்து விட்டிருந்தது. தமிழர்கள் பல நூற்றுக்கணக்கானவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். சொத்துக்கள் அழிக்கப்பட்டன. சிங்கள அரசு இனக் கலவரத்தைத் திட்டமிட்டு மேற்கொண்டமைநிரூபணமாயிற்று.

**பயங்கரவாதத் தடைச் சட்டம் படையினருக்கு அழிப்புக்காக வழங்கிய அங்கீகாரம்**

தமிழினத்தின் ஒற்றுமையும், விடுதலைக்கான போராட்டவேகம் தமிழ் இளைஞர்களிடையே வேரூன்றியிருந்ததனாலும், தமிழ்த் தலைமையையும், விடுதலைவேட்கையையும் அழிப்பதற்கு பயங்கரவாதச் தடைச் சட்டத்தை ஜே.ஆரின் ஐ.தே.கட்சி அரசு நாடாளுமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றிக் கொண்டது.

தமிழ் இளைஞர்களைத் தேடி அழிப்பதற்கே இந்தச் சட்டம் 1977ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில் கொண்டு வரப்பட்டதாகும். இந்தச் சட்டத்தின் துணையுடன் அரச தலைவர் ஜே.ஆர். அதற்கான படைப்பிரிவை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்திருந்தார். இளைஞர்களை வீடுவீடாகத தேடிச் சென்றபடையினர், வெளியே இழுத்து வந்து கொடூரமாகச் சித்திரவதை செய்து சுட்டுக் கொன்றிருந்தனர்.

இந்தக் கொடிய குரூரமான காட்சிகளைக் பார்த்த தமிழ் இளைஞர்கள் பலர் விடுதலைக்குப் போராடிய இயக்கங்களில் இணைந்து கொண்டனர்.

தமிழீழ விடுதலை இயக்கம் 1983ஆம் ஆண்டு ஜுலை மாதம் 23ஆம் திகதியன்று திருநெல்வேலி தபாற்பெட்டி சந்தியில் இரவு நேரம் பலாலியிலிருந்து பலாலி வீதியில் வந்து கொண்டிருந்த படையினரின் வாகனத்தின் மீது கண்ணி வெடித்தாக்குதல் நடத்தியதில் அந்த இடத்தில் 13 படையினர் கொல்லப்பட்டனர். அந்தச் சம்பவம் இலங்கை அரசைப் பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கி வைத்தது.

ஜுலை 24ஆம் திகதியன்று விடுதலைப்புலிகளது திருநெல்வேலித் தாக்குதலுக்குப் பழிவாங்கும் நடவடிக்கையாகப் படையினர் யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் 51 தமிழ் மக்களை சுட்டுக் கொன்றனர். இதேவேளை அன்றைய தினம் தென் பகுதியில் ஜே.ஆர்.அரசு திட்டமிட்டவாறு சிங்கள வன்முறையாளர்களை ஒன்று திரட்டி படையினரின் ஆதரவுடன் கொடூரமான இனக்கலவரத்தை ஆரம்பித்து வைத்து ஒரு வாரம் வரையில் தமிழினப்படுகொலையை அரங்கேற்றிக் கொண்டிருந்தது.

மனிதகுலம் நினைத்துப் பார்க்க முடியாத வகையில் தமிழ் மக்கள் மீது சிங்களக் காடையர்கள் தாக்குதல்களை மேற்கொண்டு பல தமிழர்களைப் படுகொலை செய்தும், தமிழர்களது சொத்துக்களைச் சூறையாடியும் பெரும் சேதம் விளைவித்தனர்.

ஜுலை 30,31ஆம்திகதிகளில் படிப்படியாக வன்முறைகள் குறையத் தொடங்கின. அந்த அதர்மம்நிறைந்த அநாகரிக நிகழ்வு உலக அரங்கில் சிங்கள இனத்துக்கு பெருந் தலைகுனிவை ஏற்படுத்தியது. இத்தகையதொரு நிகழ்வு வரலாற்றில் இனி ஒரு போதும் இடம்பெறாது என சிங்கள அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் அந்தச்சம்பவத்துக்குசமாதானம் கூறிக் கொண்டனர்.

**கறுப்பு ஜுலை கலவரமே அரசுக்கெதிரான போருக்கு வழி வகுத்தது**

இலங்கைக்குக் கறைபடிந்ததொரு வரலாறாக அந்தக் கறுப்பு ஜுலை அமைந்து விட்டது. இதன் பின்னர் அது வேறு வடிவங்களில் தீவிரமானதாக, நிறுவனமயப் படுத்தப்பட்டதாக, சட்டபூர்வமான ஒரு போராக விரிவாக்கம் பெற்றது. தமிழர்களின் தாயகத்துக்குள் போர் திணிக்கப்பட்டது. அது தமிழர்களின் வாழ்வில் கொடுமையானதாகத்தொடர்ந்தது. இதற்கிடைப்பட்ட பல ஜுலை மாதங்கள் இலங்கை அரசியல் வரலாற்றில் பல சம்பவங்களை வரலாறாகவும் பதிவு செய்துள்ளன.

1985 ஆம் ஆண்டு ஜுலை 8ஆம் திகதி அரசுக்கும் ஆயுதக் குழுக்களுக்கும் இடையிலான முதலாவது கட்டச் சமாதானப் பேச்சு திம்புவில் ஆரம்பமாகியது. 1986 ஆம் ஆண்டு ஜுலை மாதம் ஜே.ஆர். அரசுடன் தமிழர் விடுதலைக் கூட்டணி பேச்சு வார்த்தைநடத்தியது. ஆனால் அது எதுவித பலனுமின்றி ஏமாற்றத்தில் முடிந்தது.

1987 ஜுலை 5ஆம் திகதியை நெல்லியடியில் முகாமிட்டிருந்த இராணுவத்தினருக்கு ஒரு கறுப்பு ஜுலையாக விடுதலைப்புலிகள் ஆக்கியிருந்தனர். விடுதலைப்புலிகளின் கரும்புலிகளால் நடத்தப்பட்ட நெல்லியடி முகாம் மீதான தாக்குதல், தற்கொடைப்போராளியால் நிர்மூலமாகப்பட்ட அதிர்ச்சிச் செய்தி சிங்கள அரசைத் தடுமாறச் செய்தது. அதனையடுத்து ஜே.ஆர்.அரசு யாழ்.குடாவை அழிக்க வேண்டுமெனத்திட்டம் தீட்டியது.

இலங்கைக்கு கறைபடிந்ததொரு வரலாறாக அந்தக் கறுப்பு ஜுலை அமைந்து விட்டது. இதன் பின்னர் அது வேறு வடிவங்களில் தீவிரமானதாக, நிறுவனமயப் படுத்தப்பட்டதாக, சட்டபூர்வமான ஒரு போராக விரிவாக்கம் பெற்றது.

1987 ஜுலை மாதம் 27ஆம் திகதி இந்தியத் தலைமை அமைச்சருக்கும், இலங்கை அரச தலைவருக்கும் இடையே இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தத்தினால் இந்திய அரசு அமைதிப்படை என்ற பெயரில் இந்தியப் படையினரை இலங்கைக்கு அனுப்பியது. தமிழ் மக்களின் பாதுகாப்புக் கருதி இந்திய அமைதிப் படையினர் வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிலை கொள்ள வைக்கப்பட்டனர் என்று கூறப்பட்டாலும், ஈழத் தமிழருக்கான அக்கிரமப்படையாக வந்து, விடுதலைப் புலிகளிடம் பலத்த அடி வாங்கிய பின்பு அமைதிப்படை இந்தியா திரும்பிச் சென்றது.

இலங்கையின் இரண்டாவது நிறைவேற்று அரச தலைவரான ரணசிங்க பிரேமதாசவுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் குற்றவியல் பிரேரணையொன்றைச் சமர்ப்பிக்கும் திட்டத்தை, தமிழினத்தை அழிப்பதில் திட்டமிட்டுச் செயல்பட்ட, காலம் சென்ற அமைச்சர்களான காமினிதிசநாயக்கா, லலித் அத்துலத்முதலி ஆகியோர் முன் வைத்ததும் ஒரு ஜுலை மாதத்திலேயே ஆகும்.

1991 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 10 ஆம் திகதி ஆனையிறவு முகாம் மீது விடுதலைப்புலிகள் வலிந்த தாக்குதலைத் தொடுத்திருந்தனர். படையினரால் தாக்குதலை எதிர்கொள்ள முடியாத நிலையில் அதனை முறியடிப்பதற்காக ஜுலை மாதம் 14ஆம் திகதி வெற்றிலைக் கேணி கட்டைக்காடு பகுதிகளில் கடல் வழியாகத்தரையிறங்கிய இராணுவத்தினர் ஆனையிறவு நோக்கி முன்னகர்வை மேற்கொண்டு அங்கு செல்வதற்கு 26 நாள்கள் எடுத்திருந்தனர்.


**மரவு வழி இராணுவமாக வளர்ச்சி கண்ட விடுதலைப் புலிகள்**

விடுதலைப்புலிகள் இயக்கம் நடத்தி வந்த வழிமறிப் புச்சமர் பின்னர் அவர்கள் மரபுவழி இராணுவமாக பரிணமிப்பதற்கு வழிவகுத்திருந்தது. 1993 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 25ஆம் திகதி கறுப்பு ஜுலையை நினைவு படுத்துவதற்காக பத்தாவது ஆண்டு நினைவுநாளன்று மணலாறு மண்கிண்டி மலை இராணுவமுகாம்மீது புலிகள் வலிந்த தாக்குதலைத் தொடுத்திருந்தனர்.

1996 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 18ஆம் திகதி ஓயாத அலைகள் ஒன்று என்றபெயரில் விடுதலைப் புலிகள் முல்லைத்தீவு முகாம்மீது வலிந்த தாக்குதலொன்றை நடத்தி வெற்றி கொண்டனர். அப்போதைய அரச தலைவரான சந்திரிகாவுக்கு அதன் மூலம் அதிர்ச்சியையும் வியப்பையும் கொடுத்திருந்தனர்.

இலங்கை வரலாற்றில் ஜுலை மாதங்கள் பல திருப்பங்களைத் தந்துள்ள நிலையில், இறுதியில் மகிந்த ஆட்சியானது 2006ஆம் ஆண்டு ஜுலை மாதம் திருகோணமலை மாவிலாறுப் பகுதியில் போரை ஆரம்பித்து 2009 மே18இல் முள்ளிவாய்க்காலில்போரை முடித்து வைத்தது. தமிழினத்தை அழிப்பதற்கான போரை 22 நாடுகளினது ஆதரவோடு இலங்கை அரசு அரங்கேற்றியிருந்தது.

முன்னேறிப்பாய்ச்சல் இராணுவ நடவடிக்கைமூலம் 1995 ஜுலை மாதத்தில் நவாலி தேவாலயத்தின் மீது குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டு விமானப் படையினர் 147 அப்பாவித் தமிழ்மக்களை படுகொலை செய்தமை, இலங்கையில் 70 ஆண்டுகள் கால அரசியல் வரலாற்றில் சுழற்சி முறையில் வந்து சென்ற பல ஜுலை மாதங்கள், தமிழினத்திற்கெதிராக படையினர் நடத்திய படுகொலைகளுக்கு சாட்சியங்களாக அமைந்துள்ளன.



## ஆசிரியருக்கான கடிதம்

### வரணி, மாசேரி-கப்பத்தை வீதிக்கு விடிவு காலம் பிறக்குமா?

வரணி வடக்கு ஜே -340 கிராம சேவையாளர் பிரிவூடாகச் செல்லும்- மக்கள் பெரிய அளவில் போக்குவரத்துச் செய்யும் மிக முக்கியமான வீதி மாசேரி-கப்பத்தை வீதியாகும்.

இந்த வீதி, குடத்தனை, மணற்காடு, அம்பன் பகுதிகளுக்குத் தென்மராட்சி மக்கள் பயணிப்பதற்குப் பயன்படுத்தும் மிக முக்கியமான வீதியாகும். தற்போது இந்த வீதி போக்குவரத்து செய்ய முடியாத அளவுக்கு மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இந்த வீதியூடாக கடலுணவு வியாபாரிகள் மற்றும் பிரயாணிகள் மற்றும் வாகன உரிமையாளர்கள் பயணிப்பதைப் பார்க்கும்போது மனதில் ஆத்திரம் ஏற்படுகிறது. அதை விட இந்த வீதியில் இருபக்கமும் உள்ள மரங்கள் இன்னமும் சிலகாலத்தில் வீதியை முற்றாக மூடி விடும் அளவுக்கு வளர்ந்து பாதைக்கு இடையூறாகக் காணப்படுகின்றன. இந்த ஆண்டு பருவமழை தொடங்கியதும் இந்த வீதியால் எவருமே பயணிக்க முடியா நிலை ஏற்படப் போகிறது. ஏனெனில் பாதையின் நடுவில் ஆங்காங்கே பெரும் குழிகள் காணப்படுகின்றன. பருவமழை தொடங்கி (மாரி) யதும் எமது வடமராட்சி கிழக்கு உறவுகளைச் சந்திக்க வேண்டுமென்றால், முள்ளியூடாக வல்லிபுர ஆலயவீதிக்குச் சென்றே பயணிக்க வேண்டி ஏற்படும். போர்க் காலத்தில் இந்தப் பகுதி மக்களது பயணத்துக்கு வசதியாக இருந்த இந்த வீதி, இன்று இப்படிப் பாழடைந்து இருப்பதைப் பார்க்கும்போது, அபிவிருத்தி என்று மேடைப்பேச்சுப் பேசும் பெரியவர்களின் கண்ணில் இந்த வீதி இன்னமும் படவில்லையா? என்று எண்ணத் தோன்றுகிறது. ஊர் பெரியவர்களே; சமூக நலன் விரும்பிகளே, இளைஞர்களே, சம்பந்தப்பட்ட வீதியின் அவலத்தைப் போக்க முன்வந்து குரல் கொடுத்து எமது பழம்பெரும் வீதியைப் புனரமைப்புச் செய்விக்க உரிய தரப்பினருக்கு அழுத்தம் கொடுக்க் முன்வருவீர்களா?


அன்பு,
வரணி

# தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் மாதிரி அசைவுகளில் அதிக மாற்றம்

## ஜூன் மாத பணவீக்கம் 6.3 வீதமாகக் காணப்படுகிறது

2017 ஆண்டுஜூன்மாதத்துக்கானதேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்கள் அடிப்படையான வருடத்தின் மீது வருட பணவீக்கமானது கடந்த மே மாதத்தில் 7.1 வீதத்திலிருந்ததுடன் ஜூன் மாதத்தில் 6.3 வீதமாகக் ஆக குறைவடைந்துள்ளதென்பதான தகவலை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம் அமர சதரசிங்க வெளிப்படுத்தியுள்ளார்.

அதேவேளை ஜூன் மாதத்தில் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்கத்துக்கான பங்களிப்புகள் முறையே 3.9 வீதமாகவும், 2.4 வீதமாகவும் இருந்ததுடன் 2016 ஆண்டு ஜூன் மாதத்தில் பணவீக்கத்துக்கான மேற்படி இருபிரிவுகளில்இருந்தானபங்களிப்புகள் முறையே3.4வீதமாகவும்,3.1வீதமாகவும் பதிவாகியுள்ளது.




தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2013 = 100)

| வருடம் | மாதம் | சுட்டெண் | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | வருடத்தின் மீது வருடம் பணவீக்க% |
|---|---|---|---|---|
| 2016 | மார்ச் | 110.0 | -0.7 | 2.2 |
| | ஏப்ரல் | 111.6 | 1.5 | 4.3 |
| | மே | 113.7 | 1.9 | 5.3 |
| | யூன் | 116.1 | 2.1 | 6.4 |
| | யூலை | 115.2 | -0.8 | 5.8 |
| | ஒகஸ்ட் | 113.3 | -1.6 | 4.5 |
| | செப்ரெம்பர் | 113.5 | 0.2 | 4.7 |
| | ஒக்ரோபர் | 114.7 | 1.1 | 5.0 |
| | நவம்பர் | 116.6 | 1.7 | 4.1 |
| | டிசம்பர் | 118.0 | 1.2 | 4.2 |
| 2017 | ஜனவரி | 119.3 | 1.1 | 6.5 |
| | பெப்ரவரி | 119.9 | 0.5 | 8.2 |
| | மார்ச் | 119.5 | -0.3 | 8.6 |
| | ஏப்ரல் | 121.0 | 1.3 | 8.4 |
| | மே | 121.8 | 0.7 | 7.1 |
| | ஜூன் | 123.4 | 1.3 | 6.3 |

தேசியநுகர்வோர்விலைச்சுட்டெண்களின் மாதம் மீது மாத மாற்றங்களை ஒப்பிட்டு நோக்குகையில்கடந்தமேமாதத்தில்பதிவாகிய 121.8 என்ற மாற்றமானது ஜூன் மாதத்தில் 123.4 ஆக அதிகரித்துள்ளது. குறிப்பாக மே மாதத்துடன் ஒப்பிடுகையில் அதன்பின்பான ஜூன் மாதத்தில் 1.6 சுட்டெண் புள்ளி அல்லது 1.3 சதவீத அதிகரிப்பினை வெளிக்காட்டியுள்ளது.

உணவுப்பொருள்களின் செலவுப் பெறுமதியானது1.30வீதத்தாலும்மற்றும்உணவல்லாப்பொருள்களின்செலவுப்பெறுமதியானது 0.03 வீதத்தாலும் அதிகரித்துள்ள தன்மைகளே இந்த மாதாந்த மாற்றங்களுக்கான காரணங்களாக சுட்டிக்காட்டப் பட்டுள்ளன.

தவிரஉணவுப்பொருள்களின்செலவுப்பெறுமதியின் அதிகரிப்புக்கு காரணம் மரக்கறி, சின்னவெங்காயம், புதியமீன், அரிசி, தேங்காய், கருவாடு, வெள்ளைப்பூடுமற்றும்உருளைக்கிழங்கு, ஆகியவற்றின்விலைநிர்ணயங்களில்ஏற்பட்டஅதிகரிப்பேகாரணமெனவும், வாழைப்பழம், பப்பாசி, முட்டை, சீனி மற்றும் அன்னாசி போன்ற உணவுப் பொருள்கள்குறித்துசுட்டெண்ணில்குறைந்த செலவுப் பெறுமதி பதிவாகியுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ)

# உணவுப்பாதுகாப்பினைக்கொண்டிருக்கும் குடித்தனங்களின் விகிதாசாரம் அதிகரிப்பு

## தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தின் பணிப்பாளர் தெரிவிப்பு

இலங்கையின் மொத்தக் குடித்தனங்களுள்உணவுப்பாதுகாப்பினைக்கொண்டிருக்கும்குடித்தனங்களின் விகிதாசாரம் 90 வீதம் என தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அமர சதரசிங்க தெரிவித்துள்ளார்.

இதன்படிஇலங்கையின்மொத்தக்குடித்தனங்களுள்உணவுப் பாதுகாப்பின்மையை அண்மித்த குடித்தனங்களின் விகிதாசாரம் 0.9 வீதமாகவும்,ஓரளவு உணவுப் பாதுகாப்பின்மையைக் கொண்ட குடித்தனங்களின் விகிதாசாரம் 2.2 வீதமாகவும்.நடுத்தரஉணவுப்பாதுகாப்பின்மையைக்கொண்டகுடித்தனங்களின் விகிதாசாரம் 4.1 வீதமாகவும் மற்றும் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையைக் கொண்ட குடித்தனங்களின் விகிதாசாரம் 3.1 வீதமாகவும்காணப்படுகின்றது.

இலங்கையில் உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்நோக்கும் குடித்தனங்களுக்கான பாதுகாப்பின்மை நுழைவுச் சுட்டெண் பெறுமதியானது 9.20ஆகப்பதிவாகியுள்ளது.

தவிர மொத்தக் குடித்தனங்களுள் அவர்கள் முகங்கொடுத்த அனுபவங்களுக்கமைய குறைந்த தரத்திலான உணவினை நுகரும் குடித்தனங்களின் விகிதாசாரம் 3 வீதமாகவும்,குறைந்த உணவு வேளையொன்றைநுகரும் குடித்தனங்களின் விகிதாசாரம்3.7வீதமாகவும் காணப்படும்தன்மைகள் அளவீட்டுத் தரவுகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இது குறித்து மேலும் கருத்துரைத்துள்ள அவர்,

"செயற்றிறன் மற்றும் ஆரோக்கியமான வாழ்கைக்காக நாட்டின்சகலமக்களும்சகலசந்தர்ப்பங்களிலும் போதுமான அளவு பாதுகாப்பான மற்றும் போசாக்கான உணவைப் பெற்றுக் கொள்வதற்கு காணப்படும் ஆற்றல் உணவுப் பாதுகாப்பாகக்கருதப்படுகிறது.

இதன்பிரகாரம் உணவுப் பாதுகாப்பின்மையானது மேலும் பகுப்பாய்வு செய்யப்பட்டு நான்கு பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டது. அவை உணவுப் பாதுகாப்பின்மையை அண்மித்த, ஓரளவு உணவுப் பாதுகாப்பற்ற, நடுத்தர உணவுப் பாதுகாப்பற்ற மற்றும் கடுமையான உணவுப் பாதுகாப்பற்ற தன்மைகள் என்ற விதமாக அமைந்துள்ளன.

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (USAID) உணவு மற்றும் போசணை தொடர்பான தொழில்நுட்ப ஒத்துழைப்பை வழங்கும் வேலைத்திட்டம் (FANTA) என்பவற்றினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்நோக்கும் குடித்தனங்களின் அனுபவத்தைபெறுமானரீதியாக அளவிட்டுக் காட்டக்கூடிய முறைமையாக குடித்தன உணவுப் பாதுகாப்பின்மை நுழைவுச் சுட்டெண்கள் (Household Food Insecurity Access Scale HFIAS) அமைந்துள்ளன. இந்தப்பெறுமதிபூச்சியத்துக்கும் 24இற்கும்இடையில்காணப்படும்.

இங்கு பூச்சியம் என்பது குறைந்த உணவுப் பாதுகாப்பின்மையும், 24 என்பது மிகவும் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையும் நிலவுகின்றது என்பதை குறித்து நிற்கின்றன" - என்றார்.

(ஒ)

# வரவு செலவுத் திட்டம் செயற்றிறன் மிக்கதாக அமையும்

## பொது வருமானம் 16.5 வீதமாக அதிகரிக்கும்



" முதலீடு மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் குறித்தான மூலோபாயங்கள் கட்டமைவு பெறும்.

2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் செயற்றிறன் மிக்கதாக அமையுமென நிதிமற்றும்வெகுஜன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

குறித்த திட்டத்தின் படி மக்ரோ பொது நிதிக் கட்டமைப்பின் மொத்த உள்ளீட்டில் பொது வருமானத்தினை16.5வீதம்கூட்டுவதோடு பொது வரிச் செலவினை 5.3 வீதமாக குறைக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2018 ஆம் ஆண்டுதொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையான இந்தத் திட்டம் அரச உள்வாங்கல் திட்டங்களினுள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், குறித்த திட்டம் தொடர்பாக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஒ)

CSE
COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 212221455

24/7/2017
www.cse.lk

பங்குச்சந்தைத் தகவல்கள்

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | -5.39 | 6,664.12 | 6,669.51 |
| S&P SL20 | -5.84 | 3,813.39 | 3,819.23 |
| வியாபாரப்புரள்வு | | 502,638,848 | 516,771,136 |
| உள்நாடு:- கொள்வனவு | | 145,983,536 | 235,183,424 |
| விற்பனை | | 341,479,840 | 241,224,608 |
| வெளிநாடு:- கொள்வனவு | | 356,655,328 | 281,587,712 |
| விற்பனை | | 161,159,008 | 275,546,528 |




| கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 172.20 | 1,731,316 | 300,331,734 |
| வட்டவலை பிளான்ரேசன் | WATA.N | 35.00 | 866,090 | 30,308,862 |
| சம்பத் வங்கி | SAMP.N | 280.00 | 64,727 | 18,123,480 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.N | 226.00 | 56,102 | 12,836,901 |
| லங்கா ஓரிஸ் லீசிங் | LOLC.N | 110.20 | 108,170 | 12,036,714 |
| சிலோன் கோல்ஸ்ரோஸ் | CCS.N | 850.00 | 14,000 | 11,900,000 |
| செலான் வங்கி | SEYB.N | 95.00 | 88,143 | 8,372,609 |
| எல்பிட்டிய பிளான்ரேசன் | ELPL.N | 29.90 | 246,447 | 7,348,975 |
| சேவ்ரோன் லுப்பிரிக்கன் | LLUB.N | 149.00 | 39,130 | 5,837,086 |
| டோக்கியோ சிமேன் | TKYO.N | 76.00 | 63,960 | 4,805,111 |

- பங்குலாபம் -

சேவ்ரோன் லுப்பிரிக்கன் - ரூபா 2.00
கேன்வீனியன் புட் - ரூபா 4.00

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 295 |
| பரிமாற்றத்தில் | 241 |
| விலை உழைப் | 11.5 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்குலாப விளை | 2.6 |

# அதைச் செய் இதைச் செய்யாதே

வ.சி.ஸ்ரீஸ்கந்தராசா

பிள்ளைகளும், பெற்றோரும் இயல்பாகவும் இணக்கமாகவும் சிரித்து மகிழ்ந்திருப்பது; தங்கள் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் தடையின்றித் தாராளமாகப் பரிமாறிக் கொள்வது நல்ல பிள்ளை வளர்ப்புக்கதான தெளிவான அறிகுறிகள். இவற்றை மதிக்கும் பெற்றோரே தங்கள் பிள்ளைகள் சுயமாகச் சிந்திக்கவும் சுதந்திரமாகப் பேசவும் வழிவகுக்கின்றனர். குடும்பப் பொறுப்புகளோ பாரமோ சிறிதும் இன்றிப் பிள்ளைகளை வளர்ப்பதில் எதுவித அர்த்தமும் இல்லை அம்மா பிள்ளை, செல்லப் பிள்ளை என்ற பெயர் மட்டுமே எஞ்சி நிற்கும். ஏட்டுச்சுரைக் காய் கறிக்குதவாது. தந்தை தன் பிள்ளைகளுன் போதிய நேரம் செலவிடுவதில்லை. அதிகாரத் தோரணையை விடுத்து இயல்பாகவும் இனிமையாகவம் அதிகம் பேசிப் பழகுவதில்லை என்பதும் குறையே.



நல்ல சமூகக் கல்வி வழங்கும் பெற்றோர் தங்கள் பிள்ளைகள் படிக்கும் பத்திரிகைகள், பார்க்கும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், திரைப்படங்கள் கவனம். நம் சமூகத்தின் மிகப் பெரும் எதிரிகள் அதன் உள்ளிருக்கும் சமூக அநீதிகளே.



**பெற்றோரின் அக்கறை**

தங்கள் பிள்ளைகளுக்கு எந்தவிதக் கஷ்டமும் ஏற்பட்டு விடக்கூடாது எனவும், பொருளாதார நெருக்கடியோ வேறு பிரச்சினை களோ இருந்தாலும் தங்கள் பிள்ளைகளுக்கு அவை தெரிந்துவிடக் கூடாது, வருந்திவிடக் கூடாது எனவும் பெற்றோர் எண்ணுவது இயல்பானதே. இவ்வாறு அளவுக்கு மீறிப் பிள்ளை களைப் பாதுகாப்பது உண்மையான அன்புடமை ஆகாது. வளர வளர அறிவுக்கும் திறமைக்கும் ஏற்பக் குடும்பப் பொறுப்புக்களிலும் வீட்டு வேலைகளிலும் பிள்ளைகளை அதிகமாக ஈடுபடுத்துவது அவசியம் பிள்ளைகளிடம் மனம் திறந்து பேசும் வழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். இதனால் பிள்ளை களின் திறமைகளும் தன்னம்பிக்கையும் பொறுப்புணர்வும் அதிகரிக்கும். பிறரது உதவியின்றிக் காரியங்கள் ஆற்றிட ஊக்குவிப்பது தேவை பாராட்டும், ஊக்கமும், தன்னம்பிக்கை வளர உதவும் மேலும் பெற்றோர் நல்ல எடுத்துக்காட்டுக்களாகவும், சிறந்த முன்மாதிரிகளாகவும் விளங்குவது மிக முக்கியம். உண்ணும் முறை, உடுத்தும் முறை, பேசும் முறை, பழகும் முறை, நடைமுறை யாவற்றுக்கும் அடிப்படை பெற்றோரின் பயிற்சியே.

நல்ல சமூகக் கல்வி வழங்கும் பெற்றோர் தங்கள் பிள்ளைகள் படிக்கும் பத்திரிகைகள், பார்க்கும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், திரைப்படங்கள் எவை முக்கியம். எமது சமூகத்தின் மிகப் பெரும் எதிரிகள் அதன் உள்ளிருக்கும் சமூக அநீதிகளே. இவற்றை எதிர்த்திடும் துணிவை தங்கள் பிள்ளைகளுக்கு ஊட்ட வேண்டிய உண்மையான வீரம்.

**வாழ்வு உயர்ந்திட...**

மானிட வாழ்வு உயர்ந்து சிறந்திடச் சமயங்கள் பேருதவி புரிகின்றன. அன்னையும் பிதாவும் முன்னெறிதெய்வம்என்று சொல்வார்கள். இறை உணர்வையும் அறிவையும் ஊட்டும் முதலும் மிக முக்கியமான ஆசிரியர்கள் பெற்றோர்களே. மனிதநேயமே சமயத்தின் சாரம், மானிட மேம்பாடே உண்மையான இறைவழிபாடு எனும் தெளிவை பிள்ளைகளின் மனத்தில் உருவாக்குவது சமயக் கல்வியின் முக்கிய பணி. இறுதியாக பிள்ளைகளுக்கு அதைச் செய் இதைச் செய்யாதே என அதட்டுவதும் ஆணையிடுவதும் நல்ல பிள்ளை வளர்ப்புக்கு உகந்தது அன்று. அன்போடும் கனிவோடும் உரையாடி அமைதி பெறுவோம்.

---

# சீதனம் என்னும் தீமை

எல்லா உறவுகளுக்கும் ஊற்றாகிய பெற்றோர் - பிள்ளை உறவுகூட கணவன், மனைவி உறவுக்கு முன்னால் பின் தள்ளப்படுகின்றது. தாய்க்குப் பின் தாரமே. தனிக்குடித்தனம் தன்னம்பிக்கையிலும் ஒத்துழைப்பிலும் வளர்ந்து ஆளுமை முதிர்ச்சி அடையவும் சிறந்த உதவி புரிகின்றது.

நல்லதொரு குடும்பத்தில் "உனது" "எனது" என ஒதுக்கப்பட்டு இருப்பவை மிகச் சிலவே. கிட்டத்தட்ட எல்லாமே பொதுவானது. கணவன் சம்பாதிக்க வீட்டு விடயங்களைக் கவனிப்பது மனைவியே. பல குடும்பங்களில் ஏற்படும் பொருளாதாரப் பிரச்சினைகளுள் சம்பாத்தியம், சீதனம், சீர்வரிசை, வரதட்சணை என்பன முக்கிய காரணிகள்.

**பெண்ணின் செல்வம்**

சீதனம் என்பது ஸ்திரி + தனம் பெண்ணின் செல்வம். சீதனமும் சீர்வரிசையும் பெண்பிள்ளைகளுக்குச் சீதனமளித்து மீதி இருப்பின் ஆண்பிள்ளைகளுக்கு அளிப்பதே மரபு. சீதனமும் சீர்வரிசையும் வாழ்க்கை வசதிக்கும், வருங்காலப் பாதுகாப்புக்கும் பயன்படுகின்றன. சீதனம் கணவர் சார்ந்தவருக்கு உரியது இல்லை. எனவே அணியும் நகைகளாகவும் நிலபுலன்களாகவும் பொருள்களாகவும் வழங்கப்பெறுகின்றன. இன்று சீதனம் பெண்களுக்கு எமனாக வடிவெடுத்துள்ளது. வரதட்சணை. திருமணம் வியாபாரம் ஆகியுள்ளது. வரதட்சணை என்பது வரனுக்காகக் கொடுக்கப்படும் விலை. இது கணவன் பெற்றோருக்கு கூலிபோல் ஆகின்றது. வரதட்சணை முறை தீயது. கணவனையே வியாபாரப்பொருள் ஆக்கிவிடும். இது பெரும் கலாச்சாரச் சீரழிவு ஆகும். இது ஒழிந்தாலன்றி எமது சமூகம் சீர்பெறாது.

சீதனம் எளிதில் கைமாறி விடாத வகையில் அதன் பெரும் பகுதியைப் பணமாகத் தராது தங்கள் மகளின் பெயரில் எழுதப்பபெற்ற சொத்தாகவே பாதுகாக்கப்படுகின்றன. நீண்டகால வங்கி வைப்பு நிதியாகவோ பொருள்களாகவோ பெற்றோர் தருவது சீதனமாகும். பெண்வீட்டார் எவ்வளவு தர வேண்டும் என மாப்பிள்ளை வீட்டார் பேரம் பேசுவது நல்ல தல்ல. மனப்பொருத்தம், பத்துப் பொருத்தம் பாவங்கள் வீதம் கிரகநிலை யாவும் சரி செய்துவிட்டு பேரம் பேசுதல் அநாகரிகமே. இவ்வாறாக பேரம் பேசி பட்டியலிடும் எந்த ஆணையும் பெண்கள் திருமணம் செய்வது நல்ல தல்ல. இதை விழிப்புணர்வுப் பணியாக முன்னெடுப்பது அவசியம்.



**தாய்க்குப் பின் தாரம்**

எல்லா உறவுகளுக்கும் ஊற்றாகிய பெற்றோர் - பிள்ளை உறவு கூட கணவன் மனைவி உறவுக்கு முன்னால் பின் தள்ளப்படுகின்றது. தாய்க்குப் பின் தாரமே. தனிக்குடித்தனம் தன்னம்பிக்கையிலும் ஒத்துழைப்பிலும் வளர்ந்து ஆளுமை முதிர்ச்சி அடையவும் சிறந்த உதவி புரிகின்றது. பொருளாதாரத் துறையில் பெற்றோரோ பிள்ளைகளோ சார்ந்திருப்பின் தனிக்குடித்தனத்திற்கு தடை இடுவதில் வியப்பு இல்லை. எனவே தனிக்குடித்தனம் கூடி வாழும் குடும்பத்தை விரிக்கும் ஒரு சுயநலச் செயல் என எண்ணப் படுகிறது.

# சூட்டுச் சம்பவத்தை பொலிஸார் திசை திருப்ப முயல்கின்றனரா?

வடக்கில் இடம்பெறுகின்ற குற்றச் செயல்கள் தொடர்பாக, குற்றவாளிகளுடன் கை கோர்த்து, அவர்களுக்குச் சாதகமாகவும், தந்திரமாகவும் இதுநாள் வரைக்கும் ஒன்றுக்கொண்டு முரணான கருத்துக்களைத் தெரிவித்து வந்த பொலிஸார், யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் மீதான துப்பாக்கிச் சூட்டுச் சம்பத்திலும் அதையே செய்கின்றனர் எனத் தெரிகின்றது. அதாவது, நீதித்துறையின் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அராஜகத்தைக் கூட பொலிஸார் பொம்மை விளையாட்டு என்கின்றனர். மது போதையில் வந்த இருவருக்கிடையில் இடம்பெற்ற மோதலே துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்குக் காரணம் எனவும், மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் இலக்குவைக்கப்படவில்லை எனவும் அவர்கள் புதுக்கதை விடுகின்றனர். நீதிபதி இளஞ்செழியன் கடந்த காலங்களில் இடம்பெற்ற வழக்குகளின் போது பொலிஸ் உயர் அதிகாரிகளைக் கூடத் தயவு தாட்சண்யமின்றித் தண்டனைக்கு உட்படுத்தியிருந்தார். எனவே பொலிஸ் என்றால் என்ன என்று அவருக்குக் காட்ட வேண்டும் என நினைத்து பொலிஸார் அவர் மீது மேற்கொள்ளப்பட்ட இந்த சூட்டுச் சம்பவத்தைத் திசைதிருப்புகின்றனர் என மக்கள் பேசிக்கிகொள்வதை அவதானிக்க முடிகின்றது. யாழ்ப்பாண வரலாற்றைப் பொறுத்த வரை மிக நீண்டகாலமாக மக்களுக்கு நீதி கிடைக்கவில்லை குற்றவாளிகள் தப்பித்துச் சென்றனர். பொலிஸார் மீதும், பொது மக்கள் நம்பிக்கையற்று இருந்தனர். வாள் வெட்டு, கொள்ளை, கொலை, கற்பழிப்பு, கலாசார சீர்கேடு என அனைத்தும் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியனால் முளையிலேயே கிள்ளியெறியப்பட்டன. குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டார்கள், மக்களுக்கு நீதித்துறை மீது ஓரளவு நம்பிக்கை வந்தது. எனினும் பொலிஸாருக்கும் மக்களுக்கும் இடையில் நல்லுறவு ஏற்பட்டதாக இல்லை. காரணம் பொலிஸார் எப்போதும் நீதி வழியில் நடந்து கொண்டதில்லை. இதனாலேயே இந்த சூட்டுச் சம்பவத்திலும் பொலிஸார் பொய் கூறுகின்றனர் என மக்கள் திடமாக நம்புகின்றனர்.




"நான் இந்தப் பாதையூடாகவே செல்வது வழமை எனவே அவர்கள் இதை அவதானித்து இந்தச் சம்பத்தை மேற்கொண்டிருக்கலாம், கடுமையான வழக்குகளைத் தற்போது கையாள்கின்றேன், துப்பாக்கிச் சூடு நடத்தியவர் துப்பாக்கியால் சுடுவதில் நன்கு பரீட்சயமானவர் அவர் துப்பாக்கியை லோட் பண்ணிய விதத்தை நான் அவதானித்தேன்." இவ்வாறு பல விடயங்களை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் துப்பாக்கிச் சூட்டு சம்பத்தின் பின்னர் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார். எனினும் பொலிஸ் தரப்பு மது போதையில் வந்தவர்கள் தான் சுட்டார்கள் என்கிறது. மது போதையில் வந்தவர் சாதாரண நபர் என்றால் அவருக்கு எப்படித் துப்பாக்கி சுடுவதில் அனுபவம் இருக்க முடியும்?

இவற்றை எல்லாம் வைத்து பார்க்கும் போது பொலிஸார் இந்த சூட்டுச் சம்பவத்தை திசை திருப்புவதோடு, நீதியை நிலைநாட்ட மறுக்கின்றனர் என்றே எண்ணத் தோன்றுகிறது.

## வரலாற்றில் இன்றைய தினம் 25.07.2017

306-உரோமப் பேரரசராக முதலாம் கொன்ஸ்ரன்ரைன் அவரது படைகளால் அறிவிக்கப்பட்டார்.

1547-இரண்டாம் ஹென்றி பிரான்ஸ் அரசராக முடிசூடினார்.

1593-பிரான்சின் அரசர் நான்காம் ஹென்றி வெளிப்படையாக உரோமன் கத்தோலிக்கத்துக்கு மாறினார்.

1603-ஆறாம் ஜேம்ஸ் இங்கிலாந்து அரசராக முடி சூடினார்.

1609-சிவென்சர் ஆங்கிலக் கப்பல் வேர்ஜினியா பயணத்தின் போது புயல் காரணமாக மூழ்காதிருப்பதற்காக திட்டமிட்டுக் கரை ஒன்றுக்குச் செலுத்தப்பட்டவேளை பேர்முடாவை அடைந்து அங்கு புதிய குடியேற்றம் உருவாக்கப்பட்டது.

1814-கனடா மீதான அமெரிக்கத் தாக்குதல் முறியடிக்கப்பட்டது.

1894-சீனக் கப்பல்மீது ஜப்பான் சூடு நடத்தியதையடுத்து முதலாவது சீன ஜப்பானியப் போர் தொடங்கியது.

1957-துனிசியா சுதந்திரம் பெற்றது.

1961-பேர்லின் மீதான எந்தவொரு தாக்குதலும் நேட்டோ மீதான தாக்குதலாகுமென தமது உரையில் அமெரிக்க அரசதலைவர் றிச்சாட் நிக்ஸன் வலியுறுத்தினார்.

1979-சினாய் பலைவனத்தின் மற்றொரு பகுதியும் அமைதியான முறையில் எகிப்திடம் இஸ்ரேலால் மீளக் கையளிக்கப்பட்டது.



1993 -லெபனானுக்கு எதிராக மிகப்பெரிய தாக்குதலை இஸ்ரேல் தொடுத்தது.

1983-37 தமிழ் அரசியற் கைதிகள் வெலிக்கடைச் சிறையில் சக சிங்களக் கைதிகளால் படுகொலை செய்யப்பட்டனர்.

1984-விண்வெளியில் மிதந்த முதல் பெண்மணியானார் சல்யூட் 7 விண்வெளி வீராங்கனையான ஸ்வெற்லானா சவிற்ஸ்காயா.

1993 -லெபனானுக்கு எதிராக மிகப்பெரிய தாக்குதலை இஸ்ரேல் தொடுத்தது.

2000 - பரிஸ் சாள்ஸ் டீ கோல் வானூர்தி நிலையத்தில் ஏயர் பிரான்ஸ், கொங்கோட் வானூர்தி விபத்துக்கு உள்ளாகியதில் 113 பயணிகள் உயிரிழந்தனர்.

## ஆடி மாத பலன் 2017

## விருச்சிகம்

### விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை

மற்றவர்களை அறிந்து அவர்களுக்கேற்ப நடந்து கொண்டு காரியம் சாதிக்கும் திறமை உடைய விருச்சிக ராசியினரே! இந்த மாதம் உங்களின் சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரியவெற்றி உண்டாகும். எந்த ஒரு வேலையிலும் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். உங்களுடன் பக்கபலமாக ஒருவர் இருந்து தேவையான உதவிகளைச் செய்வார். நண்பர்கள் மூலம் புதிய வசதிகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

தொழில், வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறும். தடைகள் விலகும். தேவையான பணவசதி கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். புதிய பொறுப்புக்களும் அதனால் வருமானமும் இருக்கும். எதிர்ப்புக்கள் அகலும்.

குடும்பாதிபதி குரு விரயஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குடும்பத்தில் சுப காரியம் நடக்கும். பூமி மூலம் இலாபம் கிடைக்கும் சகோதரர்களால் நன்மை உண்டாகும். வாழ்க்கைத் துணைக்கு தேவையான வசதிகளைச் செய்து தருவீர்கள். வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்குவீர்கள். ராசியாதிபதி செவ்வாயின் சஞ்சாரம் எல்லா வகையிலும் நன்மையையும் மகிழ்ச்சியையும் தரும்.

**பெண்களுக்கு:** திறமையான பேச்சின் மூலம் காரிய வெற்றி உண்டாகும். எதிர்பார்த்த பணவரவு இருக்கும். பொறுப்புக்கள் அதிகரிக்கும்.

**கலைத்துறையினருக்கு:** கிடைத்த வாய்ப்பைத் தவறவிடாமல் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது. எதிலும் சாதகமான பலன் கிடைக்கும். பயணங்கள் செல்ல நேரிடலாம். மனத் திருப்தியுடன் செயலாற்றுவீர்கள். புத்திசாதூரியம் மூலம் காரிய வெற்றிகிடைக்கும். கொடுத்தவாக்கை நிறைவேற்றுவதன் மூலம் மற்றவர்களிடம் மதிப்புக் கூடும்.

**அரசியல்துறையினருக்கு:** பாராட்டுக்கிடைக்கும். உடல் சோர்வு உ[illegible]டாகும். ஆன் மிக நாட்டமும், மன தைரியமும் உங்க[illegible]க்கு உற்சாகத்தைக் கொடுக்கும். கட்சியில் முன்னேற்ற[illegible] காணப் புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள்.

**மாணவர்களுக்கு:** கல்வியில் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கும். மனமகிழ்ச்சி உண்டாகும். சிறப்பாகச் செயல்படுவீர்கள்.

**பரிகாரம்:** செவ்வாய்க்கிழமை விரதம் இருந்து நவக்கிரகத்தில் செவ்வாய் பகவானுக்கு தீபம் ஏற்றி வழிபட எல்லா நன்மையும் உண்டாகும். உடல் ஆரோக்கியம் கூடும்.

**விசாகம் 4ஆம் பாதம்:** இந்த மாதம் கடன் பிரச்சினைகள் தொல்லை தராமல் இருக்கும். எதிர்பார்த்த பண வசதி கிடைக்கும். உங்களது செயல்களுக்கு இருந்த எதிர்ப்புக்கள் நீங்கும். வழக்கு விவகாரங்களில் சாதகமான போக்கு காணப்படும்.

**அனுஷம்:** இந்த மாதம் தொழில் வியாபாரம் சுமாராக நடக்கும். எதிர்பார்த்த பணவரத்து இருந்தாலும் வியாபாரம் தொடர்பான செலவுகள் கூடும். போட்டிகள் தொல்லை தராமல் இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பணிச் சுமை குறைந்து காணப்படுவார்கள். திறமைக்குப் பாராட்டுக் கிடைக்கும்.


**கேட்டை:** இந்த மாதம் குடும்பத்தில் இருப்பவர்களுக்கு இருந்து வந்த நோய் நீங்கும். அவர்களது நலனில் அக்கறை காட்டுவீர்கள். பிள்ளை களிடம் கவனமாக எதையும் எடுத்து சொல்வது நல்லது. பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சினை தீரும்.

### நாளை

**26.07.2017**
புதன்கிழமை
**ஆடி - 10**

திதி: திருதியை மு.ப.11.51 வரை
நட்சத்திரம்: மகம் மு.ப. 08.47 வரை
சுபநேரம்: 04.32–06.02 வரை
ராகுகாலம்: 12.02–01.32 வரை

நாகசதுர்த்தி விரதம், ஆடிப்பூரம்



# கோலிசோடா -2 இல் நடிக்கிறார் சமுத்திரக்கனி

தமிழ் திரையுலகில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள படமான கோலிசோடா- 2 இல் முன்னணி நடிகர் சமுத்திரக்கனி நடிக்கவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

பலவெற்றிப் படங்களுக்கு ஒளிப்பதிவு செய்த விஜய் மில்டன் தமிழில் 'அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது', 'கோலிசோடா', பத்து என்றதுக்குள்ள' 'கடுகு' உள்ளிட்ட படங்களை இயக்கியிருக்கிறார்.

அவரது இயக்கத்தில் கடந்த 2014ஆம் ஆண்டு வெளியாகி நல்ல வரவேற்பைப்பெற்ற படம் கோலிசோடா. திரைக்கு வந்திருந்த காலத்தில் வெகுவாகக் கவர்ந்த அந்தப் படம், அனைத்துத் தரப்பாலும் பாராட்டும்படி இருந்தது. இந்த நிலையில், 'கோலிசோடா' படத்தின் இரண்டாம் பாகம் தற்போது உருவாகி வருகிறது.

இந்தப் படத்தில் இந்தியாவின் தேசிய விருதினை வென்ற நடிகரும், இயக்குநருமான சமுத்திரக்கனி முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க இருக்கிறார். சமுத்திரக்கனி இந்தப் படத்தில் பணி நீக்கம் செய்யப்பட்ட பொலிஸ் அதிகாரியாக நடிக்கவுள்ளார் என்று சில தகவல்கள் வந்துள்ளன.

---

மிகையாக குடித்துவிட்டு இரவு வெகு நேரம் கழித்து வந்த கணவனுக்கு கதவை திறக்க மறுத்தாள் மனைவி .......
யோசித்தான் கணவன் ...
பத்து நிமிடம் கழித்து வாசல் அழைப்பு மணி அடித்தது ...
''யாரு என்று கேட்டாள் மனைவி'' ''உலகின் மிகச் சிறந்த அழகிக்கு புது வருட பரிசு கொண்டு வந்திருக்கிறேன்" என்றான் அவன்.
கதவை திறந்தவள் அவன் வெறும் கையுடன் இருப்பதை பார்த்து "எங்கே புது வருட பரிசு"? என்று கேட்டாள் .
அவன் " எங்கே அந்த உலகின் மிகச் சிறந்த அழகி"? என்று கேட்டான்.
அப்புறம்............

---

ஆண்களில் இரு ரகம்...



1. மனைவியை 'டீ' போட்டு கூப்பிடுபவர்கள்...
2. மனைவியை 'ரீ' போட்டுட்டு கூப்பிடுபவர்கள்...

---

என் பையனுக்கு எந்தக் கெட்ட பழக்கமும் கிடையாது, போன்ல கேம்கூட விளையாட மாட்டான்... பரவாயில்லையே பையன் என்ன செய்யுறான்?



இப்போதானே பிறந்திருக்கான், பால் குடிச்சிட்டு தூங்க ஆரம்பிச்சிடுவான்...

---

எதுக்கு ஐயா சோறு கேட்டா காசு குடுக்கிறீங்க...?




என் கஷ்டம் என்னோடயே போகட்டும் நீ கடையில போய் சாப்பிட்டுக்கோ...



---

பூமியில் தோன்றிய முதல் இன்ஜினியர்



தூக்கணாங் குருவி

---



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** எதிலும் நிதானமாக இருப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். இஷ்ட தெய்வ வழிபாடு நிம்மதிக்கு வழிவகுக்கும்.

**இடபம்:** மனதில் நேர்மை எண்ணம் அதிகரிக்கும். நற்செயலில் ஈடுபட்டு சமூகத்தில் புகழ் பெறுவீர்கள். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் ஆதரவைப் பெறுவர்.

**மிதுனம்:** எதிர்பார்ப்பு நிறைவேற தாமதம் ஆகலாம். சிறிய பணி கூட சுமை போல தோன்றும். தொழில் வியர்பாரம் சிறக்க கூடுதல் முயற்சி தேவை. உறவினரால் செலவு உண்டாகும்.

**கடகம்:** இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி வியப்பூட்டும் வகையில் அதிகரிக்கும். நிலுவைப் பணம் கிடைக்கும். மனைவி, பிள்ளைகள் விரும்பியதை வாங்கித் தருவீர்கள்.

**சிங்கம்:** மனதில் இருந்த கவலை தீரும். தொழில் வியாபாரத்தில் இலாபம் சீராக இருக்கும். குடும்பத்தினரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள், உறவினர்களின் வருகையால் மகிழ்ச்சி நிலைக்கும்.

**கன்னி:** நண்பர்கள் எதிர்பார்ப்புடன் அணுகுவர். தொழில் வியாபாரத்தில் கடின உழைப்புத் தேவைப்படும். அளவான பணவரவு கிடைக்கும். பெண்கள் ஆடம்பரப் பொருள்களை வாங்குவர்.

**துலாம்:** எண்ணத்திலும் பேச்சிலும் நிதானம் அவசியம். தொழிலில் விற்பனையும், இலாபமும் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர். பிள்ளைகளின் வழியில் செலவு ஏற்படலாம்.

**விருச்சிகம்:** தொடங்குகிற பணி முழு அளவில் வெற்றி பெறும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். பெண்களுக்கு குடும்பத் தேவை தாராள செலவில் நிறைவேறும்.

**தனுசு:** செயல்களில் சுறுசுறுப்பு நிறைந்திருக்கும். அரசு தொடர்பான உதவி பெற அனுகூலம் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சியால் ஆதாயம் கூடும். குடும்பத்தினருடன் விருந்தில் பங்கேற்பர்.

**மகரம்:** பணியில் கூடுதல் பொறுப்பு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலம் பாதுகாப்பது நல்லது. மிதமான இலாபம் கிடைக்கும். பெண்களுக்கு பிள்ளைகளின் வழியில் பணத்தேவை அதிகரிக்கும்.

**கும்பம்:** முக்கிய செயலை பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உள்ள சிரமங்களை உடனடியாகச் சரி செய்வது நல்லது. பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**மீனம்:** அலைச்சல் தந்த பணி எளிதாக நிறைவேறும். தொழில் வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும். இலாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

---

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | 2 | | 9 | | 7 | |
| 8 | | | | | | | | 1 |
| | | 6 | | | | 9 | | |
| 5 | | | 9 | | 1 | | | 4 |
| | 6 | | | 3 | | | 8 | |
| 3 | | | 8 | | 2 | | | 7 |
| | | 5 | | | | 6 | | |
| 7 | | | | | | | | 5 |
| | 8 | | 5 | | 3 | | 4 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 6 | 9 | 8 | 5 | 4 | 7 |
| 8 | 4 | 9 | 2 | 7 | 5 | 3 | 6 | 1 |
| 6 | 7 | 5 | 4 | 1 | 3 | 8 | 2 | 9 |
| 9 | 5 | 4 | 1 | 3 | 2 | 7 | 8 | 6 |
| 3 | 1 | 8 | 7 | 6 | 4 | 2 | 9 | 5 |
| 7 | 6 | 2 | 8 | 5 | 9 | 4 | 1 | 3 |
| 2 | 3 | 6 | 9 | 4 | 7 | 1 | 5 | 8 |
| 4 | 9 | 7 | 5 | 8 | 1 | 6 | 3 | 2 |
| 5 | 8 | 1 | 3 | 2 | 6 | 9 | 7 | 4 |

நேற்றைய சுடோக்கின் விடை

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

---

தேவதை போல ஒரு மனைவி கிடைக்க வேண்டும் என்பதைத் தாண்டி, கிடைக்கும் மனைவியை தேவதை போல பார்த்து கொள்ள விரும்புகிறவன் தான் உண்மையான ஆண்....!

# புத்திசாதுரியம்

சிங்கமும், கழுதைப்புலியும் ஒரு பசுவைப் பிடித்து வைத்திருந்தன. ஒரு நாள் சிங்கம் பசுவைக் கொன்றது. கழுதைப் புலி தனது குட்டியை சிங்கத்திடம் அனுப்பி தனக்கான பங்கைக் கேட்டது. சிங்கமோ கழுதைப்புலியின் பங்காக பசுவின் குடலை மட்டும் கொடுத்தனுப்பியது. கழுதைப் புலியோ "நீ ஏன் குடலைக் கொணடு வந்தாய்? அரைவாசிப் பங்கல்லவா எமக்குரியது" என்று கூறியது. குட்டிக் கழுதைப் புலியோ "சின்னப் பயல் நான் பெரியவர்கள் கொடுப்பதைத் தானே கொண்டு வர முடியும். நான் எப்படி சிங்கத்தோடு விவாதிக்க முடியும்?" என்று கூறியது. அதைக் கேட்டு கோபமடைந்த கழுதைப் புலி, சிங்கம் கொடுத்தனுப்பிய குடலோடு சிங்கத்தைப் பார்க்கப் போனது. சிங்கம் பசுவின் இறைச்சியை உண்ட களைப்பில் குகைக்குள் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தது. கழுதைப் புலி வந்ததைக் கண்டு சிங்கம் கண்களை அச்சமூட்டும் வகையில் வைத்துக் கொண்டு "ஏன் இங்கே வந்தாய்?" என கர்ஜித்தபடி கேட்டது. பசுவில் பாதிப் பங்கைக் கேட்க வந்த கழுதைப்புலி, தற்போது தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டு பேசியது. "சிங்க ராசாவே! நீங்கள் குடல் அனுப்பியதற்கு மிக்க நன்றி. ஆனால் அதனை உங்களிடமே சேர்க்க முடிவு செய்து விட்டேன்" என்று கூறி குடலை சிங்கத்திடம் ஒப்படைத்து விட்டுத் தன் இருப்பிடம் திரும்பியது கழுதைப் புலி. அப்போது "பசுவில் பாதி கேட்கப் போன நீங்கள் இருந்ததையும் கொடுத்து விட்டு வருகிறீர்களே! ஏன்? என்று அதனது குட்டி கேட்டது. "மகனே! பசுவில் பாதி கேட்கத்தான் சிங்கத்திடம் சென்றேன். ஆனால் அங்கு போன பின்பு தான் தெரிந்தது நான் போன நேரம் சரியில்லை என்று. ஏனெனில் அங்கே சிங்கம் மிகக் கொடூரமாக தன் பிடரிமயிரைச் சிலிர்த்துக் கொண்டு நின்றது. அதன் அந்த அசுரத் தோற்றத்தைக் கண்டு நான் நடுங்கி விட்டேன். எனவே நான் கேட்டு அதனால் ஏதும் விபரீதம் நிகழ்வதற்குள் சமயோகிதமாக எனது பங்கையும் கொடுத்து சிங்கத்தைப் பாராட்டி விட்டு வந்தேன். எல்லாம் நன்மைக்காகத்தான் " என்றது தாய்க் கழுதைப் புலி.






**எவ்விடயத்திலும் சமயாசந்தர்ப்பம் அறிந்து நடந்து கொள்ளல் வேண்டும்.**




## எமது அதிபர்

- ★ ஒரு பாடசாலையின் நிர்வாகத் தலைவரை அதிபர் என்போம்.
- ★ எங்கள் அதிபர் அருமையான மனிதர்.
- ★ அன்பும் அறிவும் அடக்கமும் மிக்கவர்
- ★ பிறரை மதிக்கும் பண்புள்ளவர்.
- ★ மாணவர்களையும் பெற்றோரையும் பெரிதாக மதிப்பவர்.
- ★ பிள்ளைகளது கல்வியில் ஆர்வம் காட்டுபவர்.
- ★ பாடசாலையின் உயர்வுக்காக என்றும் உழைப்பவர்.
- ★ ஆசிரியர்களின் கற்பித்தல் தேவைகளை அறிந்து உதவுபவர்.
- ★ மாணவரின் மேலதிக கற்றல் நடவடிக்கைகளில் மிகுந்த ஆர்வம் காட்டுவார்.
- ★ பாடங்களோடு இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் கவனம் செலுத்துபவர்.
- ★ எங்கள் பாடசாலையின் உயர்வில் மிகுந்த அக்கறை காட்டுபவர்.
- ★ ஏழை மாணவர்களின் நிலையை அறிந்து அவர்களுக்கு உதவுபவர்
- ★ கைகளில் பிரம்பு இல்லாது வகுப்புகளில் உலா வருவார்.
- ★ ஆசிரியர்கள் சமூகமளிக்காத வகுப்புகளில் தானே சென்று பாடங்களை நடத்துவார்.
- ★ எங்கள் அதிபர் எந்தப் பாடத்தையும் மிக இலகுவாகக் கற்பிப்பார்.
- ★ மாணவர்களின் பெற்றோரை மாதம் ஒரு முறையாவது சந்தித்து மாணவர்களின் கல்வி, ஒழுக்கம் பற்றி உரையாடுவார்.
- ★ அவரை அதிபராக அடைவதற்கு நாங்கள் கொடுத்து வைத்தவர்கள்.
- ★ எமது அதிபர் நீடு வாழ இறைவன் அருள் புரிவான்.

இரண்டு படங்களுக்கும் இடையே 5 வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள்.



## அகந்தை

அழகி என்று றோசாவுக்கு
அகந்தை வந்தது
உலகம் தன்னை மதிக்குதென்று
உவகை கொண்டது

விரிந்த றோசா வாடாமல்லி
மலரைப் பார்த்தது
சிரிப்பினோடு "நீயா? நானா?
அழகு?" என்றது

அழகு என்றும் நிலைப்பதில்லை
அறிந்திடு இன்று
அழகினுக்கு ஆபத்துண்டு
அறிந்திடு நின்று

தேனை உண்ண வண்டிரண்டு
தேடிப் பறந்தது
வானைப் பார்த்த றோசா மீது
வந்தமர்ந்தது

ரண்டு மூன்று நாள்களிலே
தழ்களைக் கொட்டி
ந்திரமாய் அழகிழந்து
ன்றது றோஜா

ர்த்திவற்றை வாடாமல்லிப்
உரைத்தது
ாரையுமே பகிடிக்கேனும்
கழக் கூடாது



## சந்தை



பொருள்களை விற்பனை செய்ய வருவோரும், அவற்றை வாங்க வருவோரும் கூடுமிடம் சந்தை. சந்தைகளில் வாரம் ஒரு முறை கூடும் சந்தை, வாரச் சந்தை என்றும், தினமும் கூடும் சந்தை நாள் சந்தை என்றும் அழைக்கப்படும். சிறு நகரங்களிலும் கிராமப் புறங்களிலும் வாரச் சந்தை கூடும். ஓர் ஊரில் வாரந்தோறும் ஒரு குறிப்பிட்ட கிழமையில் தான் வாரச் சந்தை கூடும். அருகில் உள்ள மற்றோர் ஊரில் வேறு ஒரு கிழமையில் கூடும். பெரிய நகரங்களில் வாரச் சந்தை மட்டுமன்றி, நாள்தோறும் கூடும் சந்தையும் இயங்கும். இதை விட ஒரு நாளில் காலைச் சந்தை மாலைச் சந்தையென இரு வேளைகளில் கூடும் சந்தைகளும் உள்ளன. பகல் நேரத்தில் கூடுவதை அங்காடி என்றும், மாலையில் கூடுவதைஅல்லங்காடி என்றும், அழைப்பர். சந்தைகளில் உணவுப் பொருள்களுக்கான சந்தை மட்டுமற்றி கால் நடைகளுக்கான சந்தையும் பல ஊர்களில் இயங்கும். ஆடு, மாடு, கோழி என்பன இங்கு விற்பனை யாகின்றன. சந்தைப்பகுதிகளில் காய்கறி பழவகைகளுக்கும் மீன், இறைச்சி வகைகளுக்கும் தனித்தனியான இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கும். இங்கு உள்ளூர்க் கடைகளை விடவும் விலை மலிவாக பொருள்களை வாங்கலாம். அத்தோடு தரத்திலும் சிறந்த பொருள்களைப் பார்த்து வாங்கலாம். சந்தைகளில் பொருள்களை விற்பனைக்காக கொண்டு வருவோரிடம் உள்ளூராட்சி மன்றங்கள் வரி அறவிட்டு பொது மக்களுக்காக பல வசதிகளைச் செய்து கொடுக்கின்றன.

உதாரணமாக உற்பத்திப் பொருள்களை வெயில் மழையில் நின்று காக்க கொட்டகை, கட்டட வசதிகளையும், பொருள்களை வாங்க வருவோரின் துவிச் சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் பாதுகாப்பாக நிறுத்துவதற்கு பாதுகாப்பு வசதிகளையும் செய்து கொடுக்கின்றன. சந்தையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பொருள்களைக் கொள்வனவு செய்யலாம். இங்கு இருந்தே உள்ளூர் விற்பனை நிலையங்களுக்கு பொருள்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன.

*பாடசாலை...*
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரில் கலந்த மர்மப் பொருள் காரணமாக அவர் மயக்கமுற்ற நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் கிளிநொச்சி, ஆனந்தநகரைச் சேர்ந்த தரம் 10ல் கல்வி கற்கும் துசியந்தினி (வயது - 15) என்ற மாணவியே இவ்வாறு பாதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த மாணவியே அவரது வகுப்பில் பரீட்சைகளில் தொடர்ச்சியாக முதல் நிலையைப் பெற்று வந்தார். இதன் காரணமாகவே இவ்வாறு இடம்பெற்றிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டது.

இந்த மாணவியின் பாடசாலை புத்தகப் பையில் கடந்த வாரம் ஓர் கடிதம் வைக்க காணப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்தில் "நீ தொடர்ந்தும் முதல் நிலையைப் பெற்றால் கொல்லப்படுவாய்" என எழுதிக் காணப்பட்டுள்ளது. எனினும் அந்த நடவடிக்கை நண்பர்களின் சேட்டை என எண்ணி அதனை கவனத்தில்கொள்ளாத நிலையிலேயே நேற்றைய தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

"இந்தச் சம்பவம் தொடர்பாக எனக்கு அறிவிக்கப்பட்டது. அது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். கடந்த வாரம் கண்டெடுக்கப்பட்ட கடிதத்தை அப்போது பாரதூரமாகக் கருதவில்லை. தற்போது இந்தச் சம்பவம் இடம்பெற்றதையடுத்து அனைத்தும் ஆராயப்படுகின்றன. எனினும் தெய்வாதீனமாக மாணவி தற்போது குணமடைந்து வருகின்றார். அவர் நாளை (இன்று) பரீட்சை எழுதவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது" என்று அந்தப் பாடசாலையின் அதிபர் தெரிவித்தார்.

(வ-101)

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1383
சீட்டிழுப்பு திகதி 2017.07.24
வெற்றி இலக்கங்கள்
09 10 31 47 J
04 16 37 53
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 15,720,892/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் ▶ 680
சீட்டிழுப்பு திகதி ▶ 24.07.2017
ஊதா
A 50 55 62 68
சுப்பர் ஜக்பொட்
ரூ. 53, 544, 448/=
வெல்லப்படவில்லை
08 16 21 38
பச்சை நிற டிக்கட்டுகள் 27.07.2017 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 2907 திகதி 24.07.2017
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
17 22 35 39 Z
போனஸ் இல. 59
புதன் கிழமை ஜக்பொட் 33, 111, 670/-
இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்
02 27 68 75
ஊதா நிற டிக்கட்டுக்கள் 2017.07.26 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே : 011 4824824
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
www.dlb.lk

## மரண அறிவித்தல்

மலர்வு 30 01 1950



உதிர்வு 23 07 2017

### திருமதி வசந்தராணி கனகநாயகம்


யாழ் நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும் கொழும்பு கொட்டாஞ்சேனையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி வசந்தராணி கனகநாயகம் 23.07.2017 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற கந்தையா கனகநாயகத்தின் அன்புமனைவியும் காலஞ்சென்ற ஏகாம்பரநாதன் நடேஸ்வரி (நாயன்மார்க்கட்டு ஆயுள்வேத வைத்தியசாலை) தம்பதியினரின் புதல்வியும், காலஞ்சென்ற கந்தையா அன்னப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும், கௌதமன் ராதலன் பகீரதி ஆகியோரின் தாயாரும், சகிலா கோமதா ஞானானந்தன் ஆகியோரின் மாமியாரும், பவித்ரா ஹர்ஷிகா அருளகன் ஆதன், ஆதேஸ் ஆகியோரின் பேத்தியும், சுலோச்சனாதேவி Dr. ஸ்ரீஜெயதேவி ஜெயந்தி மற்றும் காலஞ்சென்றவர்களான Dr. சந்திரோதயம் Dr. தருராஜன் Dr. உமாகாந்தன் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 26.07.2017 ஆம் திகதி புதன் கிழமை காலை 9 மணிமுதல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு தொடர்ந்து சமயக்கிரியைகள் இடம்பெற்று மாலை 3.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கனத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல் - குடும்பத்தினர் - 0112331100

## மரண அறிவித்தல்

### நல்லையா உதயகுமார் (குமார்)



தாவடியைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா உதயகுமார் நேற்று (24.07.2017) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லையா மற்றும் இராசமணி தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான அருணாசலம் - மகேஸ்வரி தம்பதியரின் மருமகனும் தவமணியின் அன்புக்கணவரும் வதனராஜ் (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை), வதனா (கனடா), வினோஜா (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஸ்ரீதேவி (பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை), தினேஸ்குமார் (கனடா), சுஜீவன் (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமனும் அபிர்ஷன், ஆத்மிகன், யாதவி ஆகியோரின் பேரனும் இரத்தினேஸ்வரி, முத்துலிங்கம், விஜயகுமார் (பிரான்ஸ்), விக்னேஸ்வரன் (லண்டன்), சந்திரேஸ்வரி (பிரான்ஸ்), நாகேஸ்வரி, நகுலேஸ்வரி (பிரான்ஸ்), சிவகுமார் (இத்தாலி), விக்னேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச்சகோதரனும் சண்முகலிங்கம், சாந்தகுமாரி, ரஞ்சினி (பிரான்ஸ்), வசந்தி (லண்டன்), சிவயோகேஸ்வரன் (பிரான்ஸ்), சண்முகநாதன், திருக்குமார் (பிரானஸ்), சுதா (இத்தாலி), சிவனாந்தன் (ஜேர்மனி), யோகராணி ஆகியோரின் மைத்துனரும் சிறிதரனின் சகலனும் ரஜீவன் (சப்பிரகமுவ பல்கலைக்கழகம்), விதுனா, சோபனா (கொக்குவில் இந்துக்கல்லூரி, உயர்தரம்) ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.07.2017) செவ்வாய்க்கிழமை பி.ப. 2.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கலட்டி லேன்,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். 077 418 6912

தகவல்:
குடும்பத்தினர்.

# பதவி வெற்றிடம்

**யாழ். நகரில் இயங்கிவரும் தனியார் உயர் கல்வி நிறுவனத்தில் பணியாற்றக்கூடிய வகையில் கீழ்வரும் வெற்றிடங்களுக்கு நாளை (26.07.2017) புதன்கிழமை காலை 10 மணிக்கு நேர்முகத் தேர்வு நடைபெறும்.**

ஆண், பெண் இருபாலாரும் நேர் முகத்தேர்வில் நேரடியாக கலந்து கொள்ளமுடியும்.

- வரவேற்பாளர் (Receptionist)
- அலுவலக உதவியாளர் (Office Assitant)

**குறிப்பு :**

**பிறப்புச்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, கடவுச் சீட்டு அளவு வர்ணப்புகைப்படம், கல்விச்சான்றிதழ்கள், தொழில் அனுபவச்சான்றிதழ் என்பவற்றுடன் நேரில் சமுகம் தரவும்.**


BRC
BRITISH ROYAL COLLEGE

British Royal Collage
No. 267, Power house Road,
Jaffna.

## மரண அறிவித்தல்

### கந்தையா சின்னராசா

(ஓய்வுபெற்ற தபால் ஊழியர், சண்டிலிப்பாய் உப தபாலகம்)



பிறப்பு 14.01.1933 இறப்பு 23.07.2017

சண்டிலிப்பாய்வடக்கு, சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சின்னராசா கடந்த (23.07.2017) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை, இராசம்மா, சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரவீந்திரராஜன் (தபாலகம் சண்டிலிப்பாய்), மோகனராஜன் (லண்டன்), விமலராஜன், சுமதி, வசந்தி, துஸ்யந்தி (சுவிஸ்), நவராஜன் (ஜேர்மனி), கருணராஜன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இந்திரகுமார் (யுதுஸ்ரோர்ஸ் சண்டிலிப்பாய்), மனோகரன் (மனோகரன்ஸ்ரோர்ஸ் மாகியப்பிட்டி), மோகானந்தன் (சுவிஸ்), லதா, தயாநிதி (லண்டன்), நளினா (ஜேர்மனி), மலர்மதி, தேவாம்பிகை (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும் நிரோஜன், நிலானி, நஜீவன், கேசிகன், கேசிகா, அகநிலா, அகவிழி, அக்கனி, ஜினிதன், யதுர்சன், வகிதா, மனோஜா, நிசானா, துர்க்கா, சரணியா, கௌசிகன், சகானா, ஆரணியன், அனுஸ்கா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.07.2017) புதன் கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
077 326 5104 குடும்பத்தினர்.

## பனை அபிவிருத்திச் சபை
## பெக்கோ இயந்திரம்
## வாடகைக்கு வழங்குதல்

பனை அபிவிருத்திச் சபையின் பாவனையிலுள்ள பெக்கோ இயந்திரம் வாடகைக்கு விடப்படும். இவ்வியந்திரத்துக்கான சாரதி, போக்குவரத்து மற்றும் எரிபொருள் செலவு உள்ளடங்கலாக மணித்தியாலயத்துக்கு ரூபா 2500/- (இரண்டாயிரத்து ஐநூறு) மட்டும் அறவிடப்படும்.

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-**

**தலைவர், பனை அபிவிருத்திச்சபை,**
**தேசிய வீடமைப்புச் செயலகம்,**
**கண்டிவீதி, யாழ்ப்பாணம்.**

## கண்ணீர் அஞ்சலி

எமது நலன்புரி சங்க உறுப்பினர் **தி. ஜெயக்குமார்** அவர்களின் அன்புத் தந்தையார்

**நவரத்தினம் திருநாமச்சந்திரன்**
**(கைதடி கிழக்கு கைதடி)**

அவர்களது மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**சாவகச்சேரி பிரதேச சபை ஊழியர் நலன்புரி சங்கம்**
**கொடிகாமம்**

## மரண அறிவித்தல்கள்

திருமதி

**வின்ஸ்ரன் ஸ்டனிஸ்லஸ் றீற்றா ஜெசி (பபா)**



மண்ணில் 20.10.1954 — விண்ணில் 24.07.2017

ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும், இல.16, றக்கா ஒழுங்கை யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வின்ஸ்ரன் ஸ்டனிஸ்லஸ் றீற்றா ஜெசி (பபா) நேற்று (24.07.2017) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வின்சன் ஜெரோல்ட் ஹெலன் - திரேசா லீலாவதி தம்பதியரின் அன்புமகளும் வின்ஸ்ரன் ஸ்ரனீஸ்லஸின் அன்புமனைவியும் டொமிற்றிலா, டொறன்சி ஆகியோரின் அன்புத் தாயும் றொசிற்றா ஜெஸ்மின் (அமெரிக்கா), றோய்ஜெவ்றி (பொறியியலாளர், RDA மன்னார்), றோமியோ பிறின்ஸ் (பிரான்ஸ்), றெயினோல்ட் (லண்டன்), றெமியியஸ் (பிரான்ஸ்), றுவினா ஜெசிக்கா ஜெனிவ்வர் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச்சகோதரியும் தங்கராஜா, செல்வி, ரதி, ஜெயந்தி, தேவி காலஞ்சென்ற பிறேமக்குமாரன் மற்றும் யூட்பிராங்கிவின் ஆகியோரின் அன்புமைத்துனியும் ரவிக்குமார், வினோத் ஆகியோரின் மாமியும் யூட்றொபின்சன், றொபினா, அஷ்வின்ஜெவோரியன் ஆகியோரின் பேர்த்தியும் மரியநாயகத்தின் மருமகளும் ரஞ்சிதராணியின் பெறாமகளும் ஆவார்.


அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று (25.07.2017) செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணிக்கு புனித திரேசம்மாள் ஆலயத்தில் நடைபெறும் இரங்கல் திருப்பலியுடன் யாழ். புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.16, றக்கா லேன்,**
**சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். 021 222 4518**

தகவல்: குடும்பத்தினர்.

## சூசைப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை

**(முன்னாள் இ.போ.ச சாரதி)**



யாழ். மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் முல்லைத்தீவு சிலாவத்தை, யாழ். ஈச்சமோட்டையை தற்காலிக வசிப்பிடமாகவும், தற்போது 37/3, இரண்டாவது விதானையார் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பா ணத்தை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட சூசைப்பிள்ளை (ஞானமுத்து) அந்தோனிப்பிள்ளை கடந்த (21.07.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை (ஞானமுத்து) - ஆனாசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லத்தம்பி - அக்கினேஸ் தம்பதிகளின் அன்பு மருமகனும் பொலின் வயலெற் (பவுலின்) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மரியநாயகம் (குணரட்ணம்) மற்றும் மேரி (இராசாத்தி, லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான மேரி ஜசிந்தா, N.யோசப் (முன்னாள் இ.போ.ச. சாரதி), அவர்களின் மைத்துனரும் யூடி அனோமா விஜிதா (ஆசிரியை, யா/சென் மேரிஸ் வித்தியாலயம்), ஜரிஸ் சேவியர் ஞானேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அன்ரன் செல்வநாயகம் (அதிபர், நாவாந்துறைறோ. க. வித்தி.), பிரதீபா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அஷ்லின், ஏஞ்ஜெலின், பூர்விதா ஆகியோரின் அன்புபேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க திருப்பலி இன்று (25.07.2017) செவ்வாய்க் கிழமை பி.ப.3.00 மணிக்கு யாழ். பாண்டியன்தாழ்வு புனித அன்னாள் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு அவரது உடல் மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பின் புனித நீக்கிலார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**37/3, 2 ஆவது விதானையார் ஒழுங்கை,**
**சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.**

தகவல்: குடும்பத்தினர்.
0033651689682 - மகன்-பிரான்ஸ்
0777989200 - மருமகன்

## யாழ்ப்பாணம் மாநகரசபை

**நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ கால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி அறிவித்தல் - 2017**

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ கால தற்காலிக கடைகள் அமைப்பதற்கான நிலையங்களை குத்தகைக்கு வழங்குதற்கான மீள்கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் 25.07.2017 - 28.07.2017 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிவரை விநியோகிக்கப்படும். 28.07.2017 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிவரை படிவங்கள் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு பிற்பகல் 2.30 மணிக்கு கேள்விப்படிவங்கள் திறக்கப்படும்.

மேலதிக விவரங்கள் மற்றும் நிபந்தனைகளை மாநகரசபை, நானாவித இறைவரிப்பகுதியில் பெற்றுக்கொள்வதுடன் வரை படத்தையும் பார்வையிடலாம்.

**கேள்விச்சபையின் முடிவே இறுதியானது.**

**பொ.வாகீசன்**
**ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

## ஈராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 24 07 1981 — மறைவு 15 08 2015



**சந்திரலிங்கம் சுதர்சன்**

திதி : துதியை

முதல்முதலாய் எங்கள் குடும்பத்திற்கு வந்துதித்த 25.07.2017 இன்று ஈராண்டு ஆகியும் எங்கள் இதயம் பிரிவைத் தாங்காது தவிக்கின்றது. என் செய்வோம் இப்புவியில் அவர் நினைவால்தான் இனிமேல் வாழ்வோம். அவரின் ஆத்மா சாந்தி அடைய வேண்டுமென்று பிரார்த்திக்கின்றோம்.

பக்கஸ் லேன்,
உடுவில் றோட், மானிப்பாய்.

குடும்பத்தினர்.

## வாடகைக்குண்டு

வெள்ளவத்தையில் 42 ஆம் வீதியில் இரண்டு அறைகளுடன் (AC/NonAC) கூடிய தொடர்மாடி வீடு நாள், கிழமை, மாத வாடகைக்குண்டு.
**தொடர்பு-077 837 8597**

## கடை வாடகைக்கு உண்டு

இரண்டு பெரிய கடை வாடகைக்கு உண்டு. கடைக்கு தனியான கார் பார்க் வசதி உண்டு. வாகன தரிப்பிட வசதி உண்டு.
**தொடர்புகளுக்கு - 076 785 1067**

## காணி விற்பனைக்கு

கே. கே. எஸ். வீதியில் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்திற்கு முன்பாக 9 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
**தொடர்பு-077 614 6451.**

## பணிப்பெண் தேவை

வயோதிபப் பெண் ஒருவரைப் பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை. உரும்பிராய் பகுதியை அண்மித்தவர் விரும்பத்தக்கது.
**075 297 9497**

## வீடு விற்பனைக்குண்டு

**சுண்டிக்குளி பாடசாலைக்கு அருகில் (300m) இரண்டு படுக்கை அறை, இரண்டு குளியல் அறைகளுடன் வீடு விற்பனைக்குண்டு.**
தொடர்புகளுக்கு - 071 6949 179

## பணியாளர்கள் தேவை

**பிரபல்யமான உல்லாசப்பயணிகள் விடுதிக்கு கீழ்வரும் பணியாளர்கள் தேவையாக உள்ளது.**

I. சமையலாளர்
II. சாரதி
III. தோட்டவேலை
IV. சிட்டை எழுதுநர்


**தங்கியிருந்து வேலை செய்வோர் விரும்பத்தக்கது. மிகுதி நேரில் இன்று காலை (25.07.2017) நேரில் வரவும்**

**தொ.பேசி இலக்கம்**
**021 222 5876**
**077 601 6310**


**76/60, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.**

## வெலிக்கடைச் சிறைப் படுகொலையின் 34 ஆவது ஆண்டு நினைவேந்தல்

**ஜூலை 25, ஜூலை 27** — **தமிழ்த் தேசிய வீரர்கள் தினம் - ஜூலை 25**



தளபதி
**குட்டிமணி**



ஆரம்பகாலத் தலைவர்
**தங்கத்துரை**



முன்னணிப் போராளி
**ஜெகன்**

கொழும்பு, வெலிக்கடைச் சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன், நடேசுதாசன், தேவன், சிவபாதம், குமார், சிறீகுமார், குமாரகுலசிங்கம், மரியாம்பிள்ளை உட்பட 53 போராளிகளுக்கும் இதுவரை போராட்டத்தில் கொல்லப்பட்ட தலைவர்கள் வீரமறவர்கள், மாவீரர்கள், தியாகிகள், வீரமக்கள் உட்பட இனப்படுகொலை செய்யப்பட்ட அத்தனை தமிழ் மக்களுக்கும் தமிழ்தேசிய வீரர்கள் தினத்தில் எமது வீரவணக்கம்.

**தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ)**

25.07.2017 யாழ்ப்பாணம் நல்லூரில் தியாகி திலீபன் நினைவிடத்தில் பி.ப. 5 மணிக்கு நினைவு நிகழ்ச்சி.

26.07.2017 திருகோணமலை வெலிக்கடை வீரமறவர்களின் நினைவு திறந்த வெளியரங்கில் பி.ப. 5.00 மணிக்கு நினைவு நிகழ்ச்சி

27.07.2017 மட்டக்களப்பு நகரில் பி.ப. 5.00 மணிக்கு நினைவுப் பொதுக்கூட்டம்.

**விளம்பர அனுசரணை :-**

எம்.கே.சிவாஜிலிங்கம்,
வடக்கு மாகாணசபை உறுப்பினர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்,
வல்வெட்டித்துறை நகர சபையின் முன்னாள் தலைவர்.

## பகுப்பாய்வுக்கு...

இருக் கவில்லை. சந்தேகநபரிடமிருந்து மீட்கப்பட்ட நீள (ஜீன்ஸ்) காற்சட்டையில் இருந்த குருதி மாதிரி சிவலோகநாதன் வித்தியாவின் குருதி மாதிரியுடன் ஒத்துப்போகவில்லை" என்று அரச இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்தின் மூத்த அதிகாரி தீர்ப்பாயத்திடம் நேற்றுச் சாட்சியமளித்தார்.

புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியா 2015ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி கூட்டு வன்புணர்வின் பின் கோரமாகக் கொலை செய்யப்பட்டார். இந்தக் கொடூரச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் 3 மேல் நீதிமன்ற நீதிபதிகள் அடங்கிய தீர்ப்பாயம் (ட்ரயல் அட் பார்) முன்னிலையில் இடம்பெற்று வருகிறது.

மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தலைமையில் மேல் நீதிமன்ற நீதிபதிகள் அன்னலிங்கம் பிரேமசங்கர், மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஆகியோர் அடங்கிய தீர்ப்பாயம் நேற்றுக் காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகத்தின் 2ஆவது மாடியிலுள்ள திறந்த மன்றில் கூடியது.

வழக்குத் தொடுநர் சார்பில் பிரதி மன்றாடியார் அதிபதி பி. குமாரரட்ணம் தலைமையில் அரச சட்டவாதிகள் நாகரத்தினம் நிஷாந்த், லக்சி டீ சில்வா மற்றும் மாதினி விக்னேஸ்வ ரன் ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர்.

எதிரிகள் சார்பில் 6 சட்டத்தரணிகள் முன்னிலை.

1ம் ,2ம் , 3ம் , 6ம் மற்றும் 8ஆம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி மகிந்த ஜெயவர்த்தன , எம். என். நிஷாம் மற்றும் சட்டத்தரணி லியனகே ஆகியோரும் 5ஆம் எதிரியின் சார்பில் சட்டத்தரணி ஆறுமுகம் ரகுபதியும் 4ஆம், 7ம் , மற்றும் 9ஆம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி சின்னராசா கேதீஸ்வரன் ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர். அத்துடன் ஒன்று தொடக்கம் 9 வரையான எதிரிகள் சார்பில் தீர்ப்பாயத்தால் நியமிக்கப்பட்ட சட்டத்தரணி விக்னேஸ்வரன் ஜெயந்தாவும் முன்னிலையானார்.

9 எதிரிகளான பூபாலசிங்கம் இந்திரகுமார், பூபாலசிங்கம் ஜெயக்குமார், பூபாலசிங்கம் தவக்குமார் , மகாலிங்கம் சசிதரன் , தில்லைநாதன் சந்திரகாசன் , சிவதேவன் துஷாந்த் , பழனி ரூபசிங்கம் குகநாதன் , ஜெயதரன் கோகிலன் , மற்றும் மகாலிங்கம் சசிக்குமார் ஆகியோர் மன்றில் முற்படுத்தப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து , வழக்கின் 49ஆவது சாட்சியான ஊர்காவற்றுறை நீதிமன்ற மாவட்ட நீதிபதியும் நீதிவானுமான ஏ.எம். எம். றியால் சாட்சியமளித்தார்.

ஊர்காவற்றுறை நீதிமன்ற மாவட்ட நீதிபதியும் , நீதிவானுமாக கடந்த 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் கடமையாற்றி வருகின்றேன்.

புங்குடுதீவு மாணவி கொலை வழக்குத் தொடர்பில் சாட்சியங்கள் வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளேன். புங்குடுதீவைச் சேர்ந்த நடராஜா புவனேஸ்வரன் என்பவரின் வாக்குமூலத்தை 2016ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1ஆம் திகதி பதிவு செய்தேன்.

இந்த வழக்குடன் தொடர்புடையவர் என 2016ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3ஆம் திகதி உதயசூரியன் சுரேஷ்கரன் என்பவரை எனது உத்தியோகபூர்வ இல்லத்தில் குற்றப் புலனாய்வு பிரிவினர் முற்படுத்தினார்கள். அதனை அடுத்து சுரேஷ்கரனை 2016ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டேன்.

பின்னர் 8ஆம் திகதி மீண்டும் சுரேஷ்கரன் நீதிமன்றில் என் முன்னிலையில் சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் முற்படுத்தப்பட்ட போது, அவரது வாக்குமூலத்தை எனது சமாதான அறையில் வைத்துப் பதிவு செய்தேன்.

அதன் பின்னர் 2016ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 29ஆம் திகதி இலங்கேஸ்வரன் என்வரின் வாக்கு மூலத்தைப் பதிவு செய்தேன். பாலசிங்கம் பாலசந்திரன் என்பவரினது வாக்குமூலத்தை 2016ஆம் ஆண்டு மே மாதம் 10ஆம் திகதி பதிவு செய்தேன்.

இந்த வழக்கில் 11ஆவது சந்தேகநபரான உதயசூரியன் சுரேஷ்கரன் என்பவர் நிபந்தனைகளுடன் கூடிய மன்னிப்பு வழங்கப்படுவதாக சட்டமா அதிபர் திணைக்களம் வழங்கிய உறுதியை அடுத்து, அவர் அரச சாட்சியாக மாறுவதற்கு சம்மதித்திருந்தார்.

அது தொடர்பில் அவரது சத்தியக் கடதாசியுடன் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆவணங்கள் கடந்த பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி மன்றுக்கு அனுப்பப்பட்டிருந்தது. அதனை மன்று, உரத்த குரலில் சுரேஷ்கரனுக்கு விளங்கிப் புரிந்து கொள்ள கூடிய தமிழ் மொழியில் வாசித்துக் காட்டியது.

பின்னர் அதனை விளங்கிக் கொண்டீரா? என மன்று அவரிடம் வினாவியது. அவர் தான் விளங்கி கொண்டேன் என தெரிவித்ததை அடுத்து அவரது கையொப்பத்தை சத்திய கடதாசியில் பெற்றுகொண்டேன்" என்று ஊர்காவற்றுறை நீதிவான் சாட்சியமளித்திருந்தார்.

நீதிவான் சாட்சியமளிக்கும் போது, தீர்ப்பாயத்தின் மூல வழக்கேட்டில் பாலசிங்கம் பாலசந்திரன் ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் வழங்கிய வாக்குமூலத்தின் மூலப் பிரதி இணைக்கப்பட்டிருக்கவில்லை.

நீதிவானால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட வாக்குமூலத்தின் பிரதியைப் பார்த்தும் , நீதிமன்ற நாட்குறிப்பைப் பார்த்துமே நீதிவான் தீர்ப்பாயத்திடம் சாட்சியமளித்தார்.-

அதற்கு எதிரிகள் தரப்பு சட்டத்தரணி மகிந்த ஜெயவர்த்தன கடும் ஆட்சேபனையைத் தெரிவித்தார்.

நீதிவானின் சாட்சியம் தீர்ப்பாயத்தால் முடிவுறுத்தப்பட்டு சாட்சி விடுவிக்கப்பட்டார். அடுத்த சாட்சியப் பதிவுகள் ஆரம்பமாகின. அந்த நிலையில் பாலசிங்கம் பாலச்சந்திரன் என்பவரின் வாக்குமூலத்தின் மூலப் பிரதி நீதிமன்றப் பாதுகாப்பிலிருந்து எடுக்கப்பட்டது.

அதனை அடுத்து மன்றில் சாட்சியமளித்த சாட்சியம் இடை நடுவில் நிறுத்தப்பட்டு மீண்டும் நீதிவான் சாட்சி கூண்டில் ஏறி சத்தியம் செய்து பாலசிங்கம் பாலசந்திரனின் வாக்குமூலத்தின் மூலப் பிரதியைப் பார்த்து மன்றில் சாட்சிமளித்தார்.

அதனை தொடர்ந்து அந்த வாக்குமூலத்தின் மூலப் பிரதி தீர்ப்பாயத்தின் மூல வழக்கேட்டுடன் இணைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து நீதிவான் சாட்சி மன்றினால் முடிவுறுத்தப்பட்டு சாட்சி விடுவிக்கப்பட்டது.

வழக்கின் 52ஆவது சாட்சியான அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்தின் மூத்த அதிகாரி வனிதா ஜெயவர்த்தன பண்டரநாயக்க சாட்சியமளித்தார்.

"நான் கடந்த 23 வருடங்களாக அங்கு பணியாற்றி வருகிறேன். இரசாயன பகுப்பாய்வு தொடர்பில் பட்டப்படிப்புக்களை முடித்துள்ளேன். இந்த வழக்குத் தொடர்பில் , குருதி, விந்தணு மற்றும் உரோமம் ஆகியவை தொடர்பில் பகுப்பாய்வுகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பித்துள்ளேன்.

எமக்கு மூன்று கட்டங்களாக சான்றுப் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டன. முதலில் 2015ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி , ஜூன் மாதம் 15ஆம் திகதி , ஜூலை மாதம் 5ஆம் திகதி ஆகிய திகதிகளில் சான்றுப் பொருள்கள் எமக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அதில் 36 சான்று பொருள்கள் காணப்பட்டன. 6 உரோமங்கள் , பாடசாலைச் சீருடை , சப்பாத்து , தலைப்பட்டி , கழுத்துப் பட்டி , பெண்களின் உள் ஆடைகள் , காலுறைகள் , குருதி மாதிரி , பெண் உறுப்பில் இருந்து மீட்கப்பட்ட திரவம் , விந்து, 2 ரீசேர்ட், 1 சேர்ட், 1 ஜீன்ஸ் , 1 அரைக்காற்சட்டை , நகங்கள் , பூபாலசிங்கம் இந்திரகுமார், பூபாலசிங்கம் ஜெயக்குமார், பூபாலசிங்கம் தவக்குமார் , மகாலிங்கம் சசிதரன் , தில்லைநாதன் சந்திரகாசன் , சிவதேவன் துஷாந்த் , பழனி ரூபசிங்கம் குகநாதன் , ஜெயதரன் கோகிலன் , மற்றும் மகாலிங்கம் சசிக்குமார் ஆகியோரின் குருதி மாதிரிகள் என்பன பகுப்பாய்வுக்காக அனுப்பி வைக்கப்பட்டன.

அதில் 1 தொடக்கம் 6 வரையிலான உரோமங்களை பகுப்பாய்வு செய்து கண்டறிய முடியவில்லை. ஏனெனில் அவற்றில் வேர்கள் இருக்கவில்லை. அதனை நுணுக்குகாட்டி ஊடாக பரிசோதித்தும் அதனை அடையாளம் காண முடியவில்லை. அது தொடர்பில் குற்றபுலனாய்வு துறையினருக்கு தெரியப்படுத்தினோம். விந்துகளை ஆய்வுக்கு உட்படுத்திய போதிலும் அவையும் கண்டறிய முடியவில்லை. அது அடையாளம் காணக் கூடிய நிலமையில் இருக்கவில்லை.

பாடசாலைச் சீருடையில் இருந்த குருதியும் , பெண்ணுறுப்பில் இருந்து மீட்கப்பட்ட திரவமும் சிவலோகநாதன் வித்தியாவினுடையது என அடையாளம் காண முடிந்தது. அதே வேளை நீள (ஜீன்ஸ்) காற்சட்டையில் இருந்த குருதி மாதிரி சிவலோகநாதன் வித்தியாவின் குருதி மாதிரியுடன் ஒத்துப்போகவில்லை" என்று அரச இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்தின் மூத்த அதிகாரி சாட்சியமளித்தார்.

அதனை தொடர்ந்து அவர் வழக்கில் இருந்து விடுவிக்கபட்டடார்.

இந்த வழக்கின் 35ஆவது சாட்சியும் முதன்மை விசாரணை அதிகாரியுமான குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த சில்வா சாட்சியமளித்தார். அவர் தனது சாட்சியத்தில்,

குற்றபுலனாய்வு திணைக்களத்தில் பொலிஸ் பரிசோதகராக கடமையாற்று கிறேன். கடந்த 2015ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி இரவு, "யாழ்ப்பாணத்தில் பாடசாலை மாணவி ஒருவர் வன்புணர்வுக்கு உட்படுத்தி படுகொலை செய்யப்பட்டுள்ளார். அது தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுக்க பொலிஸ் குழு ஒன்றுடன் யாழ்ப்பாணம் செல்லுமாறு பணிப்பாளர் பணித்தார்" என்று உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் திசேர எனக்கு தொலைபேசி மூலமாகக் கூறினார்.

அதனை அடுத்து நான் மறுநாள் காலை கொழும்பிலிருந்து எனது பொலிஸ் குழுவுடன் புறப்பட்டு மதியம் யாழ்ப்பாணம் வந்திருந்தேன். அப்போது யாழ்ப்பாணத்தில் கலவரங்கள் நடந்திருந்தன. கலகம் அடக்கும் பொலிஸார், பொலிஸ் சிறப்பு அதிரடி படையினர் ஆகியோர் வீதிகளில் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையம் வந்த பின்னர் அறிந்து கொண்டேன் , நீதிமன்றக் கட்டத் தொகுதி , சிறைச்சாலை வாகனம் உள்ளிட்டவை மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டு அரச சொத்துக்கள் சேதமாக்கப்பட்டன என்று.

எனது விசாரணையின் நோக்கமாக இரு முக்கிய விடயங்கள் இருந்தன. ஒன்று மாணவி கடத்தப்பட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு , படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுதல் , மற்றையது முக்கிய சந்தேகநபர் பொலிஸ் நிலையத்திலிருந்து விடுவிக்கப்பட்டமை தொடர்பிலான விசாரணை.

மாணவி கொலை தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுக்க ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்துக்கு தற்சமயம் வருவது பாதுகாப்பில்லை எனவும் அங்கு நிலமை அசாதாரணமாக இருப்பதாகவும் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கூறினார்.

அதனால் அன்றைய தினம் (20 ஆம் திகதி) சந்தேகநபர் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்திலிருந்து விடுவிக்கப்பட்டமை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கத் தொடங்கினேன். அந்த சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸ் அதிகாரிகள் , உத்தியோகத்தர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டு அவர்களின் வாக்குமூலங்களைப் பெற்றுக்கொண்டேன்.

யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்திலிருந்து விடுவிக்கப்பட்ட சந்தேகநபரை வெள்ளவத்தையில் வைத்து வெள்ளவத்தை பொலிஸார் கைது செய்து 21ஆம் திகதி அதிகாலை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தினார்கள்.

சுவிஸ்குமாரிடம் அதிகாலை 3 மணி முதல் காலை 9 மணி வரையில் விசாரணைகளை முன்னெடுத்து வாக்குமூலத்தைப் பெற்றுக் கொண்டேன். பின்னர் அப்போதைய கொடிகாமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி குறித்த சுவிஸ் குமாரை ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் முற்படுத்தினார்.

அன்றைய தினம் (21ஆம் திகதி) நாம் ஊர்காவற்றுறைக்கு சென்று கொலை செய்யப்பட்ட மாணவியின் தாய், சகோதரர்கள் ஆகியோரிடம் வாக்குமூலங்களைப் பெற்றோம். பின்னர் மறுநாள் (22ஆம் திகதி) ஊர்காவற்றுறை சென்று குற்றச் சம்பவம் இடம்பெற்ற பகுதியைச் சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் அவதானித்தோம். .

இந்தச் குற்றச்செயல் கலகம் ஒன்றை ஏற்படுத்தும் எண்ணத்துடன் செய்யப்பட்டது போன்று எமது விசாரணைகளில் தெரிய வந்தது. குற்றச்செயல் இடம்பெற்ற பகுதிக்கு அருகில் கடற்படை முகாம் ஒன்று அமைந்திருந்தது. அதனால் கடற்படையினருடன் தொடர்பு படுத்தி , கலகத்தை உண்டாக்கும் உள்நோக்கம் கொண்டதாகவும் , நாட்டின் நற்பெயருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தவுமே இந்தக் குற்றச் செயல் புரிந்ததாக சந்தேகம் ஏற்பட்டது.

சந்தேகநபர்களை எமது தடுப்புக் காவலில் எடுத்து அது தொடர்பில் விசாரணைகளைச் செய்வதற்கு ஏதுவாக பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் உத்தரவு வழங்க வேண்டும் என பாதுகாப்பு அமைச்சர் எனும் ரீதியில் அரச தலைவரிடம் கோரினோம். 2016ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12ஆம் திகதி முதல் ஜூலை மாதம் 12ஆம் திகதி வரையான 30 நாட்களுக்கு சந்தேகநபர்களைத் தடுப்புக் காவலில் வைக்க அரச தலைவர் அனுமதி வழங்கினார். பின்னர் மீண்டும் மேலும் 30 நாட்களுக்கு அனுமதி பெற்று சந்தேகநபர்களை சிறைச்சாலையிலிருந்து எமது கட்டுப்பாட்டுக்கு எடுத்து தடுப்பு காவலில் வைத்து விசாரணைகளை மேற்கொண்டோம்.

அதன்போது சந்தேகநபர்களிடம் பெற்ற வாக்குமூலத்தில் சிவதேவன் துஷந்த் என்பவரின் வாக்கு மூலத்தின் அடிப்படையில் மீண்டும் நாம் புங்குடுதீவுக்கு விசாரணைக்கு வந்தோம். அதன் போது துஷந்தையும் அழைத்து வந்தோம். அவரை எமது வாகனத்தில் மறைத்தே அழைத்துச் சென்றோம். அவரின் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவரது வீட்டுக்குச் சென்று அவரின் வீட்டில் உள்ள சீமெந்து கட்டு ஒன்றின் மேல் இருந்து மாணவியின் உடையது என சந்தேகிக்கக் கூடிய மூக்கு கண்ணாடி ஒன்றை மீட்டோம்.

அது சொப்பிங் பை ஒன்றுக்குள் வைத்து ஒரு பியாமாத் துணி ஒன்றால் சுற்றப்பட்ட நிலையில் மீட்டு இருந்தோம். அதனைத் தொடர்ந்து அந்த மூக்கு கண்ணாடி மாணவியின் உடையதா? என்பதை உறுதிப்படுத்த நாம் மாணவியின் வீட்டுக்குச் சென்று தாயாரிடம் விசாரணை செய்தோம்.

அதனை அடுத்து பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வாவின் சாட்சியத்தின் சாட்சி பதிவை இத்துடன் இடை நிறுத்திக் கொள்வதாகவும் , மிகுதி சாட்சியப் பதிவு எதிர்வரும் 2ஆம் திகதி தொடரும் என தீர்ப்பாயம் அறிவித்தது. (வ-12-37)

## தீர்ப்பாயத்தின்...

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியனின் மீதான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது உயிரிழந்த அவரது மெய்ப்பாதுகாவரின் இறுதிக் கிரியை நாளை புதன்கிழமை இடம்பெறுகிறது. அதனால் நாளை நடைபெறவிருந்த தீர்ப்பாயத்தின் அமர்வு நிறுத்தப்பட்டது.

இந்த நிலையில் வித்தியா படுகொலை வழக்கு விசாரணை எதிர்வரும் 2ஆம் திகதி புதன்கிழமை தீர்ப்பாயம் முன்னிலையில் மீண்டும் ஆரம்பமாகும். அன்று குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொலிஸ் பரிசோதகரின் சாட்சியம் தொடரும் என்று அறிவிக்கப்பட்டது.

இதேவேளை, நீதிபதி மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தையடுத்து யாழ்ப்பாணத்தில் நிலவும் அசாதாரண நிலை காரணமாக தீர்ப்பாயத்தின் அமர்வு நேற்று மாலை 4.45 மணியுடன் இடைநிறுத்தப்பட்டது.

தீர்ப்பாயத்தின் ஆரம்ப காலத்திலிருந்து சாட்சி ஒருவரிடம் சாட்சியம் பெற ஆரம்பித்தால் அவரின் சாட்சியம் முடிவுறுத்தப்படும் வரை அமர்வு இடம்பெறும். எனினும் நேற்றைய அமர்வில் சாட்சியிடம் முதன்மை விசாரணை இடம்பெறும் போதே சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு அமர்வு மாலை 4.45 மணியுடன் இடைநிறுத்தப்படுவதாக தீர்ப்பாயம் அறிவித்தது. (வ-37)

## கிளிநொச்சி...

பொதுச் சந்தையை மூடி எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று கிளிநொச்சி சேவைச் சந்தை வர்த்தக சங்கத்தினர் அறிவித்தனர்.

மேலும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை கண்டித்து கிளிநொச்சியிலுள்ள அனைத்து வர்த்தக நிலையங்களிலும் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டு உயிரிழந்த பொலிஸ் அதிகாரிக்கு அஞ்சலி செலுத்துமாறு கிளிநொச்சி வர்த்தக சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

"யாழ்ப்பாணம் நல்லூர் ஆலய வீதியில் கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இந்தச் சம்பவத்தில் நீதிபதியின் மெய்ப்பாதுகாவலர்கள் இருவர் காயமடைந்தனர். அவர்களில் சிகிச்சை பயனின்றி ஒருவர் உயிரிழந்திருந்தார்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தை கண்டித்தும், தாக்குதல் சம்பவத்தின் போது உயிரிழந்த மெய்பாதுகாப்பாளரான பொலிஸ் உத்தியோகத்தருக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையிலுமே இன்றையதினம் கிளிநொச்சி பொதுச் சந்தையை மூடி எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. கிளிநொச்சி சேவை சந்தையின் அனைத்து வியாபார நிலையங்களும் பூட்டப்பட்டு இந்த எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படும்" என கிளிநொச்சி சேவைச் சந்தை வர்த்தக சங்கத்தினர் மேலும் தெரிவித்தனர். (வ-21-35)




வலிகாமம் கால்பந்தாட்ட லீக் 'உதயன் செய்தியாளர்' நா.நவரட்ணராசாவின் ஞாபகார்த்தமாக நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் இரண்டாம் இடத்தைப் பெற்ற வேலணை துறையூர் ஐயனார் அணி. (ம-23)

## சென். மேரிஸ் அரையிறுதிக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 25

கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 61ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வட மாகாண ரீதியாக நடத்தப்படும் 'ஏ' பிரிவு அணியினருக்கான கரப்பந்தாட்டத்தொடரில் மன்னார் சென். மெரிஸ் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் கரப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணியும், மன்னார் சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியும் மோதின. முதல் இரு செற்களையும் முறையே 25:20, 25:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது சென். மேரிஸ்.

(ம-23)

## ஆலடிசிந்து 'பி' அபார ஆட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 25

கைதடி குமரநகர் விளையாட்டுக் கழகம் நடத்திய தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழக 'பி' அணி அபார வெற்றியைப் பதிவுசெய்தது.

குமரநகரின் கபடித் திடலில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழக 'பி' அணி மோதியது. ஆலடி சிந்து அணி 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

(ம-23)

## ஆலடிசிந்து 'ஏ' அரையிறுதியில்

யாழ்ப்பாணம், ஜூலை 25

கைதடி குமரநகர் விளையாட்டுக் கழகம் நடத்திய தாச்சித் தொடரில் 'ஏ' பிரிவு அணி களுக்கு இடையிலான ஆட்டத்தில் ஆலடிசிந்து 'ஏ' அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

குமரநகரின் கபடித் திடலில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெற்ற காலிறுதி ஆட்டத்தில் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக் கழக 'பி' அணி மோதியது. ஆலடி சிந்து விளையாட்டுக் கழக 'ஏ' அணி 8:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது.

(ம-23)

## யாழ்ப்பாணம் – காவலூர் இறுதியில் இன்று மோதல்

யாழ்ப்பாணம், ஜூலை 25

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் கிண்ணத்துக்கான பெண்கள் பிரிவு வலைப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் மாவட்ட செயலக அணியை எதிர்த்து ஊர்காவற்றுறை பிரதேச செயலக அணி இன்று மோதவுள்ளது.

அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் காலை 9 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. குறித்த கழக மைதானத்தில் நேற்று நடைபெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் மாவட்ட செயலக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி மோதியது. இதில் யாழ்ப்பாணம் மாவட்ட செயலக அணி 9:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

அடுத்து நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் ஊர்காவற்றுறை பிரதேச செயலக அணியை எதிர்த்து வேலணை பிரதேச செயலக அணி மோதியது. இதில் ஊர்காவற்றுறை பிரதேச செயலக அணி 8:7 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வென்று இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றுள்ளது. (ம-23-422)

## நயினாதீவு மத்தி. வென்றதுகிண்ணம்

யாழ்ப்பாணம், ஜூலை 25

அனலைதீவு லக்கி ஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்திய தீவகப் பிரதேச பதிவு செய்யப்பட்ட துடுப்பாட்ட அணிகளுக்கிடையிலான மென்பந்துத் தொடரில் நயினாதீவு மத்திய கிரிக்கட் அணி சம்பியனாகியது.

குறித்த கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் நயினாதீவு மத்திய கிரிக்கெட் அணியும் ஊர்காவற்றுறை தம்பாட்டி காந்திஜி கிரிக்கெட் அணியும் மோதின. நயினாதீவு மத்திய கிரிக்கெட் அணி வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியது. (ம-9)

# வலிகாமம் லீக் வீரர்களுக்கு நேற்றுமுன்தினம் கௌரவிப்பு




யாழ்ப்பாணம், ஜூலை 25

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்பட்ட 'உதயன் செய்தியாளர் நவரட்ணராசா' ஞாபகார்த்த கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் வைத்து வலிகாமம் பகுதியில் இருந்து தேசியமட்டக் கால்பந்தாட்டத் தொடர்களில் பங்கெடுத்த வீரர்கள், வீராங்கனைகள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. வலிகாமம் பகுதியிலிருந்து தேசியமட்டத் தொடர்களில் பங்கெடுத்தவர்களான வீரர் எஸ்.ஞானறூபன், சதீஸ்வரன், யூட்சுபன், மதுசன், பா.சாணு, சி.தார்மிகா, சு.கௌரி, எஸ்.கனிஸ்ரன், கே.றிதுசன், பா. றெக்சன், எஸ்.அன்ரனிராஜ், நே.அன்ரனி ரமேஸ், ஞா.கஜானன், வி. கஸ்றோ. ர.தனுசன் ஆகியோரே 16 வீரர்களே அவ்வாறு கௌரவிக்கப்பட்டனர். இவர்களை விட கால்பந்தாட்டப் பயிற்சியாளர் விஜயகுமார் டனிஸ்ரன், தனது 62ஆவது வயதிலும் தொடர்ந்து கால்பந்தாட்ட நடுவராகப் பணியாற்றிவரும் சிறிறஞ்சன் ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர். (ம-23)

## அரையிறுதியில் தெல்லிப்பழை

யாழ்ப்பாணம், ஜூலை 25

யாழ்ப்பாண மாவட்டச் செயலர் கிண்ணத்துக்கான கால்பந்தரட்டத் தொடரில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று மதியம் நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் நல்லூர் பிரதேச செயலக அணியும், தெல்லிப்பழை பிரதேச செயலக அணியும் மோதின. தெல்லிப்பழை பிரதேச செயலக அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

(ம)

# வேலணை பிரதேச செயலகம் அரையிறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஜூலை 25

யாழ்ப்பாண மாவட்டச் செயலர் வெற்றிக்கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் வேலனை பிரதேச செயலக அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று இடம்பெற்ற காலிறுதி ஆட்டமொன்றில் வேலணை பிரதேச செயலக அணியை எதிரத்து சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி மோதியது.

நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா 2 கோல்களைப் பதிவுசெய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 6:5 என்ற கோல் கணக்கில் வேலணைப் பிரதேச செயலக அணி வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

(ம-23)



# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 25

**குமரநகர் வி.க. தாச்சித் தொடர்**

கைதடி குமரநகர் விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக்கழக 'பி' அணியை எதிர்த்து சண்டிலிப்பாய வசந்தசிறி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**கால்பந்தாட்டம்**

அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்று காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட செயலக அணியை எதிர்த்து கரவெட்டி பிரதேச செயலக அணி மோதவுள்ளது. காலை 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊர்காவற்துறை பிரதேச செயலக அணியை எதிர்த்து காரைநகர் பிரதேச செயலக அணி மோதவுள்ளது. காலை 10.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சாவகச்



சேரி பிரதேச செயலக அணியை எதிர்த்து பருத்தித்துறை பிரதேச செயலக அணி மோதவுள்ளது. காலை 11.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுவில் பிரதேச செயலக அணியை எதிர்த்து மருதங்கேணி பிரதேச செயலக அணி மோதவுள்ளது.

**சரஸ்வதி வி.க. கரப்பந்தாட்டம்**

கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 61ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடக்கு மாகாண ரீதியாக நடத்தப்படும் 'ஏ' பிரிவு அணிகளுக்கான தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அச்சுவேலியுத் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை மத்திய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இந்த ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கொடிகாமம் கஜபாகு அணியை எதிர்த்து மோதவுள்ளது.

**திக்கம் மத்தியின் கால்பந்தாட்டம்**

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் வைர விழாவை முன்னிட்டு வடமாகாண ரீதியாக நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சிறி அம்பாள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அராலி ஜேம்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆதிசக்தி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

## பெண்கள் உலகக்கிண்ணம் வென்ற

# இங்கிலாந்து அணிக்கு பாராட்டுக்கள் குவிகின்றன




பெண்கள் உலகக்கிண்ணத் தொடரைக் கைப்பற்றிய இங்கிலாந்து அணிக்கு அந்த நாட்டின் தலைமை அமைச்சர் திரேசா மே, முன்னாள் வீரர்கள், இன்நாள் வீரர்கள், முன்னாள் வீராங்கனைகள் எனப் பல தரப்புக்களிடம் இருந்தும் பாராட்டுக்கள் குவிந்தவண்ணமுள்ளன.

லோட்ஸில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் இந்தியாவை வீழ்த்தி இங்கிலாந்து கிண்ணம் வென்றது. இந்த மகத்தான வெற்றியை அடுத்து பிரிட்டன் தலைமை அமைச்சர் திரேசா மே, தனது கீச்சகப் பக்கத்தில் 'என்ன ஒரு அற்புதமான வாரம். என்னவொரு மகத்தான வெற்றி. இங்கிலாந்து பெண்கள் கிரிக்கெட் அணியை வாழ்த்துகிறேன். உலகின் தலைசிறந்த அணியாக உருவெடுத்துள்ளமைக்கு வாழ்த்துக்கள்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

இங்கிலாந்து ஒருநாள் மற்றும் ரி-20 அணியின் தலைவர் மோர்கன், டெஸ்ட் தலைவர் ரூட், முன்னாள் அணித்தலைவரும் தற்போதைய நட்சத்திர வீரருமான அலிஸ்டர் குக், ஏனைய வீரர்கள் எனப் பலரும் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

இங்கிலாந்து கிரிக்கெட் சபையும் வாழ்த்துத் தெரிவித்துள்ளது. இங்கிலாந்து மட்டுமல்லாமல் ஏனைய கிரிக்கெட் சபைகளும் இங்கிலாந்து மகளிர் அணிக்கு தமது வாழ்த்தைத் தெரிவித்துள்ளன. (ம)


# டெஸ்ட் தொடர் நாளை ஆரம்பம்

இலங்கை -இந்திய அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் நாளை ஆரம்பமாகிறது.

இந்திய அணி இலங்கைக்குச் சுற்றுப்பயணம் செய்துள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் நாளை ஆரம்பமாகிறது. இரண்டாவது ஆட்டம் கொழும்பில் ஓகஸ்ட் 3ஆம் திகதியும், மூன்றாவது ஆட்டம் ஓகஸ்ட் 12ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

இந்திய அணி இறுதியாக இலங்கைக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியது. இதனால் இம்முறை இந்தியாவுக்குப் பதிலடி கொடுக்க வேண்டிய கட்டாயம் இலங்கைக்கு உள்ளது.

நாளைய ஆட்டத்தில் இலங்கை அணித்தலைவர் சந்திமல் களமிறங்கமாட்டார். இதனால் தலைவராக கேரத் செயற்படவுள்ளார். சந்திமல் இல்லாதமை இலங்கை அணிக்குப் பின்னடைவு என்று சொல்லப்படுகிறது. (ம)



# ராகுலுக்குக் கட்டாய ஓய்வு

இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையில் நாளை ஆரம்பமாகவுள்ள முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இருந்து விடுவிக்கப்பட்டார் இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் லோகெஸ் ராகுல். காயம் காரணமாக சுமார் மூன்று மாதங்களுக் கும் அதிகமான காலப்பகுதி ஓய்வில் இருந்தார் ராகுல். இதன் பின்னர் அவர் களமிறங்கும் முதலாவது தொடர் இதுவே. எனினும் இந்தத் தொடரில் அவர் காயத்தில் இருந்து முழுவதுமாக விடுபடாத நிலையே இருந்தது. எனவே அவருக்குக் கட்டாய ஓய்வு வழங்கப்பட்டுள்ளது. ராகுலின் விலகலால் தவான் களமிறங்க அதிக வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. (ம)



# இலங்கையின் டெஸ்ட் அணி

இந்திய அணிக்கு எதிராக நாளைய டெஸ்ட் ஆட்டத்துக்கான இலங்கை அணி நேற்றுமுன்தினம் அணிவிக்கப்பட்டது.

காய்ச்சல் காரணமாக இந்த ஆட்டத்தில் சந்திமல் பங்குபற்றமாட்டார் என்ற காரணத்தால் அவரின் இடத்தை, தனஞ்சய டி சில்வா எடுத்துக் கொள்கிறார். துஸ்மந்த சமீரவின் இடத்தில் நுவான் பிரதிப்பும், லக்சன் சண்டகனின் இடத்தில் மலிந்த புஸ்பகுமாரவும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இலங்கை அணி விவரம்- ரங்கன கேரத், உப்புல் தரங்க, திமுத் கருணாரத்ன, குசல் மெண்டிஸ், அஞ்சலோ மத்தியூஸ், அசல குணரட்ன, நிரோஷன் டிக்வெல்ல, தனஞ்சய டி சில்வா, தனுஷ்க குணதிலக, டில்ருவான் பெரேரா, சுரங்க லக்மல், லகிரு குமார, விஷ்வ பெர்ணான்டோ, மலிந்த புஷ்பகுமார, நுவான் பிரதீப். (ம)

# இந்திய அணிக்கு பல தரப்பிடமிருந்தும் ஆறுதல்கள்

பெண்கள் உலகக்கிண்ணத் தொடரில் இறுதியாட்டம் வரைக்கும் முன்னேறி கிண்ணத்தைத் தவறவிட்ட இந்திய அணிக்கு பல தரப்பிடம் இருந்தும் ஆறுதல்கள் வந்து குவிகின்றன.

லோட்ஸில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் ஓர் கட்டத்தில் இந்திய அணி வெற்றிபெறும் என்ற நிலையே இருந்தது. ஆனால் அந்த அணி சடுதியான சரிவைச் சந்தித்துத் தோல்வியடைந்தது. எனினும் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்ற அணி என்ற அடிப்படையில் இந்திய அணிக்கு பாராட்டுக்களும் ஆறுதல்களும் குவிந்துள்ளன.



இந்தியத் தலைமை அமைச்சர் மோடி, 'எம்முடைய கிரிக்கெட் வீராங்கனைகள் இன்று (நேற்றுமுன்தினம்) மிகவும் சிறப்பாக விளையாடினர்கள். இந்தத் தொடர் முழுவதும் அவர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள். இந்திய பெண்கள் அணியை நினைத்து பெருமை கொள்கிறேன்' என்று தனது கீச்சகப் பக்கத்தில் குறிப்பிட்டார்.

இந்திய அணியின் முன்னாள் தலைவரும் தற்போதைய நட்சத்திர வீரருமான டோனி, 'இந்திய அணியின் அபார ஆட்டத்துக்கு வாழ்த்துக்கள்' என்று குறிப்பிட்டார். டோனி மட்டுமல்லாமல் இந்திய அணித்தலைவர் கோக்லி உள்ளிட்ட பெரும்பாலான வீரர்கள் தமது வாழ்த்தைத் தெரிவித்தனர். சேவாக், சச்சின் ஆகியோர் இறுதியாட்டம் வரை முன்னேறியமைக்கு தமது வாழ்த்தையும் கிண்ணத்தைத் தவறவிட்டமைக்கு தமது ஆறுதலையும் தெரிவித்தனர்.

இறுதியாட்டம் வரை முன்னேறியமை 'பெரும் அடைவு' என்று குறிப்பிட்டுள்ள இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ஒவ்வொரு வீராங்கனைக்கும் தலா 50 லட்சம் ரூபாயை (இந்திய மதிப்பில்) பரிசுத் தொகையாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை**
**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்**
**வெளிவாரிப் பரீட்சைகள்**
**கலைமாணி பகுதி - 1 - 2014 ( பழைய பாடத்திட்டம்)**

மேற்படி பரீட்சைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப் பரீட்சைகளுக்கு தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா 300/= இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் சமர்ப்பித்து விண்ணப்பப்படிவத்தினை பெற்றுக் கொள்ளலாம்.
தபால் மூலம் விண்ணப்பப்படிவத்தினைப் பெற விரும்புவோர் நிதியாளர் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 300/= க்கான காசுக்கட்டளை தபாற் கட்டளையை சுயமுகவரியிடப்பட்ட ரூபா 70/= பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28 X 20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

**குறிப்பு:**
**இப்பரீட்சையானது இரு தடவைகள் மாத்திரம் (2017, 2018 ஆம் ஆண்டு வரை) நடைபெறும் என்பதை கவனத்திற்கொள்க.**
**மேற்படி பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வதற்கான இறுதித்திகதி 11.08.2017 வெள்ளிக்கிழமை ஆகும்.**
**பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் விவரங்கள் பின்னர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும்.**
**மேலதிக விவரங்களை பெற விரும்புவோர்** www.codl.jfn.ac.lk **என்ற இணையத்தள முகவரியினூடாகவும் 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.**


24.07.2017

**பதிவாளர்.**


# இறுதியில் அமெரிக்கா

கொன்ககாப் தங்கக்கிண்ண கால்பந்தாட்டத் தொடரின் இறுதி ஆட்டத்துக்கு அமெரிக்க அணி தகுதி பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் அமெரிக்காவை எதிர்த்து கொஸ்டறிக்கா மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது அமெரிக்கா. 72ஆவது மற்றும் 82ஆவது நிமிடங்களில் டேம்ஸே இந்தக் கோல்களைப் பதிவுசெய்தார். (ம)






**SPOKEN ENGLISH**
**WITH DIPLOMA CERTIFICATE**

O/L, A/L எழுதியோர், இளைஞர், யுவதிகள்,
வெளிநாடு செல்வோர், தொழில்புரிவோர் இணையமுடியும்

சனி,ஞாயிறு பயிற்சி ஆரம்பம் : 29.07.2017

பிரிவு 1 : காலை 08.00-10.00 பிரிவு 2 : மு.ப 10.00-12.00
பிரிவு 3 : பி.ப 01.00-03.00 பிரிவு 4 : மாலை 03.00-05.00

வாரநாள் பிரிவுகள் (செவ்வாய் மற்றும் வியாழன்) 01.08.2017
1. காலை : 08-10 2. காலை: 10-12

அடிப்படைஆங்கிலஅறிவில்லாதவர்களும் மூன்றேமாதங்களில் தமிழ்போல சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியும்!

SAAMSON
Experts in English Training


403, மணிக்கூட்டு வீதி
(பெருமாள்கோயில் அருகில்)
யாழ்நகர்.

077 1570 486
021 320 3313


## மரண அறிவித்தல்

# நவரத்தினம் திருநாமச்சந்திரன்

*(ஓய்வுபெற்ற சாவகச்சேரி பிரதேசசபை ஊழியர் )*



கைதடி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் திருநாமச்சந்திரன் (ஓய்வுபெற்ற சாவகச்சேரி பிரதேச சபை ஊழியர்) கடந்த (23.07.2017) ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் சின்னாச்சிப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற தவமணியின் அன்புக் கணவரும் ஜெயதரன், ஜெயக்குமார் (சாவகச்சேரி பிரதேசசபை ஊழியர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அபிராமி, சுதர்சினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் புவசாந், தெனஸ்ருஜா, யதுராணன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள்இன்று(25.07.2017)செவ்வாய்க் கிழமை மு.ப. 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊற்றல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **குடும்பத்தினர்.**

## 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சிவசுப்பிரமணியம் மயூரன்**
(யாழ்.இந்துக் கல்லூரி உயிரியல் பிரிவு - 1999)

**தாயவள் கையில்**
**28.11.1980**

**காலனவன் கையில்**
**25.07.2005**

ஆளப்பிறந்த எம் குல மைந்தா - மயூரா!
ஆண்டுகள் பன்னிரண்டு கடந்துவிட்டோம் ஆனாலும்
நீ தான் எம்மை இன்னும் ஆள்கிறாய்

**24, ஆடியபாதம் வீதி,**
**கொக்குவில் கிழக்கு.**
**077 695 3779**

உன் பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்.**


## வேலைவாய்ப்பு

அனுபவம் வாய்ந்த தொழில்நுட்ப உத்தியோகத்தர், மேசன் மற்றும் கூலித் தொழிலாளர்கள் தேவைப்படுகிறார்கள்.
வேலை நடைபெறும் இடங்கள்.
யாழ்ப்பாணம்,கிளிநொச்சி,முல்லைத்தீவு
**தொடர்பு**-KBS Engineers,
**3ஆம் கட்டை கல்வியங்காடு,**
**பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.**
Ph- **021 223 1364,**
**077 353 8030**







இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.07.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.